12 பக்கங்கள் விலை 50 காசு

நம் நாடு

ஆசிரியர்: மு. கருணாநிதி

" NAM NADU " Official Organ of the D. M. K.

மலர் 1 | திருவள்ளுவர் ஆண்டு 2009 3—9—1978 | இதழ் 51

புனித ராஜ்யம்

கலைஞர் கருணாநிதி

காட்சி 8

(அண்ணுச்சி நொண்டி இருவரும் பேசிக்கொண்டு நடந்து கொண்டிருக்கிறார்கள்.)

நொண்டி: சொக்கியையும் வீட்டிலே காணவில்லை. இந்தஊரிலேயே எங்கும் இருப்பதாகத் தெரியவில்லை. அந்த சூப்பிரண்ட்டு சுந்தரத்தோடுதான் போயிருக்கிருள் என்பது ஊர்ஜிதமாகிவிட்டது.

அண்ணுச்சி; சுந்தரம்தான் வேலையையே ராஜினமா செய்துவிட்டானமே! இனிமேல் அவன் நம் காலில் மிதிபடும் பூச்சி புழுவுக்குச் சமம்!

நாண்டி: உம்! நான் அந்தக் குட்டி சொக்கி மேலே உயிரையே வச்சிருந்தேன். அவளை அந்த சுந்தரம் பயல் அடிச்சிகிட்டுப் போய்ட்டானே! அவனைத்தான் பாரேன்! இப்ப நடக்கிற புனித ராஜ்யத்திலே நம்ப செல்வாக்குக் கொடிகட்டிப் பறக்குது! அப்படியிருந்தும் அவளுக்கு நம்ம மேலே ஒரு மதிப்பு ஏற்படலியே! பயம் ஏற்படலியே!

அண்ணுச்சி: மதிப்பு ஏற்படும்னு கனவு கூடக் காணுதே! பயம் ஏற்படும் அது சகஜம்! இத பாரு நொண்டி! நம்ப ராஜ்யத்திலே என்னைக்கூட காந்தியின் வாரிசு. அண்ணு பாதையில் அணுவும் பிசகாமல் நடப்பவன்னு நேத்து கூட ஒரு கூட்டத்திலே ஒரு தமிழ்ப் பெரியவர் பேசினர். உண்மையைப் பேசினர்னு நினைக்கிறியா? அவருக்கு சர்க்கார் நடத்துறவங்களைப் போற்றிப் பேசியே பழக்கம்! நம்பளை மனசுக்குள்ளே மதிச்சா பேசுருர்; இல்லவே இல்லே! ஒரு பயம் அதனுலே பேசுருர்! முன்ன இருந்த ஆட்சியிலே சுருட்ட வேண்டியதைச் சுருட்டிக்கிட்டு "பெரிய சான்ருேர்" என்றுபெயர் வாங்கிவிட்டார். இப்ப அந்தச்சான்ருேர், நமக்கு சர்டிபிகேட்கொடுக்கிருர். இப்பவும் சுருட்டிகிட்டே இருக்கிருர்'

நொண்டி: போன ஜென்மத்திலே சுருட்டு வியாபாரியாகப் பொறந்திருப்பாரோ?

அண்ணுச்சி: சே! சே! சுருட்டு வியாபாரிகள். புகையிலையைத்தானே சுருட்டுவாங்க! இந்த மனுஷன் பெரிய பொய் பூனச் சுருட்டுப் பேர்வழி! எப்படியோ யார் ஆட்சிக்கு வந்தாலும் பிழைச்சுக்கிற புத்தி இருக்கு! நல்ல திறமைசாலி!

(அப்போது பொடியன் அவர்களுக்கெதிரே வேகமாக வருகிருன்)

பொடியன்: அண்ணுச்சி! அண்ணுச்சி! ஒரு முக்கியமான சமாச்சாரம்! கேட்டா அப்படியே மூர்ச்சைபோட்டு விழுந்து விடுவீங்க ரெண்டு பேரும்'

அண்ணுச்சி: ஏண்டா! எங்களையா சொல்றே? நாங்களா மூர்ச்சை போட்டு விழுந்துவிடுவோம்? பத்துக் கலயம் பட்டைச் சரக்கு சாப்பிட்டாலும் எறும்பு கடிச்சது மாதிரி கூட இருக்காது எங்களுக்கு? எவ்வளவு சோகமான சேதி வேண்டுமானுலும் சொல்லு! நாங்க தாங்கிக்குவோம்!

பொடியன்; சோகச் சேதி இல்லே! சந்தோஷமான சேதிதான்:

நொண்டி! அப்படியா? அதாவது மதுவிலக்கைத் தீவிரப்படுத்தப் போறதா சர்க்காரிலே அறிவிச்சிருக்காங்களா?

பொடியன்: அது எப்படியண்ணே சந்தோஷச் சேதியாகும்? ஓகோ! நீ அப்படி கணக்குப் போடுறியா? அப்பத்தானே நம்ப காய்ச்சுகிற கள்ளச் சாராயத்துக்கு கிராக்கி உயரும்! இருந்தாலும் கூட சில போலீஸ்காரனுங்க ரொம்பகண்டிப்பா இருந்து நம்ம ஆளுகளுக்கு ரொம்ப தொந்திரவு கொடுப்பானுங்களே!

அண்ணுச்சி: கொடுத்தா— அப்புறம்தேனும்பேட்டை வேலைதான்!

பொடியன்: அது என்ன அண்ணே; தேனும் பேட்டை வேலை?

அண்ணுச்சி: முட்டாளே! நீ பத்திரிகைபடிக்கலியா? சுமார் பத்து மாசங்களுக்கு முன்னே, மெட்ராஸ் தேனும்பேட்டையிலே, கள்ளச் சாராயம் காய்ச்சின நம்ம ஆளுங்க மேலே போலீஸ் குபீர்னு பாஞ்சுது! விடுவான்களா நம்ம ஆளுங்க போலீஸ் அதிகாரியைப் புடிச்சு கட்டிவச்சு கத்தியால குத்தி. அதைத் தடுக்க வந்த போலீஸ்காரர்களையும் சும்மா இப்படி ஒரு குத்து அப்படி ஒரு குத்து "டமார்" "டமார்"னு நம்ப வாத்தியாரு சினிமாவிலே விடுவாருபாரு- அதுமாதிரி விட்டுத் துரத்திப் புட்டாங்க!

பொடியன்: ஆங்! அப்பபடியா? அவுங்களைசும்மா விட்டுட்டாங்களா?

அண்ணுச்சி: சும்மா ஒரு வழக்கு பதிவு செஞ்சாங்க! அத்தோட சரி! இது சட்டம் தன் கடமையைச் செய்ற காலம்டா! அதாவது சட்டம் நம் கையிலேயிருந்து கொண்டு தன் கடமையைச் செய்கிற காலம். அது போகட்டும் ஏதோ சந்தோஷச் சேதி கொண்டு வந்தேன்னு சொன்னியே; என்னு அது?

பொடியன். தி. மு. கழகத்திலேயிருந்து ஒரு நாலு ஆட்களை நம்ம கட்சிக்கு அழைச்சுகிட்டு வர ஏற்பாடு செஞ்சிருக்கேன்.

அண்ணுச்சி: அப்படியா யாரு அவுங்க? முக்கியமான ஆளுகளா?

பொடியன்: ஆமாம்! பேரு அப்புறம் சொல்றேன்!

நொண்டி: அதுசரி! அவுங்க நம்ம கட்சியிலே சேர்வதற்கு என்ன தகுதியிருக்கு?

பொடியன்: நம்ம கட்சிக்கா? அவங்களுக்கா?

நொண்டி; அவங்களுக்குத் தாண்டா?

பொடியன்: நம்ப தலைவர் விரும்புகிற தகுதிமுழுக்க இருக்கு' முதல் தகுதி. நம்ப தலைவர் தயாரித்த புகார்ப்பட்டியலிலே அவுங்கபேரு இருக்கு! அதுமாத்திரம் அல்ல; கமிஷன் கொடுத்த அறிக்கையிலேகூட அவுங்களைப்பத்தி இருக்கு! அதன்னியில் வேறு சில ஸ்பெஷல் குற்றச்சாட்டுக்களைக்கூட நம்ப தலைவர் அவுங்களைப்பத்தி சொல்லியிருக்கிருர்!

(தொடர்ச்சி 11-ம் பக்கம்)

‘அமரர்’ ‘ஆத்மா’ என்று பேசுபவரா

ஐயா, அண்ணா வாரிசு?

பெரியாருடைய கொள்கை நல்ல மருந்துதான். ஆனால் கசப்பானது. அதை எப்படி உட்கொள்வது என்று மக்கள் மறுத்த நேரத்தில்தான் அந்தக் கசப்பு மருந்தைத் தேனில் குழைத்துக் கொடுத்து இந்தச் சமுதாயத்திற்கு மறுமலர்ச்சி உண்டாக்கிய மாபெரும் மருத்துவராக, தலைவராக அண்ணா தோன்றினார்.

பெரியார் கல்லும் மண்ணும் சேர்ந்த தங்கத்தை எடுத்துக் கொடுத்தார். கல்லையும் மண்ணையும் பிரித்து மிச்சமான தங்கத்திற்கு மெருகேற்றித் தந்தார் அண்ணா.

அந்த இரண்டு பேருடைய தொண்டும் அந்த இரண்டு பேரும் சமுதாயத்திற்கு ஆற்றிய பணியும் இன்றைக்கு இவர்களுடைய பெயரைச் சொல்பவர்களால் நிறைவேற்றிட முடியாது. பெரியார், அண்ணா என்று அவர்களுடைய பெயர்களை உச்சரிப்பதாலேயே அவர்களுடைய கொள்கைகளை ஏற்றுக் கொண்டதாகப் பொருள் அல்ல. எம். ஜி. ஆர். கூடத் தன்னை பெரியாரின் வாரிசு என்று சொல்லிக் கொள்கிறார். அவர் சொல்கிறாரோ இல்லையோ அவரை தத்துப் பிள்ளைக்க வேண்டும் என்று இருப்பவர்கள், இவர்தான் பெரியாரின் வாரிசு என்று சொல்லிக் கொள்ளுகிறார்கள்.

அந்தப் பெரியாரின் வாரிசு இரண்டு மூன்று மாதங்களுக்கு முன்னால் ஒரு வாரப் பத்திரிகைக்குத் தன் கைப்பட ஒரு தலையங்கம் எழுதினார். தன்னுடைய ஆட்சியைப் பற்றிச் சொல்லி, முடிக்கும்போது நான் என்னுடைய ஆட்சியில் பல சாதனைகளைச் செய்கிறேன். இந்தச் சாதனைகள் எல்லாம் அமரர் அண்ணாவின் ஆத்மா சாந்தி அடைவதற்காக என்று முடிக்கிறார். ‘அமரர்’ என்ற வார்த்தையில் நமக்கு நம்பிக்கை இல்லை; ‘ஆத்மா’விலும் நமக்கு நம்பிக்கை இல்லை. அமரர் என்று சொன்னால் பெரியார் சீறி விழுவார். ஆத்மா என்று ஒன்று இருக்கிறது என்று சொன்னால் பெரியாரும் அண்ணாவும் ஒத்துக் கொள்ள மாட்டார்கள். ஒருவருடைய ஆத்மா சாந்தியடைய நல்ல காரியங்களைச் செய்கிறேன் என்று சொல்வதைவிடப் பெரிய இழிவு இறந்து போனவர்களுக்கு வேறு ஒன்று இருக்க முடியாது. புராணப்படியே நான் பேசுகிறேன். ஆத்மா எப்போது சாந்தி அடையாது? பூலோகத்தில் ஏராளமாக பாவம் செய்தால் அப்படிப்பட்டவர்களுடைய ஆத்மா சாந்தியடையாமல் அலைந்து கொண்டிருக்கும் என்றும் அவர்களுடைய ஆத்மா சாந்தியடைய பல நன்மைகளைச் செய்வது என்றும் சொல்வார்கள். அப்படி, அண்ணா அவர்களும் இந்த பாவம் செய்துவிட்டு ஆத்மா சாந்தியடையாமல் இருப்பதாக எம். ஜி. ஆர். சொல்கிறார். இது அண்ணாவின் கொள்கையா? ஐயாவின் கொள்கையா? ஆத்மா என்பது ஒன்றில்லை என்பது பெரியாரின் வாதம். அண்ணாவின் வாதம். பகுத்தறிவுவாதிகளின் வாதம்.

ஆத்மா என்று ஒன்று இருப்பதாக ஒத்துக் கொண்டால் அந்த ஆத்மா உடலை விட்டுப் பிரிந்ததும், வேறு ஒரு பிறவியாகப் பிறக்கிறது. இறந்து போனவர்கள் முன்பு அவர்கள் செய்த பாவ புண்ணியங்களுக்கேற்ப அடுத்த பிறவியில் பிறக்கும்போது முற்பிறவியில் புண்ணியம் செய்திருந்தால் ஒரு தாயின் வயிற்றிலும், பாவம் செய்திருந்தால் ஒரு மிருகத்தின் வயிற்றிலும் பிறக்கும் என்று எழுதி வைத்திருக்கிறார்கள். அந்த நேரத்தில் நம்முடைய வீடுகளில் ஒருவர் இறந்துவிட்டால் அவருடைய ஆத்மா மேல் உலகத்திலே இருக்கின்றது. அதற்கு ஆண்டுதோறும் திதி, திவசம் போன்றவைகளைச் செய்து, காய்கறி அரிசி தட்சணை போன்றவைகளைத் தருகிறோம் என்று அவைகள் அந்த உலகத்தில் இருக்கிற அந்த ஆத்மாவிற்குப் போய்ச்சேருகிறது என்பதற்காகத் தருகிறோம் என்றும் எழுதி வைக்கப்பட்டிருக்கிறது. இப்போதுதான் அந்தத் தத்துவத்தின்படி இறந்து. அந்த ஆத்மாதான் இன்னொரு தாயின் வயிற்றில் போய் பிறந்துவிட்டதே பிறகு எப்படி அந்தக் காய்கறிகள் எல்லாம் அங்கே போய்ச்சேரும்? என்ற கேள்வி பிறக்கிறது. இந்தக் கேள்விகள் பிறந்த காரணத்தால்தான் சுயமரியாதை இயக்கம் தமிழகத்தில் உருவாயிற்று.

சுயமரியாதை என்பது புராணங்களைக் கண்டிப்பது மாத்திரமல்ல, மூடநம்பிக்கைகளைக் கண்டிப்பது மாத்திரமல்ல; சுயமரியாதை என்பது ஒவ்வொரு மனிதனும் தன்னுடைய மரியாதையைக் காப்பாற்றிக்கொண்டு அதே நேரத்தில் மற்றவர்களுக்கும் மரியாதை அளிக்கவேண்டும் என்ற அடிப்படைக் கொள்கையை உள்ளடக்கியதுதான் சுயமரியாதை. சுயமரியாதைக் கொள்கை மனிதனை மனிதனாக்கும் கொள்கை. அந்தக் கொள்கையை வளர்க்கத்தான் தி. மு. கழகம் இன்றைக்கு அரசியல்ரீதியாக பரவியிருந்தாலும் கூட அந்த சுயமரியாதை உணர்வை தன்னகத்தே கொண்டு மையமாகக்கொண்டு தன்னுடைய அரசியல் பணியை நாட்டில் நிறைவேற்றி வருகிறது. இந்தப் பகுதியில் உள்ள தாய்மார்களும் பெரியவர்களும், வாலிபர்களும் மாணவர்களும் விவசாயப் பெருங்குடி மக்களும் சுயமரியாதை உணர்வை ஏற்படுத்த தொடர்ந்து பணியாற்ற வேண்டும். அப்படிப் பணியாற்றுகின்ற நேரத்தில் அவர்களுக்கு வருகின்ற துயரங்கள், ஏற்றத்தாழ்வுகள் அத்தனையிலும் பங்கு கொள்கின்ற ஒரே ஒரு இயக்கமாக இன்று தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய இயக்கம் தி. மு. கழகம். இது ஆளுங்கட்சியாக இருந்தாலும், எதிர்க்கட்சியாக இருந்தாலும் இரண்டையும் சமநிலையில் கருதி எந்த நிலையிலும் மக்களுக்காகப் பாடுபடும் இயக்கமாக இருக்கிறது.

கலைஞர்

(கொட்டவாக்கம் பாலகிருட்டினன் இல்லத் திருமண விழாவில் பேசியது)

வேடம் கலைகிறது

தமிழக முதல்வர் தென்பாண்டி நாடு நோக்கி வெற்றிக் களிப்போடு ‘வீர உலா’ செல்கிறார்.

வழக்கம்போல் அதிகார வர்க்கம் ஆலவட்டம் சுற்ற கால் கடுக்கக்காத்து நிற்கிறது. இரகசியப் போலீசார் முதல்வரின் வருகையை வழிமேல் விழிவைத்து எதிர்பார்த்து நிற்கிறார்கள்.

அகில உலக ரசிகர்கள்,— இந்த நாட்டின் அப்பாவிகள். புதுப்படங்கள் இல்லாததால் ‘தெம்பு’ இழந்திருந்தனர். நடிகரை வரவேற்க நாடி தளர்ந்த நிலையிலே நின்றிருந்தனர்.

காவல்துறை அதிகாரிகள், பூட்ஸ் சப்த நடைபோட்டுக் கொண்டிருந்த போலீஸ்காரர்களுக்கு அறிவிப்புக் கொடுத்தபடியே இருந்தனர்.

நடிக முதல்வர் சுற்றுப்பயணம் மேற்கொள்ளும்போதெல்லாம் முகம் சோபிதமாகக் காட்சி தரும். அவருடைய ‘மேக் அப்’ முகத்தில். ஆனால் இந்தப் பயணத்தில் அந்த முகப்பொலிவு இல்லை; மகிழ்ச்சி இல்லை. ஏதோ ஒரு சோகம் அவர் முகத்தைக் கப்பிக்கொண்டிருந்தது. வரவேற்பு ஒன்றையே தனது வாழ்க்கையில் சந்தித்துக் கொண்டிருந்தவர். ‘வாழ்க’ எனும் முழக்கத்தை மட்டுமே தனது செவிகளில் இன்பத்தேனாகக் கேட்டுக்கொண்டிருந்தவர். இன்றோ முதன்முதலாக இவற்றுக்கு மாறான முழக்கத்தைக் கேட்க இருக்கின்றோமே என்ற வேதனைதான் அதற்குக் காரணமாக இருந்திருக்கக்கூடும்.

அறிஞர் அண்ணா முதலமைச்சராகப் பொறுப்பேற்று இருந்தபோது பின்தங்கிய சமுதாய மக்களுக்குச் செய்த சலுகைகளைக் கலைஞர் தமது ஆட்சிக் காலத்தில் காத்து வந்தது மட்டுமின்றி திட்டங்களை மேலும் விரிவு படுத்தினார்.

இன்றைய முதல்வர் அவற்றைக் காற்றிலே பறக்கவிட்டுக் கொண்டிருக்கிறார். மருத்துவக் கல்லூரியில் மாணவர்கள் சேர்ப்பதில் கூட ரூபாய் இருபத்தைந்து ஆயிரத்துக்கு முன் வைப்புத் தொகைக்கு எழுத்து மூலம் தருவது மட்டும் போதாது மேலும் ஒருவர் அதே தொகைக்கு உறுதி கொடுக்கவேண்டும் என்றும் நடிகர் அரசு அறிவித்துள்ளது. பின்தங்கிய— தாழ்த்தப்பட்ட சமுதாயங்களுக்கு இதனால் பெருங்கேடு விளையும் மருத்துவக் கல்லூரியில் எதிர்காலத்தில் சேர்ந்து படிக்கப் பெரும் தடைக்கல்லாகப்போகும் என்று வேதனைக்கண்ணீர் வடித்துக் கொண்டிருக்கிறார்கள்.

சா. கணேசன்

இந்தச் சூழ்நிலையில் அகில இந்திய பார்வார்டு பிளாக் கட்சியினர் பிற்பட்ட சமுதாயமான தேவர் சமுதாயத்துக்கு வேலை ஒதுக்கீடு மற்றும் பிற கோரிக்கைகளை அரசுக்கு உணர்த்தவே இந்தப் போராட்டத்தை மேற்கொண்டனர்.

நடிகர் அரசாங்கம் இந்தப் போராட்டத்தை நசுக்கிட முனைந்து அந்தக் கட்சியின் தலைவர் ஆண்டித் தேவரை முன் கூட்டியே கைது செய்து விட்டது. அதோடு விடவில்லை. நூற்றுக்கணக்கான தொண்டர்களையும் கைது செய்தது. போராட்டம் நடக்காது. ஆர்ப்பாட்டத்திற்கு ஆட்கள் இருக்க மாட்டார்கள் என்றெல்லாம் நடிகர் அரசு கணக்குப் போட்டது.

மதுரையிலிருந்து சுருளியாறு செல்கிறார் முதல்வர். செல்லும் வழியில் உசிலம்பட்டி—தேனி சாலை சந்திப்பு. திரைப்பட அரங்கத்தின் முன்னாலே விவசாயிகள், தொழிலாளர்கள் ஆகியோர் கூட்டமாகக் கூடி நிற்கின்றனர்.

பாதுகாப்புக்காகப் போலீஸ் அதிகாரிகள் முதல்வர் காருக்கு முன்னாலே வேனில் சென்றார்கள். பின்னாலேயும் பாதுகாப்புக்காகப் போலீஸ், பட்டாளம். தொழிலாளர்களும் விவசாயிகளும் தங்களுடைய வேதனையை வெளிப்படுத்த கறுப்புக் கொடி காட்டி ஆர்ப்பாட்டம் செய்தார்கள். வட்டாட்சியர் அலுவலகம் முன்னாலே கூடியிருந்த மாணவர் பட்டாளம் எம் ஜி ஆர் ஆட்சி ஒழிக’ என்று முழக்கமிட்டது.

கூடியிருந்த பொது மக்கள் கறுப்புக் கொடி காட்டியே தீருவோம். ‘கையாலாகாத ஆட்சி ஒழிக’ என்று முழக்கமிட்டனர். அதைத் தொ[...]ந்து முதல்வர் கார்மீது க[...] வீசப்பட்டனவாம். ஆ[...] காருக்கு எவ்வித [...] மும் ஏற்பட வில்லை[...] பின்னால் வந்த கார் [...] கற்கள் விழுந்தது [...]டிகள் உடைத்தனவா[...]

வெண்திரை கிழிகிறது

(தொடர்ச்சி 11-ம்பக்கம்)

கலையும் நமது நிலையும்!

கலைத்துறை இன்று செழிப்புடன் வளர்ந்து கொண்டு வருகிறது; சிறப்புடன் என்று கூறாமல் செழிப்புடன் என்று கூறுவது பொருளாழத்துடன் தான். செழிப்பான வளர்ச்சியே, சிறப்பு என்று கொள்ளவிரும்புகின்றவர்களை நான் தடுக்கவில்லை!

கலைத்துறையுடன் மக்களுக்கு உள்ள தொடர்பு வளர்ந்தவண்ணம் இருக்கிறது. நடை, உடை, பாவனை'யில் கலையின் 'வண்ணம்' அறிந்தோ, அறியாமலோ ஏறி இருந்திடக் காண்கின்றேன்.

அழகுக் கலையிலிருந்து அடுக்களைக் கலை வரையில், ஒரு புதுமையும் வளமையும் மின்னிடக் காண்கிறோம். மின்னுவதெல்லாம் பொன்னல்லதான்; ஆனால் மங்கிக் கிடப்பதுதான் மாண்புக்கு அடையாளம் என்று தீர்ப்பளித்துவிட முடியாதல்லவா?

கலைத்துறை குறித்து எண்ணுவதும் பேசுவதும் ஆராய்ந்தறிவதும், எழுதுவதும் வளர்ந்து வருகிறது. ஏராளமான ஏடுகள்! இதழ்கள், மலர்கள் துண்டு வெளியீடுகள்! எல்லா இதழ்களும் கலைக்காக என்றே ஓர் இடம் அமைத்துக் கொண்டுள்ளன; கலைக்காக என்றே உள்ள இதழ்கள் பல வெளிவருகின்றன. இந்த இதழ்கள், கலை குறித்து எண்ணி— உதவுகின்றன, மக்கள் கலை பற்றி எண்ணுவதைத் துணைகொண்டு இதழ்கள் பயன் பெறுகின்றன; ஒரு நல்ல தொடர்பு ஏற்பட்டுக்கொண்டு வருகிறது.

கலை சமுதாயத்தின் நிலையை உயர்த்துகிறது என்பாருளர். இல்லை, சமுதாயத்தின் நிலையைக் கலை தாழ்த்தி வருகிறது என்று கூறுவாருளர்; இருசாரார் கூறுவதினின்றும் நிலையை மாற்றும் வலிமை கலைக்கு இருப்பது புலனாகிறது; அதிலே ஒரு மகிழ்ச்சி ஏற்படத்தான் செய்கிறது. ஏனெனில் கலையின் வலிமை போயே விட்டது என்றும், கலையின் மூலம் காணக்கிடைத்த பலன்களை இன்று காண முடிவதில்லை, என்றும் கவலையைக் காட்டுகிறார், சிலர்; அவர்தம் உரை உண்மையல்ல என்று விளங்குகிறது அல்லவா?

கலை வலிவுள்ளதாக இருக்கிறது; பொலிவு வளர்கிறது; மக்களிடம் உள்ள தொடர்பு வேகமாகப் பெருகுகிறது; செழிப்பாகவும் இருக்கிறது.

வலிவும் பொலிவும், மக்கள் தொடர்பும், செழிப்பும் கொண்டதாகக் 'கலை' இருக்கும் போது, அந்தத் துறையை அலட்சியப்படுத்துவதோ, அதன் வளர்ச்சியையும் வகையையும் இயற்கைக்கு விட்டுவிடுவதோ அதன்மூலம் பெறப்பட வேண்டியவைகள் எவை எவை என்பது குறித்துப் பொறுப்புக் காட்டாதிருப்பதோ நல்லதல்ல.

மலடிக்கு மகவுடன் கொஞ்சத் தெரிகிறதா இல்லையா என்பது பற்றி அதிகக் கவலை கொள்ளத் தேவையில்லை; பெற்ற செல்வத்தைப் பேணி வளர்த்திடும் ஆற்றல் அன்னைக்கு இருக்கிறதா என்று அறிந்தாக வேண்டுமல்லவா?

கலை மலடி அல்ல; படக்காட்சிப் 'பாஷை'யில் கூறுவதானால் கலை "மக்களைப் பெற்ற மகராசி!" எனவே கலைமூலம் கிடைப்பது கிடைக்கட்டும்; பெறுவோர் பெறட்டும் என்று இருந்துவிடக்கூடாது. மக்களைப் பெறக்கூடிய மகராசி என்று தெரிந்தான பிறகு சீராட்ட, பாராட்ட, சிறப்புடன் வளர்த்திட வழிவாகையுடன் மகராசி இருந்திடத்தக்க ஏற்பாடு இருந்தாக வேண்டுமே

நல்ல தங்காள்கூடத்தான் மக்களைப் பெற்ற; மகராசி — ஆனால் பாவம், கிணற்றில் போட்டல்லவா குழந்தைகளைக் கொல்ல வேண்டி நேரிட்டது!

அதுபோலத்தான், கலை பல்வேறு 'பலன்களை' ஈன்றெடுக்கும் வளமுள்ளது என்பது உணரப்பட்டான பிறகு அதன்போக்கு கவனிப்பாரற்றதாக இருந்துவிடச் செய்வது கூடாது என்கிறேன்.

கலை வலிவுடையதுதான்; ஆனால் அந்த வலிவு அழிவு வேலைக்கா? ஆக்க வேலைக்கா?

கலை, பொலிவுடையது; மறுப்பாரில்லை; ஆனால் அந்தப் பொலிவு உள்ளத்திலே ஆசா பாசங்களை மூட்டிவிடவா? அல்லது தூய்மையைத் தழைத்திடச் செய்யவா?

கலை மக்களிடம் நெருங்கிய தொடர்புடையதுதான்; ஆனால் அந்தத் தொடர்பு ஆசான் மாணவன் என்ற விதமாகவா? போலீஸ்



காரன் — குற்றவாளி என்ற வகையிலா? தோழர்கள் என்ற போக்கிலா? தொடர்பு எங்ஙனம் இருத்தல் வேண்டும்?

கலை செழிப்புடையதுதான்; ஆனால் அந்தச் செழிப்பு மக்களின் வளத்தை உடல்—உள்ளம்—பொருள் பண்பு ஆகிய எல்லா வளங்களையும் பெருக்கும் விதத்தில் இருத்தல் முறையா? அல்லது ஈடுபட்டோரைச் செழித்திடச் செய்வதுடன் மட்டும் இருந்திடல் போதுமா?

இன்னோரன்ன கேள்விகள் எழுகின்றன. எவரும் இதுபோல் எழுப்புதல் காணோமே என்கிறீர்கள். கலைத்துறையினருக்கும், மற்றத் துறைகளில் உள்ளோருக்கும் உள்ள வேறுபாட்டுணர்ச்சிகள் இவையாவுமே மேலே குறிப்பிட்டுள்ள கேள்விகள் உள்ளத்திலே ஊசலாடுவதன் விளைவுதான்; வேறென்ன!

முறைப்படுத்தி, பக்குவப்படுத்தி, விளக்கம் பெறவேண்டும் என்ற நோக்கத்துடன் இந்தக் கேள்விகளை அணுகாததால், அணுகுவது கடினமாக இருப்பதால்தான், எளிதான வோர் வழியைக் கையாண்டு, கலை உலகிலுள்ளோர் ஏளனம்— ஏச்சு— பழித்தல்— சபித்தல் என்பன போன்ற கணைகளை ஒருவர் மீதொருவர் ஏவிக்கொள்கின்றனர். சச்சரவுகளாகிவிடுகின்றன, இயற்கையாக எழுந்துள்ள பிரச்சினைகள்.

கலைத்துறையினர் இந்தப் பிரச்சினைகளிலிருந்து தப்பித்துக்கொள்ளவும் முடியாது. இந்தப் பிரச்சினைகளுக்குப் பரிகாரம் ஒருவருக்கொருவர் வசை வழங்கிக்கொள்வதுமல்ல.

கலை, வலிவும் பொலிவும் கொண்டது மக்களிடம் அதற்குள்ள தொடர்பு வளர்ந்த வண்ணம் இருக்கிறது உண்மை! இந்த வாய்ப்பு எவ்வழி செல்லல் வேண்டும்?

ஈதென்ன கேள்வி? எவ்வழி செல்லவேண்டும் என்றால் நல்வழி செல்ல வேண்டும்— என்று பதிலளிப்பீர்கள்; பதிலளிக்கிறார்கள், எளிதாகவும் நம்பிக்கையுடனும் பதிலளிக்கிறார்கள். பதிலிலே பாகு கலந்தும் அளிப்பவர்களைக் காணுகிறேன், நாராசத்தைக் கலப்பவர்களையும் பார்க்க நேரிடுகிறது.

இவ்வளவு எளிதான ஒரு பதில் இருக்கும்போது 'கேள்வியில் ஏதோ கடினம் இருப்பது போல் ஏன் காட்டிக்கொள்கிறீர்?" என்று என்னைக் கேட்க எண்ணுவீர்கள். தொடுக்கும் கேள்வியில் அல்ல; கிடைக்கும் பதிலில்தான் கடினம் உருவில் இருந்திடக் காண்கின்றேன்.

எவ்வழி செல்லவேண்டும் என்றால் நல்வழி என்கிறார்கள், மெத்த மகிழ்ச்சி!

நல்வழி எது?

நல்வழி கூறவல்லார் எவர்?

நல்வழி என்பது, நம் காலத்துக்கு மட்டும் பொருந்துவதாக என்றென்றும் நிலைத்து நிற்பதா?

நல்வழி இஃது என்று கூறுபவர் கூறிடத் தகுதி படைத்தோர்தான் என்று ஏற்றுக்கொள்வது எங்ஙனம்?

இவைகள் நீங்களும் நானும் எண்ணி எண்ணிப்பார்த்து பதில் தேடித் தீரவேண்டிய கேள்விகளிலே சில.

"மலேரியா காய்ச்சல் இது! கொய்னா தந்திருக்கிறேன்"—

என்று மருத்துவர் கூறும்போது, இவருக்கு எப்படி இது தெரிந்தது? இவர் கூறுவதை நாம் எங்ஙனம் சரியானது என்று ஏற்றுக் கொள்வது? என்று எவரும் ஐயப்பாட்டுக்கு ஆளாவதில்லை; ஆம் என்கின்றனர் பணமும் தருகின்றனர்.

அஃதேபோல் குறிப்பிட்ட சிறப்பறிவுத் துறைகளிலே ஈடுபட்டவர்களின் கருத்துகள் மற்றவர்களால், ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. மறுப்பார், ஐயுறுவார், வழக்காடுவர் அதிகம் இரார்.

ஆனால் எது நல்வழி? என்பதற்கு இன்னின்னவர் பதிலளிக்கும் தகுதி பெற்றார் பிறர் கேட்டு இசைவு அளிக்கும் கடமையுடையார், என்று அறுதியிட்டுக் கூறிவிட முடியாது கூடாது, தேவையுமில்லை எனவேதான், எது நல்வழி என்பதற்கு, அளிக்கப்படும் பதில் வழக்கை முடிவுபெறச் செய்வதாக இல்லை; புது வழக்குகளுக்கு வழி செய்கிறது.

இதற்கு முடிவுதான் என்ன?

உண்டு! நல்வழி எது என்பதைப் பிறர் கூறக்கேட்டு, எண்ணிப்பாராமல் ஏற்றுக் கொள்வதோ, அல்லது மறுத்துப்பேசி மாச்சரியங்களை மலியச் செய்வதோ உண்மையான பலனைத் தராது.

அறிஞர் அண்ணா

வெற்றி பெற்றவர்களையே வீழ்த்திவிடுவதுண்டு; வாதியே பிரதிவாதியாகிவிடும் விசித்திரமும் எழக்கூடும்.

எனவே, நல்வழி என்பதற்குப்பொருள் பிறர் கூறுவதைக்கொண்டும், நாமே எண்ணிப்பார்ப்பதைக்கொண்டும் மட்டுமல்லாமல், நாம் எங்கு செல்ல விரும்புகிறோம்— நமது சமுதாயம் எங்கு செல்ல வேண்டுமென்று நமக்கு உறுதியாகத் தோன்றுகிறது என்பது பற்றி ஒரு 'முடிவு கண்டு' பிறகு, அந்த இடம் செல்ல, எவ்வழி சிறந்ததோ அது நல்வழி என்று கொள்ளவேண்டும்

இதிலே இன்னல் அதிகம்; ஆனால் இந்த முறையிலே காணவேண்டுமானால் இன்று எங்கு இருக்கிறோம் என்பதனை அறிந்தாக வேண்டும். இன்றுள்ள கேடுபாடுகள் யாவை என்பதை தெரிந்து கொண்டாகவேண்டும்.

வெயிலில் இருந்தவனுக்கல்லவா நிழலின் அருமை தெரியும்?

இன்று நாமும் சமுதாயமும் 'எங்கு' இருந்து வருகிறோம்?

ஜாதியும், அதனாலேயே பேதங்களும், மூடநம்பிக்கைகளும் அவைகளால் மூண்டுவிடும் நாசங்களும், பொருளாதார பேதங்களும், அவைகளால் கொதித்து எழுதும் துரோகங்களும், ஆட்சிமுறை அலங்கோலங்களும், அவைகளால் ஆர்த்தெழும்

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)

இந்தியா எங்கே போகிறது?

மக்களின் நம்பிக்கையை விரைவாகப் பெற்று, பெற்ற நம்பிக்கையை அதே விரைவில் இழந்த இயக்கம் வரலாற்றில் ஜனதாவைப்போல் வேறெதுவும் இல்லை' 'In all history, never was a party elected with such faith and hope and never did it disappoint the voters with such rapidity" K,R. Sundar Rajan The Illustrated weekly of India July 2 1978 (இல்லஸ்ட்ரேட்டடு வீக்லீ ஆஃப் இந்தியா: ஜுலை 2, 1978)

ஜனதாவின் செல்வாக்கு இவ்வளவு விரைந்து சரிவானேன்? அது எதையும் சாதிக்கவில்லையா? அது எதையும் சாதிக்கவில்லை என்பது இல்லை அதன் செல்வாக்குச் சரிவதற்குக் காரணம். அது எதையும் சாதிக்கப் போவதில்லை என்ற எண்ணத்தை ஏற்படுத்தியதே காரணம்.

இந்தியாவின் பிரச்சினைகள் பலதரப்பட்டவை; சிக்கல் மிகுந்தவை; பல ஆண்டுகளாய்த் தொடர்ந்து வருபவை. அற்புதம் எதுவும் நிகழ்ந்தால் தவிர அவை இன்னும் பல ஆண்டுகள் தொடர்ந்து வரக் கூடியவை. மொரார்ஜி தேசாய் மந்திரவாதியல்ல. ஜனதா அரசிடம் அலாவுதீனுடைய அற்புத விளக்கு இல்லை. இதை மக்கள் அறிவார்கள் அவர்கள் இன்னும்பொறுமையோடு இருக்கத் தயாராக இருப்பார்கள் ஆனால் ஜனதாவோ மக்களின் பிரச்சனைகளைத் தீர்க்க முயற்சியேயல்லவா எடுக்கவில்லை! ஜனதா தலைவர்களின் கவனம் அத்திசையில் திரும்பக் கூட இல்லையே! இந்நிலை மக்களுக்குத் தெரிந்த பிறகும் அவர்கள் பொறுமையோடு இருப்பார்களா? இருக்க வேண்டும் என்று நாம்தான் எதிர்பார்க்கலாமா?

மக்கள் அவர்களை ஆட்சி நடத்தத் தேர்ந்தெடுத்து அனுப்பினார்கள் ஆனால் அவர்கள் கவனமோ ஆட்சி நடத்துவதில் இல்லை. தங்களுக்குள் அடித்துக்கொள்வதில் செலுத்தப்படுகிறது

"எங்களுக்குள் சண்டை எதுவும் இல்லை இருப்பதெல்லாம் சிறு சிறு கருத்து வேறுபாடுதான். கருத்து வேறுபாடு ஜனநாயகத்தின் உயிரோட்டத்தின் அடையாளமே தவிர இதில் கவலைப்படுவதற்கு எதுவும் இல்லை" என்று ஜனதா தலைவர்கள் தொடக்கத்தில் விளக்கம் தந்தார்கள்.

அடுத்து 'சிறு சிறு பூசல்களை தவிர கோஷ்டிச் சண்டை இல்லை பெரிய அமைப்பில் இதெல்லாம் சகஜம்தான்' என்று சமாதானம் கூறினார்கள்.

தொடர்ந்து "கோஷ்டிச் சண்டை நடப்பது உண்மைதான். ஆனால் அது விரைவில் தீர்க்கப்பட்டுவிடும் இதோ சமரச முயற்சி நடக்கிறது இன்னின்னார் அந்த முயற்சியிலே ஈடுபட்டிருக்கிறார்கள் நிச்சயம் சமரசம் ஏற்பட்டு சமரசத்திற்குப் பிறகு ஜனதா முன்னைவிட அதிக பலம் பெறும்" என்று நம்பிக்கை அளித்தனர்

ஜனதாவில் சண்டை இவர் அவரைச் சாடினார். அவர் இவரைத் தாக்கினார் சமாதானக்குழு சமரசத்தில் ஈடுபட்டுள்ளது. இதோ சமரசத் திட்டம். ஒரு பக்கத்தினர் அத்திட்டத்தை ஏற்றுக்கொண்டுவிட்டனர். எதிர்தரப்பினர் அதை பரிசீலிக்கின்றனர். அவர்களும் நிச்சயம் ஏற்றுக்கொள்வார்கள் சமரசத் திட்டத்தை எதிர்தரப்பினர் நிராகரித்தனர். சமரச முயற்சியில் முட்டுக்கட்டை. என்றாலும் சமாதானக் குழு நம்பிக்கைஇழக்கவில்லை மீண்டும் முயற்சிக்கிறது. சமரசம் தோல்வி அடைந்துவிட்டது, மீண்டும் சண்டை' நாள் தவறினாலும் இப்படிப்பட்ட செய்திவருவது தவறுவதில்லை நாளுக்கு நாள் மக்கள் நம்பிக்கை இழந்து வருகின்றனர். மக்கள் நம்பிக்கை இழந்து வருகிறார்கள் என்ற அடையாளங்கள் ஐயத்திற்கு இடமின்றி தோன்றி வருகின்றன ஆனாலும் ஜனதா தலைவர்களின் சண்டை ஓய்ந்தபாடில்லை

ஜனதாவிற்கு இந்நிலை ஏன்? இந்நிலை ஏற்பட என்ன காரணம்? யார் பொறுப்பு? இவற்றைப் பொறுமையோடு பொறுப்புணர்ச்சியோடு இன்னும் சொன்னால் அனுதாபத்தோடு ஆராயும் முயற்சியில் பலர். அதுவும் ஜனதாவின் பால்பரிவும்பாசமும் கொண்டவர்கள் இன்று ஈடுபட்டுள்ளவர்கள் கூறும் காரணங்கள் என்ன?

பூவாகி காயாகி கனியாவது இயற்கை — பரிணாம வளர்ச்சி

பூக்காது, காய்க்காது, கனியாவது உண்டா? ஏன் இல்லை ஜனதா இல்லையா? எத்தனையோ செயற்கைகள் விஞ்ஞானத்தின் விளைவாக இயற்கைக்கு முரணாக விளைவதில்லையா? எந்தச் செயற்கையும் விஞ்ஞானத்தின் விளைவாக இயற்கைக்கு முரணாக விளைவதில்லை. இயற்கையோடு இயைந்துதான் அது ஏற்படுகிறது. ஆனால் ஜனதா வெற்றி இயற்கையா? இயற்கையோடு இயைந்த செயற்கையா? இயற்கைக்கு முரணான செயற்கையா? இதற்கு விடை கூறுவது எவருக்கும் அவ்வளவு எளிது இல்லை.

கட்சிதோன்றி, வளர்ந்து, வலிமை பெற்று ஆட்சி அமைப்பது இயற்கை; ஆனால் ஆட்சி அமைந்த பிறகுகட்சிஅமைந்த விசித்திரத்துக்குபெயர் ஜனதா உடன்பாட்டு இலட்சியம்— ஆக்கபூர்வமான இலட்சியம் தான் எந்த ஒரு கட்சிக்கும் அடிப்படையாக இருக்கும் எந்த ஒரு இலட்சியமும் அப்படி இருந்தால்தான் அது வெற்றி பெறும். எதிர்மறை இலட்சியம் என்றும் வெற்றி பெறாது. எதற்கும் அடிப்படையாக இருக்கமுடியாது.

பொதுவுடைமை இலட்சியம் தனியுடைமை அதை அடையத் தடையாக இருப்பது; தனி உடைமையைத் தகர்ப்பது இலட்சியம் இல்லை. வழிமுறை Not an end but a means) (சமத்துவம் (Equality) இலட்சியம். பிறப்பால் பேதம் விளைவிக்கும் வர்ணாசிரமம் அதற்குத் தடை. வர்ணாசிரமத்தை ஒழிப்பது மார்க்கமே தவிர குறிக்கோள் இல்லை.

ஜனதாவின் இலட்சியம் என்ன? இந்திரா எதிர்ப்பு தானே இந்திரா எதிர்ப்பு இலட்சியமாகி விடுமா? இலட்சியம் என்று வாதிட்டாலும் அது எதிர்மறை இலட்சியமல்லவா? எதிர்மறை இலட்சியம் எங்காவது எப்போதாவது வெற்றி பெற்றது உண்டா?

இந்திரா எதிர்ப்பு ஜனதாவின் இலட்சியம் இல்லை. இழந்த சுதந்திரத்தை மீண்டும் பெறுவதே அதன் இலட்சியம் என்று வாதிடலாம். அதனை நாம் நமக்கிருக்கும் அன்பின் மிகுதியால் ஒப்புக் கொள்ளவும் செய்யலாம். ஆனால் அதிலும் பலம் இல்லையே!

சுதந்திரத்தைப் பெற்றுத் தந்தது காங்கிரஸ். இழந்த சுதந்திரத்தை மீண்டும் பெற்றுத்தந்தது ஜனதா. காங்கிரசுப் பேரியக்கத்திற்கும் ஜனதா பேரியக்கத்திற்கும் இந்த ஒற்றுமை உண்டு. இந்த ஒற்றுமை மட்டுமே உண்டு ஆனால் அவைகளுக்குள் இருக்கும் வேற்றுமைகள் எத்தனை எத்தனை அவை இரண்டையும் ஒப்பிட்டுக்காட்ட இருக்கும் அடிப்படைகளைவிட வேறுபடுத்திக் காட்ட இருக்கும் அடிப்படைகள் அதிகமல்லவா இருக்கின்றன

ஆரம்பக்கட்டத்தில் அந்நியரை எதிர்த்தவர்கள் சுதேசி மன்னர்கள். அதுவும் ஒன்றுபட்டு இல்லை; தனித் தனியாக அந்த எதிர்ப்பு முறியடிக்கப்பட்டு அந்நிய ஆட்சி நிறுவப்பட்ட பிறகு நீண்ட இடைவெளிக்குப் பிறகு அந்நிய எதிர்ப்பு மீண்டும் தோன்றுகிறது. அதுவும் துண்டு துண்டாக. ஆங்கிலக் கல்வி பெற்றவர்கள் வங்கத்திலும் பாஞ்சாலத்திலும் மராட்டியத்திலும் தமிழகத்திலும தனித் தனியாக சுதந்திரத்திற்காகப் போராடத் தலைப்பட்டார்கள் அந்தச்சுதந்தர இயக்கம் மக்கள் இயக்கமாக மலர- தேசிய இயக்கமாக பரிணமம் பெற எவ்வளவு தடைகளைத் தாண்டிட வேண்டி இருந்தது! அதற்கு எவ்வளவு துன்பங்களை அனுபவிக்க வேண்டி இருந்தது எவ்வளவு பலி கொடுக்க வேண்டி இருந்தது. இனம் மதம் மொழி பிராந்தியப பற்று இவைகளை எல்லாம் தகர்த்தெறிந்து தேசிய இயக்கத்தை மக்கள் இயக்கத்தை உருவாக்க எவ்வளவு இன்னல்களை இடர்பாடுகளைத் தாங்கிக் கொள்ள வேண்டி இருந்தது. காங்கிரசு இயக்கம் அடக்கு முறையில்- அவதியில் அவதரித்து வளர்ந்தது: அவ்வியக்கம் அவதரிக்கவும் வளரவும் தேவையான அடக்குமுறையை அல்லலை அந்நிய அரசு ஏவியது. ஜனதா இந்திராவின் அடக்கு முறையில் அவதரித்தது உண்மைதான். அல்லலில் தோன்றியது உண்மைதான் ஆனால் அந்த அடக்கு முறையும் அல்லலும் தோன்றிய ஜனதாவை ஒன்றுபடுத்தப் போதுமானவை இல்லை. அவ்வடக்கு முறையை அனுபவித்த காலமும் மிக மிகக் குறைவே.

காங்கிரஸ் பரந்து விரிந்த இந்தியாவில் எல்லாப்பகுதியிலும் நிறைந்து வளர்ந்த தேசிய இயக்கம் ஆனால் ஜனதாவோ வடநாட்டில் மட்டும தோன்றிய இயக்கம்.

அரசியல் தலைவர்களும் அனைத்து மக்களும் வகுப்புப் பேதமின்றி வர்க்கபேதமின்றி ஏற்றுக்கொண்டதேசியத் தலைவர்கள் காங்கிரசில் இருந்தார்கள். ஆனால் ஜனதாவில் வகுப்புத் தலைவர்கள் வர்க்கத் தலைவர்கள் வட்டாரத் தலைவர்கள் இருக்கிறார்களே தவிர தேசியத்தலைவர்கள் இல்லை;

ஏற்படும் எந்தக் கருத்து வேறுபாட்டையும் தீர்த்து வைக்கும் ஆற்றல்அந்தத் தலைவர்களுக்கு இருந்தது. அந்தத் தலைவர்கள் அந்த வேறுபாட்டுக்கெல்லாம் அப்பாற்பட்டவர்களாக இருந்தார்கள். ஆனால் ஜனதாத் தலைவர்களோ கருத்து வேறுபாடுகளின் கர்த்தாக்களாக இருக்கிறார்கள். கருத்து வேறுபாட்டுக்குள்ளே சிக்கித்தினறும் தலைவர்களாக அவர்கள் இருக்கிறார்கள். அவர்களில் ஒருவர்கூட அந்த வேறுபாடுகளுக்கு எல்லாம் அப்பாற்பட்ட பொதுத்தலைவராக இல்லை.

★ ★ ★

தனித்தனிக் கொடி – தனித்தனி கொள்கை — தனித்தனி வழிமுறை-தனித்தனி தலைமை தனித்தனி அமைப்புகளைக் கொண்ட பல கட்சிகளின் கலவைதான் ஜனதா. அதில் இன்னும் வேதனை என்னவென்றால். அக்கட்சிகள் தனித்தனியாக இருந்தவை மட்டுமில்லை. ஒன்றுக்கொன்று முரண்பட்டும இருந்தவை. வெவ்வேறு வகுப்புகளுக்கு, வர்க்கங்களுக்குப பிரதிநிதிகளாயிருந்தவை. அவற்றில் எதுவும் சகல பகுதியினரின் பிரதிநிதியாய்—ஒரு தேசிய அமைப்பாய் இருந்ததில்லை.

ஜனசங்கம் இந்துக்களின் கட்சி, பாரதீய லோக்தளம் (B. L D) கிராமப்புற நடுத்தர பெரு நிலச்சுவான்தார்களின் கட்சி. சோஷலிஸ்ட்டுக் கட்சி நகர்ப்புற நடுத்தர வர்க்கத்தினரின் கட்சி.

இவை எல்லாம் ஒருபெரிய காலக் கட்டத்தில் காலத்தின் கட்டாயத்தில் ஒன்று சேர்ந்தன. ஒன்று சேர்ந்தவை உணர்வு பூர்வமாகவோ கொள்கை ரீதியாகவோ ஒன்று சேரவில்லை. சேரும்போதே பரஸ்பரம் சந்தேகம் அவநம்பிக்கை; சேரும்போதே ஒன்றை ஒன்று விழுங்கிஏப்பம் விட உள்ளுக்குள் திட்டம். சேர்ந்த பிறகு அவை செயல்படும் முறை இதைத்தான் காட்டுகிறது

இன்னொன்றையும் அவை நினைவுபடுத்துகின்றன. மூன்று வழிப்போக்கர்கள். வெளியூர் ஒன்றிற்குச் செல்கிறார்கள். அடர்ந்த அடவியைக் கடந்து செல்லவேண்டும். அடவியோ ஆபத்து நிறைந்தது எனவே

(தொடர்ச்சி 9-ம் பக்கம்)

"நம்நாடு"

முப்பெரும் விழா மலர்!

'நம்நாடு' முப்பெரும் விழா மலர் மிகச்சிறந்த முறையில் உருவாகிறது!

கழகத் தலைவர்கள், முன்னணி எழுத்தாளர்கள் தோழமைக் கட்சித் தலைவர்கள் மட்டுமின்றி வெளி மாநிலத் தலைவர்களும் மலருக்கென எழுதுகிறார்கள்.

பெரியார், அண்ணா எழிலுருவம் தாங்கி மூவண்ண முகப்புடன் கருத்துக் கருவூலமாக மலர் அமையவிருக்கிறது.

கழகத் தோழர்கள் ஒவ்வொருவரும் படித்துப் பாதுகாக்க வேண்டிய இந்த மலரின் விலை

இரண்டே ரூபாய்தான்!

மலர் வேண்டுவோர் உள்ளூர் விற்பனையாளரிடம் பெயரைப் பதிவு செய்து கொள்க.

விற்பனையாளர்கள் தங்கள் தேவைக்கு உடன் எழுதுக!

--நிர்வாகி,
'நம்நாடு'.

இது அதைவிட இரகசியம்!

பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியாருக்கு நூற்றாண்டு விழாவையும், பேரறிஞர் அண்ணாவின் பிறந்த நாளையும் இணைத்துக் கொண்டாடுகிறோம் இவ்வாண்டு.

நம்மையெல்லாம் ஆளாக்கி விட்ட தன்மான இயக்கத் தலைவர்களுக்கு விழா எடுப்பதில் நமக்கெல்லாம் மகிழ்ச்சி பிறக்கிறது. பெருமை கொள்ளுகிறோம்.

நாடு செல்லும் போக்கில் இன்னமும் நம்மோடு ஐயாவும் அண்ணாவும் இல்லையே என்று மனம் கலங்காமலில்லை. என்றாலும் அவர்கள் கூறிய கருத்துக்களை மனதில் கொண்டு தானைத் தலைவர் கலைஞர் தலைமையில் கழகத் தோழர்கள் திரண்டு நின்று எத்தனை இரகசியங்கள் 'சதி'கள் நடைபெற்றாலும் முறியடிப்போம் என விழாநாளில் சூளுரைத்துக் கொள்கிறோம்.

இன்றைய 'பிரபல' பத்திரிகைகளெல்லாம் கூட நமக்கெதிராய் நம்மை அழிக்கக் கங்கணம் கட்டிக்கொண்டுள்ளன என்பதை அறியாமலில்லை நாம்.

அந்தப்பத்திரிகைகளை எப்போதுமே நாம மதித்ததில்லை. அந்தப்பத்திரிகைகளின் இருட்டடிப்பிலேதான் நாம் வளர்ந்தோம்.

அந்தப் பத்திரிகைகள் நம்மை எதிர்க்க-எதிர்க்கத்தான் நாம் மேன்மேலும் வளர்ந்தோமென்பதை மறைத்திடத் தேவையில்லை.

தந்தை பெரியாரால் 'மவுண்ட்ரோடு மகாவிஷ்ணு' என்று வருணிக்கப்பட்ட ஆங்கில ஏடு ஒன்று அண்மையில் புனிதராட்சியால் ஆஸ்தானப் பத்திரிகையாக அங்கீகரிக்கப்பட்டு விட்டது என்றே சொல்ல வேண்டும்.

அடுத்து அந்த இடத்தைப் பிடிக்கப் படாத பாடுபட்டு முண்டியடித்துக் கொண்டிருக்கிறது வடபுலத்து மூலதனத்தில் நடைபெறும் ஒரு தமிழ் நாளேடு குறிப்பாக பல சென்னை நாளிதழ்களெல்லாம் புனிதரின் நியாயமற்ற போக்கைக் கண்டிக்க முன் வருவதில்லை மாறாக மேல் விழுந்து துதிபாடிக் கொண்டிருக்கின்றன. தமிழ் நாட்டில் நடைபெறும் அதிக்கிரமங்களை வடநாட்டுப் பத்திரிகைகள் வெளியிடுமளவிற்குக் கூட இங்கிருக்கும் பத்திரிகைகள் செய்திகளை பிரசுரிப்பதில்லை எனலாம்.

எம். ஜி ஆரை ஆதரிப்பதற்கென்றே பிறந்து விட்ட இதயமில்லாத ஏடுகளைப் பற்றி நாம் கவலைப்படவில்லை.

தவறு கண்ட பின்னும் கண்டிக்கத் தயங்கமாட்டோம்' எனக் கூறிக்கொள்ளும் 'விகடர்'கள் கூட சட்டமன்றத் தேர்தலிலே கழகம் பெற்ற வெற்றியைத் தாங்கிக் கொள்ள முடியாமல் "சென்னையில் நீரோட்டம் வேறு மாதிரியாக இருக்கிறதே" என்று கவலைப்படுவதுபோல் வயிற்றெரிச்சலைக் காட்டிக் கொண்டுள்ளனர்.

எம். ஜி; ஆரைத் துதிபாடுவதற்கென்றே மூடிக்கிடந்த பத்திரிகை திறந்து கொண்ட போது கலைஞரை ஆதரிப்பது போல் போக்கைக் காட்டி கழகத் தோழர்களை இழிவுபடுத்தத் தவறவில்லை.

ஒரு நடிகரைக் கொலை செய்யத் தூண்டினர்கள்—முயற்சித்தார்களென்று தொடரப்பட்ட பொய் வழக்கில் கழகத் தலைவர் மற்றும் முன்னணித் தோழர்கள் நிரபராதிகள் என்று விடுவிக்கப்பட்டனர்

ஒரே ஒரு தோழருக்கு மட்டும் (செபாஸ்டியனுக்கு) அபராதம் அல்லது சிறைத் தண்டனை அனுபவிக்க வேண்டுமென்று கோர்ட் தீர்ப்புக் கூறுபது.

இதைத் தலையங்கமாகத் தீட்டிட முன்வந்த அந்த ஏடு கலைஞர் கொலை செய்ய முயன்றார் என்பதை நம்மாலும் ஏற்க முடியவில்லை—நம்ப முடியாது. இதைப் போலவே

சர்க்காரியா கமிஷன் சம்பந்தப்பட்ட வழக்குகளிலும் கலைஞர் குற்றமற்றவர் என்று நிரூபித்துக் கொள்ள வேண்டும் என்று தன் உள்ளக்கிடக்கையை வெளிப்படுத்தியுள்ளது இராமாயணத்திலிருந்து ஒரு மேற்கோள்! தீக்குளித்துத்தான் தூயவள் என்று நிரூபித்துக் கொண்ட சீதையைப் போல' என்று குறிப்பிட்டது.

"காலங் கடந்தேயாயினும் கலைஞரையும், கழகத்தையும் புரிந்து கொண்டதே அந்த ஏடு' என்று நாம் மகிழ்ந்து படித்தபோது கடைசியில் விஷத்தைக் கக்கித் தனது இயல்பை வெளிக்காட்டி விட்டது.

தோழர் செபஸ்டியனுக்குத் தரப்பட்ட தண்டனையைக் குறிப்பிட்டு இனிக் கலைஞர் அவரைத் தோழராகக் கொண்டு தோழர் என்று அழைக்கலாமா? என்று வினவியிருக்கிறது.

குற்றச் சாட்டிற்குள்ளாகி தண்டனையனுபவித்த பல தேசபத் தோழர்களெல்லாம் காலத்தால் தலைவர்களாகவும் தியாகிகளாகவும் ஆகிவிட்ட சான்றுகளை ஆயிரமாயிரம் காட்டிடலாம். என்றாலும் நமக்கிருக்கும் பணியும், நாம் மேற்கொண்டிருக்கும் கொள்கை இலட்சியப் பயணத்தில் இவற்றிற்கெல்லாம் பதிலளித்துக்கொண்டிருக்க இயலாதென்று ஒதுக்கித் தள்ளுகிறோம்;

"எம் ஜி ஆரைத் தோற்கடிப்பதானது கலைஞரின் கரத்தைப் பலப்படுத்துவதுபோலாகும்" எனும் பொருள்பட 20—7—78 தேதிய குமுதம் இதழிலே தீட்டப்பட்ட தலையங்கம் கூறியது.

அண்மையில் நடைபெற்று முடிந்த மதுரை நகராட்சித் தேர்தலின் போது நாணிக் கோணி குமுதம் கூறியது காலங் கடந்து விட்டாலும் நாம்சிந்திக்கத்தான் வேண்டும்

★★★★★★★★★★★★

குடியேற்றம் சுப்பிரமணியன்

★★★★★★★★★★★★

இத்தனைக்கும் அந்த ஏட்டிற்கென்று ஒரு கொள்கையுண்டு: ஒரு கொடி நிழலிலே வண்ண அட்டையைத் தயாரிக்கிறது வெளிப்படையாகக் கூறுவதென்றால் அது ஒரு கட்சியின் வளர்ச்சிக்காக இரவும்பகலும் பாடுபடுகிறது அந்த ஏட்டின் கட்சியும்மதுரைமாநகராட்சித் தேர்தலிலே போட்டியிட்டது தேர்தல் பிரகடனமும் வெளியிட்டது. 'மதுரையை இம்முறை நாங்களே கைப்பற்றுவோம்' என வீர முழக்கமெழுப்பினர்கள் நியாயம் பார்க்கப் போனால் "மதுரை மக்களே மாதாக் கட்சிக்கே வாக்களியுங்கள்! மறந்தும் வேறுகட்சிக்குஓட்டுப்போட்டு விட வேண்டாம்' என்று தானே எச்சரித்திருக்க வேண்டும்? செய்ததா அப்படி? இல்லையே! ஏன்? இதைத்தான் மக்கள் சிந்திக்க வேண்டும். மத்தியில் மாதா ஆட்சி செலுத்திய போதே தமிழ் மாநிலத்தில் அவர் சட்சி பூஜ்பம்!'

குடியரசு ஆட்சியைக் கொண்டு வந்து காலூன்றிக் கொள்ளலாமெனக் கணக்குப் போட்டிருந்தனர். அதுவும் நடைபெற முடியாமல் போனதால் கழகத்தை அடியோடு அழித்திடவும் திட்டம் தீட்டினர்

அதன் விளைவே கமிஷன்கள், போலி வழக்குகள். அதிலும் கழகம் கலகலக்கவில்லையாதலால் வேறு வழியில் வருமான வரி அதிகாரிகளை அனுப்பி எப்படியோ கழகத்தைபிளந்து விட்டதுபோல் பிரமைகொண்டனர்.

இதன் விளைவாக முன்னிலுமதிகமான வலிவுடன் சழகம் மிளிர்வதைக்கண்டு வயிற்றெரிச்சல் தொண்டு எங்கே கழகம் மக்களின் ஆதரவைப் பெற்று ஆட்சியைக் கைப்பற்றிக் கொள்வார்களோ என்ற பயம் இயற்கையாய் அவர்களுக்கு ஏற்பட்டுவிட்டது. அதனுல்தான் எம். ஜி ஆர். தோற்றால் கலைஞர் வந்துவிடுவரோ என்று கவலைப்படுகிறார்கள்.

அதன் விளைவே குமுதத் தலையங்கம்.

"தி. மு. க வும், அ. தி. மு. க வும் ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள்' - இது காமராசர் கூறியதாகும் இதைக்காங்கிரஸ்காரர்கள் மறந்திருக்க மாட்டார்கள். கலைஞர் வென்றாலென்ன — எம். ஜி. ஆர். தோற்றாலென்ன? காமராசர் கண்ணோட்டப்படி இருவரும் கழகத்தவர்கள்தானே என்று அவர்கள் எண்ணவில்லையே ஏன்? கலைஞர் தோற்கவேண்டுமென்றே துடிக்கிறார்களே அது ஏன்? அதுதான் 'வருணாசிரம தர்ம' இரகசியம்!

அதைவிட இரகசியம் என்பதுபோல் கீழ்க்காணும் இரண்டையும் இணைத்துப்பார்த்தால் தெரியும்

அண்மையில் ஐதராபாத்திலிருந்து சென்னைக்கு மாற்றலான கம்யூட்டர் விழா ஒன்றில் பேசிடும்போது முதல்வர் குறிப்பிட்டிருக்கிறார்.

"பல்வேறு துறைகளில் திட்டமிடுவதில் கடந்தஓராண்டில் அதிக அபிவிருத்தி ஏற்பட்டிருக்கிறதென்றும்; வைத்தியக்கல்லூரிகளுக்கு மாணவர்களைத் தேர்ந்தெடுத்தது அவைகளுக்கு ஓர் உதாரணமாகுமென்றும் இராமச்சந்திரன் கூறினர்.

பொதுப்பட்டியலிலும் (அதாவது மாணவர் திறமையை மட்டும் கொண்டு தேர்ந்தெடுக்கப்படும் மாணவர் பட்டியல்) ஹரிஜன மாணவர் கணிசமான சதவிகிதத்தினர் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். இது குறித்து நான் மகிழ்ச்சி அடைகிறேன். மற்றபடி எவ்வளவு காலந்தான் ஸ்தானங்களை ஒதுக்குவது நீடிக்கமுடியும்? முற்போக்கு மாணவர்களுக்கு சமமான நிலையை அவர்கள் (ஹரிஜன மாணவர்கள்) அடையவேண்டாமா? ஒதுக்கீடு தேவைப்படாத அளவிற்கு அவர்கள் வரவேண்டாமா? என்று அவர் கேட்டார்'

(இது 'தினமணி 21.8-78-ல் வெளியானதாகும்)

தன்மானத் தந்தை பெரியாருக்கு நூற்றாண்டு விழா அரசாங்கத் தரப்பில் கொண்டாடப் போவதாய் அறிவித்துள்ளவர்.

அண்ணா வழியே என் வழி, என்று நாள் தவறாமல் நாமம் ஜெபித்துக்கொண்டிருப்பவர்.

அய்யா அண்ணா திட்டங்களை எப்படிக் குழிதோண்டி புதைத்து விட்டு அந்தச் சமாதி மீது நின்று அவர்கள் இனிக்கும் விதமாக பேசுகிறார் பாருங்கள்.

"எம். ஜி ஆரை பலவீனப்படுத்துவதும் கருணாநிதியைப் பலப்படுத்துவதும் ஒன்றே,"

அ. தி. மு. க வுக்கு எதிராகப் போடப்படும் ஒவ்வொரு ஓட்டும் நேரிடையாகவோ. சுற்றியோ கருணாநிதிக்குப் போட்ட ஓட்டாக முடியும்!"

20—7—78 தேதிய குமுதத் தலைபங்கத்தை ஒப்பிட்டுப் பார்ப்பவர்களுக்குப் புரியும் இந்த இரகசியம்!

★

நம் நாடு
ஆசிரியர்: மு.கருணாநிதி

சந்தா விவரம்

ஓராண்டு சந்தா ரூ. 25-00
ஆறுமாத சந்தா ரூ. 12-50
மூன்று மாத சந்தா ரூ. 6-25

மூன்று மாதங்களுக்குக் குறைந்த சந்தா ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

விரைவில் தொடங்குகிறது
'நம்நாடு' இதழில்
'ஊழ் வினை'
தென்னரசு எழுதும் மற்றொரு
உண்மைக் கதை

டாக்டரை நேரில் சந்திக்க
முடியாதவர்களுக்கு வைத்திய ஆலோசனை இலவசம். உங்களுக்கு அல்லது குடும்பத்தில் ஏற்பட்டிருக்கும் வியாதிகளின் முழு விவரங்களை உலகப் புகழ் பெற்ற
பழனி டாக்டர்
எஸ். காளிமுத்து
R.M.P. (IND. V. V. C. A. I. H.)
பழனி — 624601
என்ற விலாசத்திற்கு எழுதி அனுப்புங்கள். எங்கள் ஆலோசனைகளும், சிகிச்சை விபரங்களும் உங்கள் விலாசத்திற்கு இலவசமாக அனுப்பப்படும்.
போன்: 316, 316 ஏ. 420 தந்தி: சித்தர்

வாலி மன்னன்

நற்சிந்தைப் பொற்குன்று கிட்கிந்தை நல்லோன்;
மற்போரில் வாட்போரில் நிகரில்லா வல்லோன்;
தற்கொண்டான் தனைப் பேணும் தமிழணங்கு தாரை;
கற்கண்டு மொழியாலே களிப்பூட்டும் பாவை;
பற்கொண்டாள் முத்தெடுத்து
விற்கொண்டாள் புருவத்தில்; சந்திரனும்
கற்கின்றான் அவளிடத்தில் ஒளிகாட்டும் புதியவித்தை;
தோள்வலியால் வாள்வலியால் தொகை தொகையாய்ச்
சூழ்கின்ற பகைமை எல்லாம்
தூள்தூளாய்ப் போய் ஒடுங்கும் —தொல்லை நீங்கும்!

வேள் பாரி; வழங்குவதில்! தமிழின்
தாள்வீழ்ந்து வணங்குவதில் வள்ளுவனே! அந்த
வல்லவனின் ஆட்சியிலே வறுமையில்லை;
அதனாலே வாட்டமில்லை!
நல்லவர்க்கும் களங்கமொன்று இருப்பதுவே
இயற்கையன்றோ?
கொல்லவரும் மலைப்பாம்பு; கொடும் விலங்கு;
கொள்கையிலா முழுமூடம்;
எல்லையில்லாச் சுயநலத்தின் மொத்த உரு;
இழிபெயரோன் சுக்ரீவன்—இளையோனாய்ப்
பிறந்து விட்டான்!

அனுமன் எனும் ஓரமைச்சன் அவனுக்குப்
பெருந்தோழன்;
மனுவின் முறை வேண்டுமெனப் போராடும் மதயானை!
கணுவிலெல்லாம் சுவைக்கின்ற கரும்பினிலே
அணுஅணுவாய் வேப்பெண்ணெய் கலப்பதற்குத்
திட்டம் யாத்தான்;
தினை மாவாம் தென்தமிழை அழிப்பதற்குத்
திசைகெட்ட
ஆரியத்தின் துணைநின்ற துரோகி அவன்
"அண்ணனையே சாய்த்துவிட்டால் அரியணை
உன் காலடியில்—
அறிவாய் நீ சுக்ரீவா!" என மொழிந்து
முட்டாளை முடுக்கிவிட்டான்
தருணமது பார்த்திருந்த இருவருமே கூடிப்பேசி
அவுணன் எனும் முரடன்தன்னை அண்ணன்பால்
ஏவிவிட்டான்.
மற்போரில் எனை வெல்வார் யாருமில்லை;
மறுப்போர்கள் போட்டியிட வரலாமென்று
மார்தட்டி எதிர்நின்ற அவுணன்தன்னைப்
புன்னகையால் வரவேற்றுப் போர் முரசு
கொட்டிவிட்டான்;
மண்ணாளும் மாமன்னன்; மறத்தமிழர் குலவிளக்கு!
எத்தனைநாள் நடக்குமிந்த மற்போர்?
இருவருமே பெருவீரர்; எனப்பேசும் ஒருகூட்டம்!
மன்னனினும் வல்லவனாய்த் தோன்றுகிறான்!
இன்னலேதும் வந்திடுமோ வேந்தனுக்கு? என
ஏங்கும் ஒரு கூட்டம்!
தோற்றத்தால் மலைபோன்றான்; தோளிரண்டும்
உரல் போன்றான்;
தோற்றுத்தான் போவார் மன்னர்; எனத்
துவளும் ஒரு கூட்டம்!
அனைவருமே எதிர்பார்த்த அதிர்ச்சி ஏதும்
நிகழா வண்ணம்
அவுணனும் பெருவீரன் ஓர் அடியில் மயங்கி வீழ்ந்தான்!
அடுத்த அடி..."அம்மாடி"..."அப்பாடி"...!
பின் அவனைப் பிடிப்பதற்கு ஆளில்லை ..
மலைக்குகையில் ஒளிந்துவிட்டான்!
சூழ்ச்சிதனை முடிக்காத சுக்ரீவன் அண்ணனிடம்
"அவுணனைப்பிடித்து வந்து நாட்டுக்கு
வேடிக்கை காட்டல் நன்று!
அண்ணாவே தொடர்வீர்" என்று குகைதன்னைக்
காட்டினான் நின்று!
தம்பியின் உள்ளமெல்லாம் தணல்மலை என்று சொன்னால்
நம்பிடமறுக்கும் அண்ணன், நடந்திட்டான்
குகையை நோக்கி!
குகைக்குள்ளே போனசிங்கம் திரும்பாமல் சாவதற்குப்
பகைக்குணத்தார் திட்டமிட்டார்—செய்துவிட்டார்!
ஆனைகளைக் கொண்டுவந்து பாறைகளை உருட்டி வைத்து
அடைத்துவிட்டார் குகைவாயில்;
அழித்துவிட்டோம் அரிமாவை என நினைப்பும்
அடைந்துவிட்டோம் அரியணையை என நகைப்பும்
கொண்டவராய்க் கொலுவீற்றுக் கூறலானார்..
"கிட்கிந்தைப் பெருமக்காள்! உம் தந்தை, என் அண்ணன்
இறந்தசேதி பெருவிந்தை!
எண்ணவே நோகுதெங்கள் சிந்தை!
தந்திரமாய்ப் போராடி ஓட்டம் காட்டி
ஒப்பற்ற வீரன்தன்னை
அந்தரத்திற்கனுப்பிவிட்டான் அவுணவீரன்
அய்யகோ! அவலம்! அவலம்!
அழுவதால் பயனுமில்லை; ஆற்றுவார்
யாருமில்லை' ஆண்டவனைத்
தொழுவதே வேலையென்று ஆகிறேன் துறவியாக"
எனச் சொல்லிப் பொய்க்கண்ணீர் பொல
பொலவென உதிர்த்துவிட்டான்!
"போகாதீர் இளையவரே. போகாதீர்!
புவியாளும் உரிமைதனை நீர்பெற்று
எமைக்காக்கும் பொறுப்பேற்பீர்!" எனப்
புலம்பி வழிமறித்தார் - புரியாதோர் புவிமக்கள்!
"மறுப்பதற்கு இயலவில்லை மந்திரியே: மாருதியே!
மணிமகுடம் எடுத்துவாரும், தலையில் மாட்டும்!
பொறுப்பெதற்கு எனப்பார்த்தேன்; பொதுமக்கள்
விட்டால்தானே?
வெறுப்பதற்கு முடியவில்லை அண்ணன் நாட்டை"
சூழ்ச்சியிலே திறன்மிக்க சுக்ரீவன்— மொழிகேட்டுச்
சுற்றிநின்ற மாந்தரெல்லாம் மகிழுகின்றார்
சுறுசுறுப்பாய் முடிசூட்டும் காரியத்தில்
சூறைக்காற்றாய்ப் பறக்கின்றான் ஆஞ்சநேயன்—
அவ்வமயம் புயற்காற்றாய், பெருநெருப்பாய்
புகுந்திட்டாள் தாராதேவி!
'முயற்கொம்பே முடியுனக்கு, சுக்ரீவா! தெரிந்துகொள்க!
அயற்கொள்கை தமிழ்நாட்டில் பரவுதற்கு
அனுமனுடன் கூடிக்கொண்டு அண்ணனையும்
சாய்த்துவிட்டாய்!
தம்பியெனும் இலக்கணத்தின் விதிவிலக்கே
நம்பிக்கைத் துரோகி! உந்தன் ரத்தத்தில் உணர்வு இல்லை!
தும்பிக்கு மலரிடத்தில் இருக்கின்ற பற்றுக்கூடத்
தூயதமிழ்நாட்டின் மீதுனக்கு இல்லையென்பேன்.
நாடாள வேட்கையென்று அண்ணனிடம் கேட்டிருந்தால்
தாராளமாய்த் தந்துவிடும் தங்கமன்றோ என் கணவர்?
போராடிப் பெறுவதற்கும் திறனில்லாக் களக்கோழை'
தேன்போன்ற பேரரசின் சாரதியாய் அமர்ந்துவிட்டாய்—
தூதூ' வெட்கம்—வெட்கம்'
துணிவிருந்தால் தூக்கு வாளை!
தோகையெந்தன் எதிர்ப்புக்குப் பதில் சொல்லி
[illegible]நாட்டை ஆளு' அந்தத்
தொடைநடுங்கி அனுமன் எங்கே?'
எனக் குமுறும் தாரையிடம், இழி குணத்தான் சுக்ரீவன்
படைநடுங்கப் போர்புரியும் மாவீரன் மனைவியெனினும்
இடை குலுங்க நடைகாட்டும் பெண்தானே நீஅறையில்
அடைகாக்கும் பெட்டைக்கு அம்பலத்தில் வேலையில்லை—
வேலையில்லை—போ, போ" என்றான்—

"ஆரையடா சொன்னாய் அது?" எனக்
கிளம்பித் தாரை
அனற்பிழம்பாய் வார்த்தைகளைக் கொட்டலானாள்!
"அடைகாக்கும் பெட்டையின்
முட்டைக்குள்ளிருந்து வந்த
சேவற்குஞ்சே, செயலற்ற ஆண்மகனே
சிறுநரியே, சிற்றெறும்பே
தாய்க்குலத்தை இகழ்வதற்குத் தடித்த
நா படைத்தவனே!
நாய்க்குலத்தின்பால் நன்றிக்குப் பொருள்
கேட்டுத் தெரிந்துகொள்வாய்
நடைகட்டு இப்போது இதைவிட்டு" எனப் பாய்ந்தாள்!
"உன் கொட்டத்தை அடக்குதற்கு ஆளில்லை
எனத் துணிந்தாய்!
பட்டத்து ராணியென மரியாதை பார்த்தால் அதைப்
பயமென நினைத்தாய்!
சட்டத்தின் துணைகொள்ளச் சந்தர்ப்பம் அளித்தாய்
துட்டப்பெண் உன்னைச் சிறையினிலே போடவேண்டும் —
உடன் ஆகட்டும் காவலரே வேலை" என்று
உற்கை விழியிரண்டாலே உத்திரவு தந்திட்டான்;
"நிறுத்தடா தம்பி நிலமாளப் புதிதாக வந்தவனே
உலுத்தையென எண்ணிவிட்டாய் பெண்ணை
சிறுத்தையெனப் பாய்ந்திடுவாள் அறிவாய்
கருத்தமலைக் குகையினிலே என்னைப் பாறைக்
கதவாலே மூடிவிட்டோம் என்று
களிப்பாலே துள்ளுகின்றாய், நன்று'

கலைஞர் கருணாநிதி

கனவல்ல தம்பி இது; நான்தான் உன் அண்ணன்—
காலஞ்செல்லாத கிட்கிந்தை மன்னன்.
ஆனையும் அனுமனும் அன்புள்ள தம்பியும்
அடைத்திருந்த பாறைதனை
உதைத்தெறிந்த விதந்தன்னைக் காட்டுகின்றேன்
பாரீர்" என்று
கர்ச்சித்து உள்நுழைந்தான் வாளிமன்னன்
அண்ணனைக் கண்டதம்பி, அனுமனுடன் மறைந்தோடி
ஆவி பிழைத்தோமென்று அடவியிலே திரியலானான்.
அங்கொருநாள் -
மனைவிதனைப் பறிகொடுத்த இராமன் எனும் 'மாவீரன்'
இலக்குமணத் தம்பியுடன் இளைப்பாற வந்தபோது
இளநீர்கள் பரிமாறி உபசரித்தான் சுக்ரீவன்
"இருடிகளின் மனையென்றால் இனியபானம்
கிடைத்திருக்கும்
இருக்கட்டும் பரவாயில்லை யென அருந்தினான்
இராமபிரான்,
பின்னர்,
"இளங்கொங்கைத் துடியிடையாள் என் மனைவி –
காமக்
களம்புகுந்து வெற்றிகாணும் கட்டழகி சோம
போதையிலே காணுகின்ற சுகமனைத்தும், அவள்
பார்வையிலே காண்பதற்கு இயலுமென்பேன்!
சீதையெனும் பேருடையாள்! செந்தாமரை
மொட்டு, தனம்!
அவளில்லை இப்போது என்னிடத்தில்
இருக்குமிடந்தேடி என்பசிக்கு அவளை
இட்டுவரத்துணை வேண்டும் எனக் கேட்டான்
"துணைதருவோம் - படைதருவோம் - ஆயின் ஒன்று!
இணையில்லாப் போர்வீரன் என் அண்ணன் –
வாட்போரில் மற்போரில் ஈடில்லை அவனுக்கு
வாளி எய்வதிலும் ஆளில்லை அவனை வெல்ல' அதனாலே
வாளியென்னும் சிறப்புப்பெயர் பெற்றான்!



வஞ்சகமாய் அவன் உயிரைப் போக்குவதற்கு
மார்க்கம் சொன்னால்
வந்துவிடும் அவன்நாடு என் வசமாய் –
அதன்பின்னர் உதவுகின்றேன்' எனச் சொன்னான்
சுக்ரீவன்
திருநாட்டைப் பறிப்பதற்கு வகுத்தார்கள்
சூழ்ச்சித் திட்டம்;
இருள்மனத்தான் சுக்ரீவன் எழுந்துவிட்டான்
கிட்கிந்தைக்கே!
அருள் முகத்தான் வாளிமன்னன் அமளிதன்னில்
ஆருயிரின்
சுருள்கூந்தல் வருடிக்கொண்டு சுகங்கண்டான்.
வெளியே,
பொருள் புரியா ஒரு கூச்சல்;
"பொருதற்கு வருகின்றாயா?"
என ஒலிகேட்டுப் படுக்கைவிட்டு எழுந்த புலி
எதிர்நின்ற தம்பிகண்டு வியப்படைந்தான்!
அண்ணனின் பலமனைத்தும் அறிந்த தம்பி
அச்சமின்றித் தோள்தட்டி வருதல்கண்டு,
ஐயத்தால் அரசி நைந்தாள்; ஆயின் என்?
வீரனைத்தடுப்பதோ? விடைகொடுத்து
அனுப்பி வைத்தாள்.
விழியெல்லாம் நீர் பெருக வீழ்ந்துவிட்டாள் பஞ்சணையில்;
"மற்போரோ விற்போரோ, வாட்போரோ?'
எனக்கேட்ட மன்னனிடம்
"மற்போரே வேண்டு மென்றான் சுக்ரீவன்:
இருமலைகள் மோதுதல்போல் மோதிக்கொண்டார் —
இடியெனவே இருவருமே முழங்கலானார்
நொடிப்பொழுதில் போர் முடியும் எனக் கணக்குப்
போட்டுவிட்டான் வாளிமன்னன்
கையினிலே தம்பிதனைத் தூக்கிவைத்துக்
கரகரவெனச் சுழற்றிவிட்டான்.
கைப்பந்தானான் வாளிக்குச் சுக்ரீவன்
கணப்பொழுதில் உயிர்போகும் - வெற்றி வாளிக்கே
என்ற நிலை—
மரப்புதரில் ஒளிந்திருந்த மாவீரன் ராமன்,
வாளிமார்பகத்தில் குறிபார்த்து ஓர் அம்புவீச
அணையுடைத்து எழுநீத்தம்போல
அணிமார்பில் ரத்தவெள்ளம் பாய –
நிலம் வெடித்துக்கிளம்புகின்ற நீரூற்றுப் போல
நெஞ்சில் எழுகின்ற குருதியூற்று மேகத்தில் மோத;
"ஆரடா மறைந்திருந்து தாக்கிய வீரன்?
ஆகாகா ராமனோ? தர்மத்தின் தூதனோ?
பாரடா தமிழ்ரத்தம் பாய்வதை மண்ணில்!
ஏனடா திரிகின்றாய் வீரனாய் வீணில்?
விழுப்புண் படுதலே வீரம்—அந்தச்
செழிப்பில் உயர்வதே மானம்—
மானம் பெரிதென்பவன் தமிழன்—அதை
மறுப்பவனெல்லாம் பகைவன்;
பகைவனுடன் உறவாடும் தம்பி—அவனைப்
பகுத்தறிவு உலகம் பாராது திரும்பி .
உளுத்தவில்லை முறித்ததனால் புகழ்பெற்ற வீரன்!
உத்தமியை மீட்பதற்குத் துணைதேடும் தீரன்,
வெளுத்ததெல்லாம் பாலெனவே நம்புகின்றதமிழர் - சிலர்
இருத்தலினால் நடமாடு சூரன்
எதிர்நின்று போர்புரியும் ஆற்றலில்லாக் கோழை
பதர்நின்று நெல் அழிந்தால் பயன்தருமோ வாழை?
நான் மாண்டு நீயிருந்தால் பரவிடுமோ வீரம்?
எனக் கேட்டான் வாளிமன்னன்—
முரசறைந்தான் கேள்வியாலே
முடிப்பதற்குள் வீழ்ந்துவிட்டான் பிணமாக!
செய்தி பரவியது - செந்தீ பற்றியது -
செந்தாமரையாள் தாராதேவி வீழ்ந்தாள் வந்து!
"மன்னவரே தழுவதற்கு நானிருக்க
மண்மாதைத் தழுவினீரோ?' என அழுதாள் ஓலமிட்டாள்;
ஓடுகின்ற குருதி ஆற்றைக் கண்ணீரால் வென்றாள்—
கணவனுடன் சென்றாள்
தமிழ்நாட்டுப் பண்பு கண்டான்—
தலைகுனிந்தான் ராமன்.

பாவம், அப்பாவிமனிதர்

நாடாளுமன்ற மேலவை உறுப்பினர் பதவி முடியும் வரை தி. மு. கழகத்தில் இருந்துவிட்டுப், பிறகு விலகி ம. தி மு. க-வில் சேர்ந்து, அங்கு தலைமை நிலையச் செயலாளராக நியமிக்கப்பட்டு, சில நாட்களிலேயே அப் பதவியிலிருந்து 'விடுவிக்கப்' பட்டவரான ஒருவரை தற்செயலாகச் சந்திக்க நேர்ந்தது. 'இப்பொழுது நீங்கள் எந்தக் கட்சியில் இருக்கிறீர்கள்?' என்று கேட்டதற்கு. ' நான் எந்தக் கட்சியிலும் இல்லை; எனக்கு இந்த ஆளையும் பிடிக்கவில்லை. அந்த அளையும் பிடிக்க வில்லை. எனவே யார் பின்னுலும் போக வில்லை' என்று பதில் சொன்னர். (கலைஞரையும், நடிகரையும்தான் 'இந்த ஆள், அந்த ஆள்' என்று குறிப்பிட்டார்)

இப்படிச் சொன்ன அந்தத் 'தத்துவ மேதை' எத்தனை நாள் இந்த உறுதியுடன் இருந்தார் என்று கேட்கிறீர்களா?

எண்ணி இரண்டு நாள்கூட ஆகவில்லை. பந்திரிகையைப் புரட்டினல் 'புரட்சித்தலைவர் முன்னிலையில் அ.தி மு க.-வில் இணைந்தார்' என்று படத்துடன் செய்தி வெளிவருகிறது!

எந்தக் கட்சியிலும் சேரப் போவதில்லை என்று உறுதியுடன் இருந்தவருக்கு இரண்டு நாளுக்குள் ஏன் இந்தத் தடுமாற்றம்?

''...'அந்த ஆளையும் பிடிக்கவில்லை' என்று கூறியவருக்கு இரண்டே நாளில் அந்த ஆள்மீது ''பிடித்தம்'' ஏற்பட்டது எதனல்?

தஞ்சை நாடாளுமன்ற இடைத் தேர்தலில் அவரை வேட்பாளராக நிறுத்த நடிகர் கட்சித் தலைவர் எண்ணியுள்ளதாகவும், எனவே உடனே கட்சியில் சேருமாறும் யாரோ சிலர் அவரிடம் வந்து ஆசைகாட்டியிருக்கிருர்கள்!

பாவம்! தேர்தல் டிக்கட் தனக்குக் கிடைக்கப் போவதாக நம்பி, 'இணைந்து விட்டார்.

நாடாளுமன்ற இடைத் தேர்தல் எப்போது வரும் ஏன்றே தெரியவில்லை. மத்திரி சோமசுந்தரம் தமது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினமா செய்வது எப்போது? இடைத் தேர்தல் வருவது எப்போது?

அப்படி தேர்தல் வந்தாலும் இந்த அப்பாவிக்கு டிக்கட் கிடைக்கும் என்பது என்ன உறுதி? அப்படிக் கிடைத்தாலும் இவர் ஜெயிக்கப் போவது என்ன உறுதி!

பாவம், 'பலிக்கடா' ஆவதற்குத் தலையை நீட்டிவிட்ட அந்த 'அப்பாவிமனிதருக்கு' நமது அனுதாபம் உரித்தாகட்டும்'

இப்போது அவர் எங்கே?

தி. மு. க.வில் எம். எல். சி. ஆகி, 'எமர்ஜன்சி' காலத்தில் கழகத்தைவிட்டு வெளியேறிவிட்டதாக அறிக்கை விட்ட ஓர் எழுத்தாளர், சிலமாதங்களுக்கு முன் நமதுகழகப் பிரமுகர்ஒருவரின் வீட்டுக்குத் திடீரென்று வந்தார். 'நான் மீண்டும்கழகத்தில்சேர்ந்து விடுகிறேன்; கலைஞரிடம் சொல்லி கொஞ்சம் பணம் வாங்கிக்கொடுங்கள் !என்று கேட்டார்.

கழகத்தில் சேருவதும் சேராமல் இருப்பதும் உங்கள் விருப்பம். இதற்காக பேரம்பேசவேண்டாம். கலைஞரை நீங்களே நேரில் பாருங்கள்என்றுசொல்லியனுப்பிவிட்டார் அந்தக் கழகப் பிரமுகர்.

சில நாட்கள் கழித்துப் பார்த்தால், நடிகர்கட்சியின் நாளேடு ஒன்றில் அத்த எழுத்தாளர் நிர்வாக ஆசிரியராகி விட்டதாகச் செய்தி வெளியாகிறது. அடுத்தடுத்து அத்த எழுத்தாளரின் 'சண்டப்பிரசண்ட' கட்டுரைகள் வெளிவருகின்றன.

இன்னும் சில நாள் கழித்துப் பார்த்தால் அந்தப் பத்திரிகையில் 'நிர்வாக ஆசிரியர் என்று இருத்த அந்த எழுத்தாளரின் பெயரையே காணும்!

இப்போது அவர் எங்கேயோ ?
அவர் 'விலாசம்' என்னவோ!

'சேனு'

அமைச்சர்மீது வழக்கு!

இராஜஸ்தான் உயர் நீதிமன்றத்தில், மத்திய அமைச்சரான வாஜ்பாய் மீது ஒருவர் வழக்குத் தொடர்ந்துள்ளார்.

அமைச்சர்மீது அவர் கூறும் புகார்:

முன்னுள் இந்தியத் தலைமை அமைச்சர் இந்திரா காந்திக்கும், பாகிஸ்தான் முன்னுள் அதிபர் பூட்டோவுக்கும் இடையே நடந்த பேச்சு வார்த்தைகளை நாடாளுமன்றத்தில் வெளியிட்டுள்ளார் வாஜ்பாயி. காப்பாற்றப்பட வேண்டிய இந்த 'இரகசியப் பேச்சுக்களை' அம்பலப்படுத்தியதற்காக அமைச்சர் பதவியிலிருந்து வாஜ்பாயை நீக்க வேண்டும் என்கிருர் மனுதாரர்.

நீதிபதி மனுவை ஏற்றுக் கொண்டு வழக்கு விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளார்.

★★★

வெளியேற்றம்!

இந்திரா காந்தியின் ஆதரவாளர்களால் நடத்தப்படும் 'நேஷனல் ஹெரால்டு' என்ற ஆங்கிலப் பத்திரிகையின் ஆசிரியர் குழுவிலிருந்து சலபதி ராவ் என்பவர் விலகிக் கொண்டார். கடந்த முப்பது ஆண்டுகளுக்கும் மேலாக அப் பத்திரிகையின் வளர்ச்சிக்காக உழைத்த சலபதிராவ் வெளியேறியதற்குக் காரணம் 'இல்லஸ்ட்ரேட்டு வீக்லி ஆஃப் இந்தியா' விலிருந்து 'வெளியேற்றப்பட்ட' குஷ்வந்த் சிங்கிற்கு 'நேஷனல் ஹெரால்ட்'பத்திரிகையின் ஆசிரியர் குழுவில் இடம் கொடுத்ததேயாகும்

முப்பெரும் தத்துவ டாலர் செயின்கள்

மேற்படி டாலர்கள் குழந்தைகள் முதல் ஆண்கள், பெண்கள் அனைவரும் கழுத்தில் அணிந்து கொள்ளலாம். முழு ரூபா அளவு உள்ள இந்த டாலர்கள் பஞ்சலோகத்தால் தயாரித்து 22 காரட் கோல்டு பிளேட்டிங் செய்யப்பட்டது. ஒவ்வொரு டாலருக்கும் மறுபுறம் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற அண்ணாவின் " மணிவாசகம் " பொறிக்கப்பட்டது. ஒரு டாலர் விலை ரூ. 15. டாலர் செயின் 24 இன்சி நீளம் உள்ள ஒரு செயின் விலை ரூ. 35. தபால் செலவு தனி. உங்களுக்கு எந்த டாலர் வேண்டுமென்பதை தெளிவாக எழுதி டாலர் மட்டும் வேண்டுமானல் ரூ. 3 அட்வான்சும் செயினுடன் டாலர் வேண்டுமானல் ரூ. 10 அட்வான்சும் அனுப்பினல் மீதி தொகைக்கு நீங்கள் விரும்பும் பொருளை V. P. P. மூலம் அனுப்பிவைக்கிறோம்.

தயாரிப்பாளர்: சக்தி. ஜி சம்பந்தன்
42, பள்ளிக்கூடத் தெரு, (சத்திரம் பிளாட்)
பட்டாபிராம்-சென்னை-600 072.

சென்னையில் கீழ்க்கண்ட விலாசத்தில் நேரில் பெற்றுக்கொள்ளலாம்.
"போட்டோ வீனஸ்" 104, C.N.K. ரோட், சென்னை-600 005.
(ஸ்டார் டாக்கீஸ் சமீபம்)

சாதிகள் இருக்கும்வரை...

ஏழைக்கும், பணக்காரனுக்கும் உள்ள ஏற்றதாழ்வு வளர்ந்து கொண்டு வருகிறது. அடித்தட்டு மக்களை பாதிக்கப்பட்ட பின் தங்கிய மக்களை நிலத்திமிங்கலங்களும், ஆதிக்கக்கும்பலும் ஆதிக்கம் செலுத்தி வருகின்றன. பாதிக்கப்பட்ட மக்கள் இன்று விழிப்படைந்து தங்களுடைய உரிமைகளுக்காக அன்றாடம் எழுச்சிக்குரல் எழுப்பிக் கொண்டிருப்பது அதிகரித்துக்கொண்டிருக்கிறது

இந்தப் பிரச்சினைக்கு முடிவு கட்டுவது என்பது முடியாத காரியம் ஏன் எனில் இந்த நாட்டில் சாதி முறைகள் இருக்கின்றவரை இந்தப் பிரச்சினைக்கு முடிவு காணவே முடியாது.

எம் சி. சாக்ளா,
(முன்னுள் மத்திய அமைச்சர்)

கலையும் நமது நிலையும்...

(3ம்பக்கத் தொடர்ச்சி)

ஆவேச உணர்ச்சிகளும் அருவருக்கத்தக்க நடவடிக்கைகளும்—தன்னம்பிக்கையற்ற தன்மையும் பொறுமையைத் தட்டிக்கழிக்கும் நோக்கும் சலிப்பும்—குழம்பிக்கிடக்கும் இடத்திலே இருக்கிறேர்.

சேற்றிலுள்ள செந்தாமரையைக் காட்டினல் மலருக்குப் பெருமையே தவிர, சேறு சிறப்படைந்து விடாது அதேபோல இவ்வளவு இழி தன்மைகளுக்கு இடையிலே காணப்படும் கருத்துத் தெளிவுள்ளோரை அவர் தம் பேச்சினைக்காட்டி விடுவது சமுதாயம் சிறந்த நிலையில் உள்ளது என்று காட்டுவதாகாது

இந்த இழி தன்மைகளை நீக்கிக் கொண்டு இவை ஒழிந்த பண்புகள் நிறைந்த ஓர் நல்லிடம் செல்லவேண்டும்.

அதற்கான வழிதான் நல்வழி

காசிக்குச் செல்ல எண்ணிக் கொண்டு காஞ்சிபுரம் பஸ்ஸில் ஏறிப் பயன் என்ன? பம்பாய் போகும் வண்டி பளபளப்பாக இருக்கிறது என்பதால் அங்கே ஏறிக்கொண்டு, பாபநாசம் எங்ஙனம் போய்ச்சேர முடியும் ?

அதுபோலத்தான், செல்லும் இடம் எது என்று ஏற்படுத்திக்கொள்கிறேமே. இடத்துக்குக் கொண்டு செல்லும் பாதை எதுவோ அதுதானே நம்மைப் பொறுத்தவரை நல்ல பாதை'

இந்த முறையிலே ஒரு பக்குவம்' ஏற்படுத்திக் கொள்ளுங்கள்; பிறகு பாதையும் புரியும் பயணமும் எளிது

ஏடெடுத்துப் படித்திடும்போது, பாடலைக் கேட்டு இன்புறும் வேளையிலும் ஆடலைக் கண்டு அகமகிழும் போதும், படகாட்சிகண்டு பரவசப்படும் வேளையிலும், ஓவியத்தைக் கண்டு உள்ளத்தில் கிளர்ச்சி எழும்போதும் பேச்சுக்கேட்டுப் பேரின்பம் பெறும் போதும், அழகுகண்டு ஆனந்தமடையும் போதும். இந்த ஒரு நோக்கம் அளவுகோலாகவும், துலாக்கோலாகவும், உரைகல்லாகவும். இருந்திடவேண்டும்; இந்தக்கலை நிகழ்ச்சிகளை ஆக்கித்தருவோருக்கும், இது முழுதும் தேவை.

இந்த வகையிலே கலை' கவனிக்கப்பட்டால் அதன் மூலம் செழிப்புக் கிடைக்கும்; அந்தத்துறையும் செழிப்புடன் இருந்திடுவது மட்டுமல்லாமல் சிறப்புடன் திகழும்.

★ வரட்டு விசாரணை! ★

கருணாநிதி மீது வழக்கு தொடரப்படும். சர்க்காரியா கமிஷன் அறிக்கை மீது நடவடிக்கை எடுக்க அரசு முடிவு.

(தினமணி 19—8—78 செய்தி)

சர்க்காரியா விசாரணையின் போது நீதிமன்றத்துக்கு விசாரணைக்கு வர மறுத்தவர்கள் வழக்குத் தொடுக்கப் போகிறார்களாம்!

சேலம் வழக்கறிஞர் கொடுத்த தகவலின் அடிப்படையிலேதான் புகார்கள் கொடுக்கப் பட்டன என்று தங்களைக் காத்துக்கொள்ளப் பிறர் மீது பழி சுமத்தியவர்கள் நடவடிக்கை எடுக்கப் போகிறார்களாம்

நல்லது! தமிழினத் தலைவர் டாக்டர் கலைஞர் அன்றே சொல்லிவிட்டார். 'நடவடிக்கை எடுத்தால் சந்திக்கத் தயார்' என்று

'துருப்பிடித்த இரும்பு மண்ணுவிட்டால் மீண்டும் இரும்பாவதில்லை' என்ற பழமொழி உண்டு. அதுபோல, பொய்கள் என்றும் மெய்யாகி விடுவதில்லை எத்தனை முறை சொன்னாலும் பொய் பொய்தான்

உண்மை உலகத்துக்குத் தெரிய உத்தமனைப் போல நடித்து ஏமாற்றும் நயவஞ்சகர்களின் சுயரூபத்தை மக்கள் அறிய, சத்தியபுத்திரன் தர்மவான் என்பதெல்லாம் எம். ஜி. ஆரின் அரசியல் மோசடியை மறைக்கசூட்டப்பட்ட பட்டங்கள் என்பது வெட்டவெளிச்சமாக வழக்கு மன்றம் வழிகாட்டும்!

மக்கள் மன்றம் கலைஞர் பக்கம் இருக்கும் வரையில் அவரை வீழ்த்த எந்தக் 'கொம்பனு'லும் இயலாது!

மலையைக் கயிறு கொண்டு கட்டி இழுக்க முயற்சிக்கிறார்கள் பாவம்!

மலை நகராது!

கயிறு அறுபடும்.

களங்கம் துடைக்கப்படும்! அந்த நாள் "கழகத்தலைவர் கலைஞரின் கரங்களில் தமிழகம் திகழும்!"

தி. மு. கழகத்தவர் வழக்குகளுக்காக அஞ்சுபவரல்லர்! வரி ஏய்ப்புச் செய்துவிட்டு அதிலிருந்து தப்பிக்கப் பிறருக்கு சலாம் போட்டு வால்பிடித்து வாழ வேண்டுமென்ற அடிமை புத்தி இல்லாதவர் தி. மு. கவினர்

சர்க்காரியா கமிஷனை நியமித்தவர்கள்

★ காசி விசுவநாதன் ★

இன்று எத்தனை சிக்கலில் சிக்கியிருக்கிறார்கள் என்பதை நாடு காணத்தான் போகிறது! சரித்திரம் திரும்பும்! சவடால்கள் ஒடுங்கும்! சந்து முனையிலே சிந்து பாடுவோரின் சிரிப்பு அடங்கும்!

கலைஞரின் மீது தொடுக்கப்படும் கணைகள் கழகத்தின் ஒவ்வொரு தொண்டனின் மீதும் தொடுக்கப்படும் கணைகளாகவே கருதப்படும்! என்பதை நாடு உணரத் தலைப்பட்டுவிட்டது,

காரணம்—டாக்டர் கலைஞரின் கரம்
அனைவரையும் அணைக்கும் கரம்!
அழுத கண்ணீரைத் துடைக்கும் கரம்
அல்லல் பட்டோரை ஆதரிக்கும் கரம்!
ஆக்கப்பணிகளைக் குவித்த கரம்!
அமுதாம் தமிழை வளர்க்கும் கரம்
எழுத்தால் நாட்டை உழுத கரம்!
பேச்சால் மனத்தை வரித்த கரம்!
தொண்டால் நாட்டைக் காத்த கரம்!
அண்ணனைத் தொழுகின்ற கரம்—சிறந்த
ஆணைகளை இடுகின்ற கரம்
இன்னலை ஏற்றுக்கொண்ட கரம்—பிறர்க்கு
ஈகைக்காக வளைந்த கரம்
உழைப்பை மதிக்கும் கரம்—தொண்டர்
ஊக்கத்தை வளர்க்கும் கரம்
எழுநதை வடிக்கும் கரம்—பிறர்க்கு
ஏற்றம் கொடுக்கும் கரம்!

கலைஞர் கரம் என்பதை மூடமதியினர்கூட ஒப்புக்கொள்ளும் காலம் வரும்

'பூனை கண்ணை மூடிக்கொண்டால் பூலோகம் இருண்டுவிட்டது' என்று கருதுமாம். அதைப்போல அ. தி. மு. க. தலைவர் பொய் யென்ற இருளில் நடைபோடுகிறார்! உத்தம சிகாமணிகளாக தங்களை உலகுக்குக் காட்டிக் கொள்ளலாம்—ஆனால் உலகம் முழுவதுமே ஏமாற்றுக்காரர்களின் கூடாரமல்ல! இரவும் பகலும் மாறிமாறி வருவது இயற்கையின் விளைவு செயற்கைச் சாயம் பூசியவர்களின் செயல்கள், சொற்கள் வெளுக்கும் காலம் நெருங்கிக் கொண்டிருக்கிறது!

தமிழ்ச்சமுதாயத்தின் விடிவெள்ளி-தமிழினத்தலைவர் டாக்டர் கலைஞர் சொன்னார்-

'வளர்த்த கடாக்கள் மார்பில் பாய்ந்து என் நெஞ்சம் கனத்துவிட்டது' என்று.

இதைத்தான் வஞ்சினம் கொண்டு நெஞ்சில் இரக்கமில்லாமல் பழிபோடும் மனம் உள்ளோருக்கு காணிக்கையாக்க விரும்புகிறோம்.

அழுகாறு கொண்டு அடுக்கடுக்காய் பொய்களைக் கூறுவோரின் எண்ணம் பொடிப் பொடியாகும் நாள் விரைவில் வந்தே தீரும் அன்று அவர்களை தப்பவிடமாட்டோம்

இந்தியா எங்கே போகிறது...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

மூவரும் சேர்ந்து செல்லுகிறார்கள் காட்டில் மரங்கள் அடர்ந்து செறிந்த இடத்தில் ஒரு மரத்தின் அடியில் நகைகள் நாணயங்கள் சிறு குவியலாகக் கிடக்கின்றன. அவற்றைத் தங்களுக்குள் பங்கிட்டுக் கொள்ள முடிவு செய்கின்றனர். பகலில் எடுத்துச்செல்வது ஆபத்து. எனவே இரவுவரை காத்திருக்க முடிவு செய்கின்றனர் ஒருவன் காட்டிற்கு அப்பாலுள்ள ஊருக்குச் சென்று உணவு வாங்கி வருவது என்றும் மற்ற இருவர் நகைநாணயங்களுக்குக் காவல் புரிவது என்றும் ஏற்பாடு ஆகிறது உணவு வாங்கச் செல்கிறவன் உள்ளத்தில் ஆசைபிறக்கிறது, அது பேராசையாக வளர்கிறது. காவலிருக்கும் இருவரையும் ஒழித்துக்கட்டிவிட்டு தானே அனைத்தையும் அபகரித்துக்கொண்டால் எவ்வளவு பெரும் நிதி அவனுக்கு கிடைக்கும். வாங்கி வரும் உணவில் கொடிய நஞ்சைக் கலந்து விடுகிறான். அவன். அதேநேரத்தில்காவல் புரியும் இருவர் உள்ளத்திலும் அதே ஆசை. உணவு வாங்கச் சென்றவனைத் தீர்த்துக்கட்டி விட்டால் தாங்கள் இருவர் மட்டுமே பங்கிட்டுக்கொள்ளலாமல்லவா

உணவு வாங்கி வருகிறான் மூன்றாமவன் அவன் உணவைக் கீழே வைத்துவிட்டு நிமிர்வதற்குள் மின்னல் வேகத்தில் காவல் புரிந்தவர்கள் இருவரும் அவன் மீது பாய்ந்து வாளைப் பாய்ச்சிக்கொன்று விடுகின்றனர். அவனைக் கொன்று விட்ட பிறகு அளவிடற்கரிய மகிழ்ச்சியோடு அவன் கொண்டுவந்த உணவை இருவரும் உண்கின்றனர். உண்ட சிறிது நேரத்தில் இருவரும் சுருண்டு விழுந்து மடிகின்றனர். ஆக மூவரும் இறந்து போகின்றனர். பெருநிதியோ கேட்பாரற்றுக் கிடக்கிறது என்றோ எந்த அதிர்ஷ்டசாலியின் கரத்திலோ கிடைக்கக் கூடும்

ஜனதாதலைவர்களின் நிலைக்கும் இக்கதையில் வரும் வழிப்போக்கர்களின் நிலைக்கும் அதிக வேறுபாடில்லை.

ஜனசங்கம் சரண்சிங்கையும் மொரார்ஜியையும் மோதவிட்டு இடையில் கட்சியைக் கைப்பற்றத் திட்டமிட்டு செயல்படுகிறது. மாநிலங்களில் சரண்சிங்கை ஆதரிக்கிறது. மத்தியில் மொரார்ஜியை ஆதரிக்கிறது.

மொரார்ஜிக்கோ சவான் காங்கிரசும் அ. இ. அ. தி. மு. க. வும் துருப்புச்சீட்டுகளாகப் பயன்படுகின்றனர் தொடக்கத்தில் அ. இ. அ. தி. மு. க. துருப்புச் சீட்டைப் பயன்படுத்தித் தான் ஜெகஜீவன்ராமை அவர் பணிய வைத்தார். இவர்களை உள்ளுக்கு இழுத்து சரண்சிங்கை வெளியேற்றி தன் நிலையை உறுதிப்படுத்திக் கொள்ள அவர் நினைக்கிறார்.

சரண்சிங்கிற்கோ பிரதமர் பதவியில் குறி. சிலவேளைகளில் குறி தவறி விடுகிறது மீண்டும் மீண்டும் அதன் மீது குறி வைத்துக் கொண்டிருக்கிறார்.

ஜெகஜீவன்ராமுக்கோ இவர்கள் எல்லோருக்கும்போதிக் கொண்டு பிரதமர்பதவியைத் தன்னிடம் விட்டு விடமாட்டார்களா என்ற ஏக்கம் அவர் ஓடும் ஓட்டம் உறுமீன் வருமளவும் வாடியிருக்கும் கொக்குப் போலக் காத்திருக்கிறார்.

இந்த நிலையை ஜார்ஜ் பெர்னாண்டஸ் கட்சித் தலைமைக்கு அனுப்பிய குறிப்பில் தெளிவுபடுத்தியிருப்பதாகப் பத்திரிகையில் செய்தி வெளிவந்திருக்கிறது

" We are all involved in Serious and calculated efforts at destroving others in the hope that that way only one of us will emerge as the ultimate victor... .....It is now obvious that neither inside the country nor outside people any longer believe our professious of unity ."

நாட்டின் நிலை மக்களுக்கு ஆழ்ந்த கவலையையும் அச்சத்தையும் தந்துகொண்டிருக்கிறது. அவற்றைப் போக்க வேண்டிய ஆட்சியாளர்களோ அதைப்பற்றிக்கொஞ்சமேனும் அக்கறை செலுத்தவில்லை ஜனநாயகம் அடிப்படை உரிமை. மக்கள், மக்கள் உரிமைகள் அவர்தம் நன்மைகள் இவைகளைப்பற்றி எல்லாம் அவர்கள் நினைப்பதே இல்லை நினைப்பதற்கு நேரமே இல்லை. அவர்கள் நினைவெல்லாம் யாரை யார் வீழ்த்துவது யாரை யார் கவிழ்ப்பது என்பதிலேதான்

மொரார்ஜிமுதியவர் அனுபவமிக்கவர் அதேபோல் பிடிவாதத்திற்குப் பேர் போனவர் ஆனாலும் மிசாக் கொடுமைக்குப் பிறகு தனிமைச் சிறைக்குப் பிறகு பெரிதும் மாறியிருக்கிறார் என்ற நம்பிக்கை தொடக்க காலத்தில் ஏற்பட்டது

நான் தவறாக நடந்தால் என் காதைப் பிடித்துத் திருக்குங்கள். துணிவாகக் குற்றங்களை சுட்டிக் காட்டுங்கள். சர்வாதிகாரம் சாகடிக்கப் பட்டுவிட்டது' என்று அறிவித்தபோது அவர் தனது பிறவிப் பிடிவாதத்தை மாற்றிக் கொண்டு விட்டார் தளர்ந்தும் நெகிழ்ந்தும் கொடுப்பார் என்று நாடு நம்பியது ஆனால் அவருடைய போக்கோ நாளுக்கு நாள் அவர் பழைய மொரார்ஜிதான் என்று உறுதிப்படுத்தி வருகிறது. அவர் ஆட்சியின் தலைவர். அனைவருக்கும் மூத்தவர். அனைவரையும் அணைத்துச் செல்ல வேண்டியவர் அனைவரினும் அவரே பொறுப்பு மிகுந்தவர். ஆனால் அவர் நிலை எப்படி உள்ளது? அவருடைய மகன் மீது அடுக்கடுக்கான குற்றச்சாட்டு அதிலும் ஏனோதானோக்கள் சுமத்தவில்லை அவருடைய சகாக்களே சுமத்துகிறார்கள். ஆதாரமற்றவை என்று அவர் அடித்துச் சொல்கிறார். குற்றச்சாட்டு வேறு யார் மீதாவது இருந்து அவர் அக்குற்றச்சாட்டுகள் ஆதாரமற்றவை என்று சொன்னால் நாடு நம்பும் குற்றச் சாட்டோ மகன் மீது. ஆதாரம் இல்லை என்பவரோ தந்தை எப்படி நாடு நம்பும் எத்தனையோ கமிஷன் நியமித்தவர்கள் இதற்கு ஒரு கமிஷன் நியமித்தால் என்ன?

இந்திராவிற்கு ஒரு எமன் அவர் மகன் சஞ்சய். மொரார்ஜிக்கு ஒரு எமன் அவர் மகன் காந்திபாய் தேசாய் என்றல்லவா தோன்றுகிறது.

சஞ்சய் மீது குற்றம் கூறியபோதெல்லாம் இந்திரா கேளாக் காதினராக இருந்தார். அவர் மகனின் குறைகளைக் காணாக் கண்ணினராக இருந்தார். அதேபோல்தான் மொரார்ஜியும் இன்று இருக்கிறார்.

'என் மகனைத் தாக்கினால் அவன் திரும்பத் தாக்குவான'

[தொடர்ச்சி 10 ம் பக்கம்]

தொலைபேசி எண்: கடை: 33213 இல்லம் 31922
காம்நாடுவோர்தவறாமல் நாடுவது
தமிழக எண்ணெய்ப் பலகாரம்
தயாரிப்பு விற்பனை நிலையம்
92. திருப்பரங்குன்றம் சாலை மதுரை 11

தனிச்சிறப்பு: ஜிலேபி, தெக்கத்தி மிட்டாய், அதிரசம், இனிப்புசேவு, பக்கவடா, மிக்சர், முறுக்கு, கடலை நவதானியம் மற்றும் இனிப்புகாரவகைகள்
உரிமையாளர் பே. தேவசகாயம்
கிளைகள்: 26. மேலமாசி வீதி, 70. சுவாமி சன்னதி 12. அழகர்கோவில் சாலை, 72 CL வுன்ஹால்ரோடு, மதுரை.

இந்தியா எங்கே போகிறது ..

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

அது எங்கள் பாரம்பரியம்'' என்று கூறிய இந்திராவிற்கும். 'என்னைத் தாக்க விரும்புகிறவர்கள் என் மகனைத் தாக்குகிறார்கள் என்று கூறும் மொரார்ஜிக்கும் அதிக வேறுபாட்டை மக்கள் பார்க்கவில்லை இந்திராவைச் சுற்றி சஞ்சய்யை மையமாகக் கொண்டு அன்று ஒரு குழு (Csucus) இருந்ததைப்போலவே இன்று மொரார்ஜியைச் சுற்றி காந்திபாயை மையமாகக் கொண்டு ஒரு குழு உருவாகி இருக்கிறது என்று பலர் கூறுகிறார்கள்.

ஜனதாவின் நிலை ஜே பி. யை துன்பப்படச் செய்கிறது. அவரே தன் வேதனையை வெளியிட்டுள்ளார். எனினும் ஜனதாத் தலைவர்கள் திருந்திடவில்லை

இது ஒரு கட்சி விவகாரம் என்று அலட்சியப்படுத்த மக்களால் முடியவில்லை. இந்தியாவின் சர்வாதிகாரத்தை முறியடித்து இவர்களை ஆட்சிக்குக் கொண்டு வந்தனர் மக்கள். ஆனால் இவர்களோ ஆட்சி நடத்தவில்லை. அடித்துக் கொண்டு கிடக்கிறார்கள்.

மக்கள் நாளுக்குநாள் நம்பிக்கை இழந்து வருகிறார்கள் என்ன செய்வதுஎன்று அவர்களுக்குப் புரியவில்லை. ஜனதா வேண்டாம் என்றால் வேறு யாரைத் தேர்ந்தெடுப்பது? அரசியல் சூன்யம் தான் தோன்றுகிறது.

ஜனதாவின் செல்வாக்கு சரிகிறது. இந்திராவின் செல்வாக்கு உயர்கிறது. அச்சரிவும் உயர்வும் சரியான எதிர்விகிதத்தில் இல்லை தான். எவ்வளவு ஜனதாவிற்கு சரிவு ஏற்படுகிறதோ அவ்வளவு உயர்வு இந்திராவிற்கு ஏற்படவில்லைதான். ஆனாலும் ஜனதா சரிவில் ஓரளவாவது உயர்பவர் இந்திராதான் வேறு யாருமில்லை.

ஜனதாவை வெறுக்கும் மக்கள் இந்திராவை விரும்புவதில் ஓரளவு தயக்கம் காட்டுவது உண்மைதான். ஆனால் அவர்களுக்கு மூன்றாவது ஆள் கிடைக்காதபோது விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் அவர்கள்இந்திராவைத்தானே ஆதரிக்கும் நெருக்கடி ஏற்படுகிறது? இந்திரா மீண்டும் ஆட்சிக்கு வந்தால் அவர் முன்போல நடந்து கொள்ளமாட்டார் என்று மெள்ள மெள்ள நம்பத் தொடங்கினால்நிலைமை என்னவாகும். மக்கள் நிலைமையை விட்டுத் தள்ளுங்கள், ஜனதா தலைவர்களின் நிலைமை என்னவாகும்? இதையாவது அவர்கள் எண்ணிப்பார்க்க வேண்டாமா!

ஜனதாவும் இன்றி இந்திராவும் இன்றி ஒரு குழப்ப நிலையும் உருவாகலாம். அந்த நிலை உருவாவது நாட்டை அங்கே இட்டுச் செல்லும் இராணுவ சர்வாரத்திற்கா? பங்களா தேஷும் பாகிஸ்தானமும்தான் இனி நமக்கு வழிகாட்டிகளா? எங்கே இந்தியா சென்றுகொண்டிருக்கிறது? இதற்கு விடையை இப்போது யாராலும் உறுதியாகச் சொல்ல முடியாது இந்தியாவின் இன்றைய திரவ நிலையிலுள்ள அரசியலில் நாளை எதுவும் நடக்கலாம்!

தலைவர் கலைஞரின் வேண்டுகோளுக்கிணங்க

புயல் - வெள்ளத் துயர் துடைப்பு நிதி!

(அனுப்பியோர் பட்டியல்) (27—8—78 இதழ் தொடர்ச்சி)

நரிமேடு வே. சுடலையாண்டி, வாணியம்பாடி க அண்ணாமலை, ஆர். இராமராஜ், இரா சந்திரன் பி. சந்திரன் (டீஸ்டால்) கே சித்தம்மாள் என் ஜாபர், ஆஜி. சமத்சாய்பு, ஜோலார்பேட்டை ஏ.எல். முனிரத்தினம், வாணியம்பாடி என். பாஸ்கரன். வேலூர் எம். வி. ஜெபச்சந்திரன், கோட்டப்பட்டி கே. எம். சிராளன், சென்னை-2 இரா. தங்கசாமி, நரிமேடு கோ. தியாகராஜன். முகமது அப்துல்காதர் மதுரை தி. செகநாதன், பி. தாந்தோணி ஜீவாநகர் இல. பரதன், ஜோலார்பேட்டை வி. தங்கவேலு, மதுரை ந. இரங்கராசு, மாயூரம் வ. ஆதிரங்கம், திாத்தமலை இரா முத்தழகன. வெள்ளமடை வி. சிவசாமி ஈரோடு யூசுப் ஷெரீப். கோவை கே. நடராசன். டி. பழனிபப்பன ஆகிய 26 பேர் ரூ 5 வீதம் 130—00

பெரம்பூர் தமிழ்ச்செல்வன், எஸ் ஏ. பண்டலம், கைலாசகவுண்டர், தி நகர் எஸ். ஆர். வி. ஜீயர், திருவெண்ணைநல்லூர் செ. இராசேந்திரன், வேலூர் எஸ். எஸ. வாசன், தில்லையாடி எஸ். வீராசாமி, கோவளம எம். காசிம், எம் முகமது. எம். ஆர். நாதன், அரந்தாங்கி எஸ் கருட்டிணன் ஆகிய 10 ரூ. 3 வீதம் 30—00

நாபுதூர் ச. சங்கரமூர்த்தி, பட்டாபிராம் டி. பாலசுந்தரம், உத்தமபாளையம் எஸ் இராசு, வ ஆ திருவண்ணாமலை பா. நீலகண்டன், சென்னை-1 டி. சாயிபாபா. விழுப்புரம் எம். மாணிக்கம், நெல்லை தி. கனிமுத்து சிவகிரி என்.கட்டி, கோவளம் பெரியபாட்சா, புலிப்பாக்கம் கிருஷ்ணன், செங்கை பீ. வி. தரணிகேசவன், திருச்சி இரா. நெடுஞ்செழியன், கீழ்ப்பாக்கம் கி மூர்த்தி, பெங்களூர் த. இராமச்சந்திரன் ஆகிய 14 பேர் ரூ 2 வீதம் 28—00

புதுக்கோட்டை மண்டையூர் டி. ஆறுமுகம், 2—00

வில்லியம்பாக்கம் என். பெருமாள் (1 70) மேட்டுப்பாளையம் எம்.ஜி. செலவராசு (1.01) கொளத்தூர் செல்வராசன், புலிப்பாக்கம் வீரராகவன் புதக்கரம் இ. குணண, வ ஆ என். லோகநாதன், கும்பகோணம் எம். பரசிவம், கோவை-1 கவிஞர் பூவண்ணன், முத்தரசநல்லூர் ஜி. எஸ். கணேசன், நெல்லை பழவன்-இரா. வேலு. சிவகிரி முருகேசுவரி, திருச்சி ஏலக்குறிச்சி தெங்காதரன், பழனிச்சாமி கோவிலூர் கை. நெடுஞ்செழியன், சச்சம்பாடி இரா. கிருட்டிணன், உறையூர் பி. பிச்சை, ஜி. முருகேசன் ஆகிய 17 பேர ரூ 1 வீதம் 17—71

பம்பாய் பிவாண்டி ஜே. எம். லத்தீப் 6—00

" " எம். வி. அப்துல் அக் 5—00

சென்னை-45 மேற்கு தாம்பரம் ஏ தாசன் 100—00

சென்னை-1 மைதீன் பாட்சா 51—00

சென்னை-35 ஆர். சீனிவாசன் 50—00

காட்டாங்குளத்தூர் எம். வி. இராமு, புதுவை-1 சி. பி திருநாவுக்கரசு. சென்னை-1 டி. சிவபிரகாசகம் ஆகிய 3 பேர் ரூ 25 வீதம 75—00

சென்னை-2 பி. டி. சி. எக்ஸ்பிரஸ் பி. சிவராஜ்—ஏ. கே. இப்ராகிம் ஆகிய இருவரும் ரு 21 வீதம் 42—00

தாம்பரம் ஆர் விசுவநாதன்—ஜி. தேவராசன்—கே. சீனிவாசன—சி. முனுசாமி ஆகியோர் ரூ. 20—00

சென்னை ஆர்பர் அமிர்தவல்லி சத்தியநாதன் ரூ. 20—00

செங்கை திம்மாவரம் டி. முத்து ரூ 16—00

சென்னை-21 த. பார்த்தசாரதி 15—00

சென்னை-18 சி. மணி. சென்னை-5 ஏ அருணாசலம் சென்னை-14 எப். கணேஷ்மல் செயின். வில்லிவாக்கம் அ. செல்வராசன், சென்னை-54 பி. கே. எஸ். மைசரா, சென்னை-58 சி. ஜேசுராஜ். சென்னை-45 கு இராதாகிருட்டிணன், அஜீஸ், செங்கை வி. ருத்ரகோட்டி, சென்னை-1 எஸ் சுந்தரம், பி. ந. சண்முகம் ஆகிய 11 பேர் ரூ. 11 வீதம் 121—00

சென்னை-18 ஜி சீனிவாசன், சென்னை-13 எ. அன்பாநந்தம், சென்னை-21 கோ. இளங்கோவன், சென்னை கே. துரைசாமி. வேலப்பாடி ஆ. வடிவேலு, சென்னை அருணவேலு, சென்னை-21 மு முத்தையா, சென்னை-89 மெய்வழி அனந்தர் செல்வராஜ், சென்னை-48 டி. ஆறுமுகம். ஏ. வி. முத்துராமன். சென்னை-17 அஸ்தமன், சென்னை-50 ப. சுகுமாரன், சென்னை-72 பட்டாபிராம் பி. சாலமன். திருவள்ளூர் பி சுந்தசாமி தருமபுரி எம். சி. கிருட்டிணன். சென்னை-3 டி. சௌந்திரபாண்டியன், டி. அந்தோணி. சென்னை-2 எஸ். டி. செல்வராசு, சென்னை சுப்பிரமணியம், புதுப்பேட்டை ஏ. என். எச். அப்துல்கனி மதுராந்தகம் என். விஜயலட்சுமி ஆகிய 21 பேர் ரூ. 10 வீதம் 210—00

மதுரை, புதுப்பட்டி எஸ். பி. சுருளியாண்டி ரூ 9—00

சென்னை-71 ஆர். எஸ் முனியாண்டி ரூ. 6—00

தக்கோலம் செல்வராசன் (5.55), நெல்லூர் என். கே. எத்திராசன் 5.55), ஆகிய 2 பேர் ரூ. 11—10

சென்னை-2 அப்துல் ரகுமான் ரூ. 5—51

தாம்பரம் சு. எம் தேவராசன் ரூ 5—05

தண்டையார்பேட்டை எம். நமசிவாயம், செங்கை சி கருணாநிதி ஆகிய 2 பேர் ரூ 2 வீதம் 4—00

சென்னை-5 அரங்கநாதன், எம். எம். எல் ஏ ரூ 51—00

கும்பகோணம் சு. பத்மனாபன் (பெருநகர தி.மு.க. செயலர்] ரூ. 211—00

வாலாசாபேட்டை ஜே. அசேன், பி. ஏ. பி ஜி. எல். ரூ 151—00

சென்னை. தி. நகர் நல்லி சின்னசாமி செட்டி அண்டு சன்ஸ் தொழிலாளர்கள் சார்பாக ரூ. 138—50

திருவண்ணாமலை குலசேகர ரெட்டியார் ரூ 125—00

மாதவரம் நீலகண்டன்—ரெப்டைல் பிளிச்சி கம்பெனி குமாஸ்தாக்களும்-தொழிலாளர்களும் ரூ 108—00

சென்னை 1 அங்கமல் அண்டு கம்பெனி ரூ 101—00

கோவை ஆர். எத்திராசன் ரூ 100—00

சேலம் காவேரிப்பட்டி (தலைவர் தி.மு க. கிளை) ரூ 100—00

சென்னை-2 எண். 53 ஜெனரல் பேட்டர்ஸ் ரோடு சம்பந்தம், செல்லையா, சி. நாதன், கண்ணன், வேலாயுதம், கே கண்ணன் ஆர். இராசு சேகர், நாகலிங்கம், புண்ணியகோடி, இராமராஜ் பி, சீனிவாசன், கேசவன் ஆகிய 13 பேர் ரூ 5 வீதம் 65—00

கோவை சி குமாரசாமி (அமெரிக்கன் ஆட்டோ சர்வீஸ் தொழிலாளர்கள் சார்பாக) ரூ 51—50

அந்தமான் போர்பிளயர் சி. டி. ஆர். மணி ரூ 51—00

புதுவை-1 துய்பிரே ரேமோனி ரூ 50—00

சேலம் பி. எஸ். ஏ. வேலாயுதம் ரூ. 50—00

சென்னை கிண்டி (டான்லி எமைல்டு ஒயர்ஸ் தொழிலாளர்கள் சார்பாக, பி. மோகன். குல்ஹலீம் ஞானமணி ஏ. டி மணி, என். எம் குற்றாலலிங்கம், எம் தேவராசன், என். குணசீலன், ஆர். இராமகிருட்டிணன், ஏ. ஜமீல் அகமது, எஸ். சண்முகம், எஸ. நடராசன், எஸ். ஆர். சந்திரன். எஸ். ஜெயக்குமார், எம் கணேசன் பி. இராமன், கே. ரத்தினம் ஏ. கே சண்முகம், வி. அன்பரசு. ஜி. என். வரதன், தாஜீவுதீன், ஆர். சுந்தரம் ஆகியோர் ரூ. 50—00

மதுரை, சின்னபட்டி (தி. மு. க. பொங்கல் சேமிப்புக் குழு சார்பாக) பெ. நல்லதம்பி ரூ 50—00

சென்னை-1 ப. மு சுப்பிரமணியன் ரூ 47—05

சேலம் என். கே. ரத்தினம் ரூ 40—00

சென்னை-84 தாஸ் பிரகாஷ் ஓட்டல் தொழிலாளர் சார்பாக ஆர். பெருமாள் ரூ 30—00

கோவை சிந்தாமணி கூட்டுறவு சிறப்பங்காடி ஜி நாகராசன் அண்டு நண்பர்கள் ரூ. 30—00

ஈரோடு கே. இராமசாமி ரூ 25—40

தஞ்சை முடிகொண்டான் தி. மு க. கிளை, தஞ்சை ஆர். வி. ஆறுமுகம், சேலம் கே. அங்கப்பன். செங்கை முடிதிருத்துவோர் முன்னேற்ற சங்கத் தலைவர் டி. கதிர்வேலு. பங்களூர்-16 ஏ. முருகன் நீலகிரி டி ஏ. சேதுண்ணி ஆகிய 6 பேர் ரூ. 25 வீதம் 150—00

ஆக மொத்தம் ரூ.. 75 361—85

வேடம் கலைகிறது...!

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

கார் விளக்குகள் நொறுங்கின வாம். இதை போட்டி கறுப்புக் கொடி காட்டியவர்களில் 150 பேர் கைது செய்யப்பட்டனர். கல்லூரி மாணவர்கள் அச்சா தேவர், மணி தவமணி ஆகியோரும் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்களை விடுவிக்கக் கோரி விவசாயிகளும் தொழிலாளர்களும் ஒன்று கூடி காவல் நிலையத்தை முற்றுகையிட்டனர். அங்கு கூடிய பொது மக்களைக் கலைத்திட போலீசார் தடியடிப் பிரயோகம் செய்தனர்.

இப்படிப்பட்ட ஒரு சம்பவம் தென்பாண்டி மண்டலத்தில் நடிகருக்கு இதுவரை நடைபெற்றதே இல்லை. வாழ்த்தொலிகளையேகேட்டுக் கேட்டுப் பழகி விட்ட அவரது காதுகள் ஒழிக எனும் முழக்கங்கள் கேட்க வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டு விட்டன.

எந்த தென்பாண்டி மண்டலத்து மக்கள் கறுப்புக் கொடி காட்டி 'திருப்பிப் போ,' நடிகர் ஆட்சி ஒழிக என்று வெறுத்து குரல் கொடுத்தனரோ அதே பொது மக்கள் ஆம் அருப்புக் கோட்டை மக்கள் தமிழினத் தலைவர் டாக்டர் கலைஞரை மாலையிட்டு வரவேற்று இருக்கிறது; வாழ்த்தியிருக்கிறது

இந்த அருப்புக்கோட்டை கடந்த தேர்தலின்போது கழகத்திற்கு வெறுப்புக் கோட்டையாக இருந்து விட்டது. ஆனால் இன்றைய தினம் அதே அருப்புக்கோட்டை கழகத்திற்கு கலைஞருக்கு விருப்பக் கோட்டையாக காட்சி தந்தது கணிப்பை ஊட்டியது ராகமணம் அருப்புக் கோட்டையில் கவர்ச்சி சுரைகிறது.

நாட்டில் எங்கும் கலவரங்கள் நடந்தபடி உள்ளன. காவல் நிலையங்களில் கற்பழிப்பு, அடித்தே ஆட்களை கொலை செய்யப்படுகின்ற கொடுமை இவையெல்லாம் நாட்டில் அன்றாட நிகழ்ச்சிகளாகி விட்டன. நாட்டை ஆள நடிகர் தகுதியற்றவர் என்பதை கிராமத்து மக்கள் உணரத் தொடங்கியிருக்கிறார்கள். திரைப் படத்தில் காட்டிய திறமையை, கோட்டையிலே காட்ட முடியவில்லை. ஆட்சி நடத்துவது என்பது படம் பிடிப்பில் காட்டும் திறமையல்ல என்பதை நாடே உணருகிறது. நாட்டிலே போட்ட வேடம் கலைகிறது. மக்களின் மயக்கம் தெளிகிறது வெண்திரை கிழிகிறது.

நாடே இவரது ஆட்சியை வேண்டாம் என்று வெறுக்கிறது.

பிஞ்சுகளை பலிகொண்ட நெஞ்சுருக்கும் நிகழ்ச்சி

என்றும் விடிவதைப் போலத்தான் அன்றையப் பொழுதும் விடிந்தது; ஆனால், அறுபத்துநான்கு குடும்பங்களுக்கு மட்டும் அன்றையப் பொழுது மட்டும் திருநாளாக விடிந்தது!

சாதாரண உடையிலே நின்ற தன் மகனைக் கண்ட அந்தத் தாய் புறநானூற்றுத் தாய்போல மகிழ்வெய்தினாள். 'போர் முனையில் நின்று — தாய்நாட்டுப் பேர்வளர்த்துத் திரும்பிவந்து நிற்கிறான் — தன் மகன் எனும் கனவு நிலையிலே இறும்பூதெய்துகிறாள் அந்தத் தாய்!

பள்ளியறைத் தவம் பரிசு தந்தபோது மகிழ்ந்ததைவிட, சாரண உடையிலே மிளிரும் தன் மகனைக் கண்டு மகிழ்ந்தது அந்தத் தாயுள்ளம்.

'அம்மா... போய்விட்டுவருகிறேன்...'' அந்தப் பிஞ்சு தன் கொஞ்சு மொழியால் விடைகேட்டு நிற்கிறது!

"பார்த்துப் போப்பா... சீக்கிரமா திரும்பிடு... கண்ட கண்ட இடத்திலெல்லாம நிற்காதே.. வாத்தியாரு சொல்லறதைக் கேட்டு நட...என்னமோ உல்லாசப் பயணம்னு சொல்றே... ஆனா... நீ திரும்பி வர்ற வரைக்கும் என் உசிரு என் கையிலே இல்லேப்பா—சீக்கிரமா திரும்பிடு

மகனுக்குச் சிற்றுண்டி கட்டித் தந்து உச்சி முகர்ந்து வழியனுப்புகிறாள் அந்தத் தாய்.

அவன் நடந்து செல்லும் அழகை வாயிற்படியிலேநின்று கண்டு மகிழ்கிறாள்! ஈராறு மாதம்வரை அவன் தளிர் நடை பயின்றபோது விழுந்து எழுந்து ..மெல்ல நடந்து — அவனுக்கு நடைபயிற்றுவித்த நாட்களை எண்ணிப் பார்க்கிறாள் ..நெஞ்சு விம்முகிறது சில விநாடிகள்தான்' மகனின் நடையழகைக் கண்டு அந்த நெஞ்சு மீண்டும் நிமிர்கிறது பெருமையால்!

இந்தக் காட்சி ... 26 8-78 அன்று ஏறக்குறைய அறுபத்து நான்கு குடும்பங்களிலும் நடந்து இருக்கலாம்!

அறுபத்துநான்கு தொடர்கதைகளும் .. தங்களிலே சிலர் சிறுகதைகளாகப் போவதை அறியாமல் ... பள்ளியிலே இருந்து இரே ஓர் ஆசிரியரின் துணையுடன் தங்களின் சுற்றுலா பயணத்தைத் தொடங்குகின்றனர்

எண்ணூறுக்கு வருகிறது அந்தச் சாரணச் சிறுவர் குழாம்!

ஆற்றோரம் சிறிது நேரம் விளையாடிப் பொழுதுபோக்குகிறது ... பிறகு ... கரையோரம் நின்ற படகுகளை நோக்கி வேடிக்கை பார்க்க விரைகிறது அந்தச் சிறுவர் கூட்டம்'

படகோட்டியின் ஆசை வார்த்தைகளால்ஈர்க்கப்பட்ட அந்தப் பிஞ்சுகள், "படகுப் பயணம் செய்யவேண்டும் என்று ஆசிரியரைக்கேட்க... பல மறுப்புரைகளுக்குப் பிறகு ஆசிரியர் சம்மதிக்க...படகுப் பயணம் துவங்குகிறது

படகுப் பயணம் மட்டுமா தொடங்கியது சிலரின் இறுதிப் பயணமும் அல்லவா தொடங்கியது

படகைச் சுற்றிலும் நீர்... விழிகளுக்கெட்டிய வரையில் விந்தைமிகு இயற்கைக்காட்சி இன்னும் சிறிது நேரத்தில் மரணத் தீவைக் காணப்போகிறோமே எனும் மகிழ்ச்சிப் பெருக்கு மாணவச் செல்வங்களின் உள்ளத்தில்... அனைத்தும் ஒரு விநாடி நேரந்தான்

இரண்டு படகுகளில் - ஒன்றிற்கு 32 பேர் விதம் பயணம் செய்த மாணவர் தம் படகுகளிலே ஒன்று ... ஓட்டைப் படகு...அந்த ஓட்டை வழியே நீர் புக ஆரம்பித்தது சின்னஞ் சிறார்கள் தம் சிறு கை கொண்டு நீரை வெளியே இறைக்க முயலுகின்றனர். முடியவில்லை. அந்த நேரம் பலத்த காற்று வேறு - பிஞ்சு உள்ளங்களிலே அச்சம் அரங்கேறத் தொடங்க ஆரம்பிக்கிறது! ஓட்டை இருக்கும் இடம் விட்டு படகின் அடுத்த ஓரத்திற்கு மாணவச் செல்வங்கள் கும்பலாக நகர்கின்றனர்; அடுத்த விநாடி...32 மாணவச் செல்வங்களோடு படகு கவிழ்கிறது

அப்பப்பா...அந்தக் காட்சியை மனக் கண்முன் இப்போது நினைத்துப் பார்த்தாலும் இதயம் ஒரு விநாடி நின்று விடுகிறது!

அலறல்...வேதனைக் கூச்சல்! உதவி வேண்டி அங்கும் இங்கும் விழிகள் அலைமோத — மாணவர்கள் துடிக்கின்றனர். ஆற்று நீரில்...

அந்த நேரத்திலே உதவி புரிய வேண்டிய படகு ஓட்டிகள் மறைந்து விட்டனர்.

பாவம் 15 இளந்தளிர்கள் அந்த ஆற்று நீரிலே தம் வாழ்வை நீராகச் சேர்த்து விட்டனர். 12 சடலங்களே கிடைத்தன மற்ற மூவரின் சடலங்கள் மறு நாள் தான் கண்டுபிடிக்கப்பட்டன.

நடந்து முடிந்த இந்த நிகழ்ச்சிக்குக் காரண காரியங்களைத் தேடுவதைவிட .. இனி இது போன்ற நிகழ்ச்சிகள் நடக்காமல் இருக்க ஆவன செய்ய வேண்டும். செய்யுமா அரசு?

அவா. இன்பதாசன்

those who level false charges apply to all cases or not ?"

Reviewing the events that are taking place at Delhi, Dr. Kalaignar, pointed out the urgent need to check the activities of the so called paragons of public virtue.

He continued, "I really sympathise with the present lot of Mr. Desai at Delhi. As things are going on there he could only concentrate on safe-guarding his own position. Yet I firmly believe he will not leave anyone who takes a fancy to level false charges against anyone.

An evil tendency to stoop to low levels and pour out false charges is strongly developing in the country. This bad trend should be checked. The ruling parties in the Centre and the State are faced with these so called commissions and enquiries eternally. They find little time to attend to the important problems facing the people. Unfortunately those in power are also always bent on creating more and more trouble to the opposition parties. *These enquires have become a 'vicious circle'. It does no good to the people or to the country.*

Referring to the role of M. G. R. in Tamil Nadu Politics, Dr. Kalaignar poignantly exposed the hypocrisy, cant and low cunning of M. G. R. "M. G. R. who was boasting of being the only blameless idol in politics, is now having bitter experiences.

Corruption charges against his colleagues at Pondicherry are now in lime-light. Very serious charges are levelled against one of his Ministers.

This matter is now pending disposal at the Centre. Mr. Desai, is keeping the matter in cold storage; inspite of the recommendations of the Governor. What does this indicate ? What is the cause for delay in setting up a commission. Why does Mr. Desai hesitate ?

Mr. M. G. R. who was all these days playing the role of a devil quoting scripture has come forward to openly accuse the Governor's action as hasty. There is a lot of difference between hasty decision and quick decision. Realising the urgency of the matter and the crux of the problem the Governor has promptly acted and taken the right decision at the right time.

If Mr. M. G. R. is really honest and sincere in putting

★★★★ ★★★★★

வாசகர்களுக்கு ஓர் அறிவிப்பு

நம்நாடு முப்பெரும்விழா மலர் அண்ணா பிறந்த நாளில் வெளிவர விருப்பதால் 10—9—78 அன்று வர வேண்டிய இதழ் நிறுத்தப்பட்டிருக்கிறது என்பதை வாசகர்களுக்கும் விற்பனையாளர்களுக்கும் தெரிவித்துக்கொள்கிறோம்.

— நிர்வாகி

★★★★★ ★★★★

corruption, should he not have taken the first steps to deal with the corruption charges against his Ministers. Instead he passes adverse remarks against the decision of the Governor.

He himself ought to have welcomed the Centre to act. Has he done? Did we not welcome the Sarkaria Commission? Should he not have compelled his Ministers to face the charges?

Our people are really very intelligent. They would easily judge the real difficulty in putting into practice what M. G. R. has been preaching all along.

The fact that he undid the Venkatadri Commission just to save one of his Cabinet Colleagues is still green in the minds of the people. Today he is afraid to face the corruption charges against the Pondy Government.

Mr. Desai, whose position is becoming more and more unstable day by day; is cleverly exploiting the situation. He depends on the 19 votes of M. G. R. in the Parliament, for his survival and safety. That might be the real reason for the delay in finding a solution to the Pondy affairs.

Mr. M. G. R. who is flattered as the only paragon of public virtue is today exposed in his true colours. All that glitters is not gold.

All the opposition parties, including Janata demand justice, yet the Centre is as dead as a door nail, silent and inactive.

I am told that the opposition parties are to approach the Centre and plead for the dismissal of the Pondy Government.

As President of D.M.K., I implore you not to resort to that heinous, degrading method. We should not approach the Centre for dismissing State Ministry. That is not our way and it should not be for ever. It is not our way and it should not be not be for ever. It is not our policy to seek the support of the Centre in these matters.

You may resort to other peaceful decent and civilized methods to seek justice in Pondy affairs.

You may prepare copies of the recommendations sent by the Governor of Pondy to the Centre and burn them to ashes openly in the public streets to expose the fate of truth and justice, to the masters at Delhi.

புனித ராஜ்யம்....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அண்ணாச்சி; நம்ப கட்சியிலே சேர நூத்துக்கு நூறு மார்க்கு வாங்கியிருக்காங்க; இல்லியா?

பொடியன்: ஆமாம்!

நொண்டி: பொடியா? அந்த சொக்கி எங்க பொடியன், அண்ணே! போனுள்னு உனக்கு ஏதாச்சும் தெரியுமா?

பொடியன்: சூப்பிரண்டு சுந்தரத்துக்கும் அவளுக்கும் காதலே ஏற்பட்டு ஜீப்பிலேயே டூயட் பாடிகிட்டு போனுங்களாமே!

நொண்டி: காதலா? நானல்லவா அவளைக் காதலிக்கிறேன். காதலுக்குக் கால்முக்கிய மாச்சே! "'காதல்' என்று எழுதிப்பாருங்க' முதல் எழுத்தையும் மூணும் எழுத்தையும் கூட்டிப் பாருங்க! "கால்"னு வரும் அது இல்லாம நீங்க......

நொண்டி: திமிரைப் பாத்தியா இவனுக்கு! என்னையே கிண்டல் பண்ருன்!

(நொண்டி, பொடியனை அடிக்க ஓந்தல்— பொடியன் ஓடி விடுதல் — நொண்டி கீழே விழுந்து விடுதல்)

நொண்டி: (முனகுதல்) எனக்கா கால் இல்லேங்கிறுன் கழுதை இருக்கட்டும்! இருக்கட்டும்!

(காட்சி முடிகிறது)

ALL THAT GLITTERS IS NOT GOLD:

Dr. KALAIGNAR EXPOSES THE HYPOCRISY OF M.G.R

WILL Mr. DESAI TAKE ACTION AGAINST M.G.R ?

Dr. Kalaignar Karunanidhi, Leader of the D.M.K. addressed mammoth gathering in the South Arcot District, last week. He was garlanded with rupee notes. There was a great awakening amongst the agriculturists, students, workers and ladies. In his thought provoking speeches, Dr. Kalaignar traced the political events of the past and present. He was very critical of the ruling parties both at the Centre and in the State. He very much deplored the evil tendencies now developing in the body politics of the entire country.

Narrating the sacrifices D.M.K. made during the heinous emergency period Dr. Kalaignar emphatically stated that the D.M.K. has no lust for power.

He said "We are not worried about the next elections. We are worried about the next generation and its security, progress and plenty.

Mr. M. G. Ramachandran who was expelled from the D.M.K. chose the opportunity to support Mrs. Gandhi. Enlisting the support of other parties, he heaped on us baseless corruption charges and handedover the list to the centre, which was laid up in cold storage for over four years. Suddenly wisdom dawned on the Centre and the Sarkaria Commission was instituted soon after the dismissal of the D.M.K. Ministry. We did not shiver or tremble with fear. We welcomed the move and demanded the right to cross-examine the authors of the petition. Since that was denied we refused to partake in the enquiry.

You may recollect that Anna refused to submit to the enactment of any legislation that would belittle the autonomy of the state even to the slightest degree. He did not submit to the Centre in its resolve to infringe the laudable rights of the States by the creation of the *LOK PAL.*

After his demise the D.M.K. Government brought in a new legislation in the State, giving scope for the enquiry into the corruption charges against state leaders, including the Chief Minister. If the charges were found true the punishment ranged upto seven years imprisonment but those who make false charges were bound to imprisonment extending to three years. Mr. M. G. R. who was on his tiptoe, rubbing his eyes to see the fall of D.M.K. Ministry and the Sarkaria Commission called it a *'BLACK ACT'*. It is for you to think over the ways of this so called paragon of public virtue. After his coming to power he rushed up to bid goodbye to the Venkatadri Commission just to save one of his Cabinet Colleagues, with the sanction of the Centre. I am constrained to point out the irony behind all these high rate political scandals.

You are all aware of the various episodes now going on at Delhi. Corruption charges are very seriously made by responsible men against the son of Mr. Morarji Desai. I read in the columns of the newspapers. *that Morariji Desai has come forward to institute an enquiry against his son, only on the condition that the author of the charges should be prepared to face severe consequences, in case the charges are not proved.*

I was indeed happy to read his sensible and sane pronouncement.

This is in fact what was contained in the Act passed by the D.M.K. Ministry in the State, which irritated my friend M. G. R.!

It is the same Act which was rendered null and void by the Centre!

Now, Mr. Desai insists on those who level corruption charges against his son to give an assurance that they would bear punishment in case the charges are found baseless. Mr. M. G. R. who called such an act of the D.M.K. Government as a 'BLACK ACT' is now keeping tongue-tied.

Now, I would like to know, why Mr. Desai consented to give assent to Mr. M. G. R. for eradicating an Act, which was almost on the same lines; as he now pleads for, in the case of his son.

Is it fair and just to render such an act null and void?

If Mr. Desai was really sincere and consistent he ought to have praised the D.M.K. and turned down the attempts of M.G.R. That he failed to do at the right time.

Yet, I welcome the statement of the premier now.

If Mr. Desai is really sincere to take action against those who level false charges, with an evil motive. I venture to ask whether he would enforce the same principle to all those who indulge in mere mud-slinging campaign, just to malign and villify their political rivals.

Mr. M. G. R. levelled 28 corruption charges against us. The Sarkaria Commission after due probe has categorically stated that 14 charges are baseless. Will Mr. Desai come forward to take action against M. G. R. for having levelled 14 false charges against D.M.K.? Will he dare to take steps to punish M. G. R.? If so, what punishment would be given to M. G. R. to meet the ends of Justice?

Mr. Desai is said to be a true Gandhian, resolute in pursuing high principles of politics, always just and fair, ever bold in champaining the cause of the truth.

He is perfectly aware of our sacrifices during the emergency period. He is aware of our contribution to save democracy. The part we played to redeem democracy and wreck the prospects of dictatorship is known to the world.

Mr. Desai, waved 'green flags' to the Commission instituted against us by Mrs. Gandhi, after his coming to power. He also instituted the Shaw Commission to enquire into the corruption charges against Mrs. Gandhi. Supposing the charges levelled against Mrs. Gandhi proved false what action would be taken against those who levelled them? I would like to ask whether Mr. Desai woud apply his principle or not.

Now, Mr. Charan Singh demands an enquiry against Mr. Desai. The opposition parties at Pondicherry have levelled a number of corruption charges against the Pondicherry Government conducted by the Colleagues of M.G.R. Would Mr. Desai principle of taking to task all

(See Page 11)



திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக ஆசிரியர் மு. கருணாநிதி அவர்களால் அரசி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டி தெரு, இராயபுரம், சென்னை-600013) அச்சிட்டு வெளியிடப்பட்டது. நிர்வாக அலுவலகம், 'அன்பகம்' 508 அண்ணாசாலை, தேனாம்பேட்டை சென்னை-600018 தொலைபேசி 441009.

உறுதி பூணுவோம்!

உடன்பிறப்பே,

திமுகத்திற்கு முப்பது.
அண்ணனுக்கு எழுபது.
ஐயாவுக்கு நூறு
எழுபதும் முப்பதும் இணைந்து
நூறு என்று ஆகிறது.
என்ன அரிய பொருத்தம்
பார்த்தீர்களா?
நூறுக்கும் எழுபதுக்கும்
உரியவர்களின் உணர்வுகளைக்
கொண்ட முப்பதையும்
காத்து எப்போதும் வாழ வேண்டிய
கழகம், வாழவைக்கப்பட வேண்டிய
கழகம், வாழப் போகிற கழகமே—



[illegible]
[illegible]
[illegible]
"[illegible]
[illegible]"
என்றும்

"[illegible]
[illegible]
[illegible]
[illegible]"
என்றும்

1945ல் [illegible]
[illegible]

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]

[illegible] !—
[illegible] !

[illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible]

[illegible]
[illegible]
[illegible]

இங்ஙனம்
[illegible]



பெரியார் பேசுகிறார்!

நான் 1920—இல் காங்கிரசில் சேர்ந்தேன். 'அதற்கு முன்பு 1900— முதல் பார்ப்பனரல்லாதவர் நல உணர்ச்சி கொண்டவனாக இருந்து வந்தேன்.

நான் 1900-த்துக்கு முன்பே கடவுள் மத, ஜாதி, விஷயங்களில் நம்பிக்கை இல்லாதவனாகவே இருந்து வந்தேன்.

விதையும் பயிர் முளையில்லை

நான் அக்காலத்தில் சிறிது செல்வாக்குள்ள குடும்பத்தவனாகவும் வியாபார விஷயத்தில் ஈடுபடுபவனாகவும் இருந்து வந்ததால் யாரிடமும் தர்க்கமும் விவகாரமும் பேசுவதில் பிரியமும் உற்சாகமும் உடையவனாய் இருந்து வந்தேன்.

மாடு—எருமை கன்று போட்ட நேரங்களைக்குறித்துவைத்துக்கொண்டு ஜோசியர்களிடம் கொடுத்து ஜோசியம் கேட்பேன்.

1900—த்தில் இருந்தே எனக்கு ஜோசியம். முகூர்த்தம், சகுனம் முதலியவைகளில் நம்பிக்கைஇருந்ததில்லை அப்போது என்னிடத்தில் 'வாய் கொடுத்து' மீளமுடியாது என்று எல்லோரும் பேசிக் கொள்வார்கள்.

எந்த குழுவிலும்
நான்தான் தலைவன்

நான் எனது 5,6,7 வயது முதற் கொண்டே 'தறுதலைப் பிள்ளை'யாகத் திரிந்தாலும், அந்த வயது முதற்கொண்டே எந்தக் காரியத்தில் ஈடுபட்டாலும் எந்தக் கூட்டத்தில் சேர்ந்தாலும் (நான்) தலைவனாகவே – மற்றவர்கள் என் சொல் கேட்பவர்களாகவே இருக்கும் வண்ணம் இருந்து வந்திருக்கிறேன்.

இன்று வரையில்கூட எந்தக் குழுவிலும் எந்தக்கட்சியிலும் நான் தலைவனாகவே இருந்து வந்திருக்கிறேனே ஒழிய ஒரு சாதாரண அங்கத்தினனாக எதிலும் இருந்ததில்லை.

அதுபோலவே எந்தச் சந்தர்ப்பத்திலும் எந்தக் குழுவிலும் கட்சியிலும் ஏதாகிலும் பிறத்தியாருக்கு ஆதரவு கொடுப்பவனாகவே இருந்து வந்திருக்கிறேனே ஒழிய, நான் யாரிடமும் எதற்கும் ஆதரவு உதவி கேட்டதே இல்லை. அதுபோலவே நான்தான் எனது ஆயுளில் யாருக்கும் பணஉதவி செய்திருக்கிறேனே ஒழிய யாரிடமும் எந்தக் காரியத்திற்கும் பண வசூலுக்குப் போனதே கிடையாது.

என்னைப்பற்றி

சுயமரியாதை இயக்கம் திராவிடர் கழகம் முதலியவற்றிற்குக்கூட பணம் வேண்டுமென்று பத்திரிகையில் போடுவேன், கழகத்தோழர்கள் வசூல் செய்வார்கள்; அல்லது பொதுமக்கள் அனுப்பிக்கொடுப்பார்கள். அவ்வளவுதான்; நான் நேரில் யாரையும் கேட்டது கிடையாது; கேட்டு வாங்கியதும் கிடையாது.

எனக்குப் பணத்தாசை ரொம்பவும் உண்டு. செலவு செய்யவும் மனது வராது. யாரையும் கேட்கவும் மாட்டேன்.

ஆனல் பணம் வந்துகொண்டே இருக்கும். சேர்த்துக்கணக்குப்பார்த்து மகிழ்ச்சி அடைந்துகொண்டே இருப்பேன். சரியாகக் கணக்கு வைக்க மாட்டேன். அடிக்கடி இருப்பைக் கணக்குக் கூட்டிப் பார்த்துக் கொள்வேன்.

எனக்கு ஆசையெல்லாம் மக்கள் பகுத்தறிவாளர் (நாத்திகர்கள்) ஆக வேண்டும்; ஜாதி ஒழிய வேண்டும்; உலகில் "பார்ப்பனர்" இருக்கக் கூடாது. இதுதான் எனது கொள்கை. இதற்காகத்தான் காங்சிரசில் கூப்பிட்டவுடன் சேர்ந்தேன்,

நான் காங்கிரசை விட்டதற்கும் இதுதான் காரணம்.

ஜஸ்டிஸ் கட்சி என்னும் பார்ப்பனரல்லாத கட்சியில் சேராமலே அதற்கு நான் ஆதரவளித்ததும் இதற்காகத்தான்.

ஜஸ்டிஸ் கட்சித் தலைமை ஏற்க வேண்டிய அவசியம் ஏற்பட்டதும் இதற்காகத்தான். அக்கட்சி தலைமை ஏற்றவுடன் அக்கட்சிக்கொள்கையாக இம்மூன்றையுமே ஏற்படுத்திவிட்டு அரசியலில் (எலக்ஷனில் நிற்பதில்லை பதவிஏற்பதில்லை.) பிரவேசிப்பதில்லை, என்ற திட்டத்தை ஏற்படுத்திக் கொண்டதும் இதற்காகத்தான். காங்கிரஸ் கட்சி பதவியில் இருந்து விலக்கப்பட்டபோதும் பதவியை வேண்டாம் என்று உதறித் தள்ளினதும் இதற்காகத்தான்.

வெள்ளையன் போன பின்பு 1952—இல் நடந்த தேர்தலின்போது கூட நான் காங்கிரசை எதிர்த்து வேலை செய்தபோதுகூட என் கழகத்தில் இருந்து ஒரு நபரைக்கூட நிறுத்தாமல் கம்யூனிஸ்டுகளுக்கும், காங்கிரஸ் எதிரிகளுக்கும் ஆதரவளித்து, காங்கிரசைத் தோற்கடித்ததும் இதற்கு (எனது மேற்கண்ட கொள்கைகளுக்கு) ஆகத்தான்.

1952—இல் காங்கிரஸ் தோற்றும் மேற்கண்ட எனது கொள்கைப்படி வேறுகட்சி பதவிக்கு வரமுடியாமல் போனதால் காங்கிரஸ் பதவிக்கு வந்து எனக்கு ஆதரவளிப்பதாகக் கூறியும் நான் மறுத்துவிட்டு காங்கிரசை எதிர்த்து இராஜாஜியை காங்கிரசை விட்டுப் போகும்படி செய்ததும் இதற்காகத்தான். அந்தச் சந்தர்ப்பத்தில் காமராஜரை ஆதரிக்கும் முறையில் காங்கிரசை ஆதரித்ததும் இதற்காகத்தான் — அதாவது காமராஜர் பதவிக்கு வந்தஉடன் பார்ப்பனர்களும், அவர்களது சில கூலிகளும் காங்கிரசை (காமராஜரை) எதிர்த்தபோது நானாகவே மேல்விழுந்து காங்கிரசை (காமராஜரை) ஆதரித்ததும் இதற்காகத்தான்.

இந்தச் சந்தர்ப்பத்தில் காங்கிரஸ்காரர்கள் என்னை விரும்பவில்லை என்று தெரிந்தும், நானாகவே காங்கிரசை ஆதரித்துக்கொண்டிருந்ததும் (இந்தக் கொள்கைக்கு) இதற்காகத்தான்.

ஆகவே எனது பொதுவாழ்வு துவங்கியது முதல் இன்றுவரை மேற்கண்டபடிதான் பல கட்சிகளை எதிர்த்தும், பல கட்கிகளை ஆதரித்துத் தொண்டாற்றிக்கொண்டு வந்திருக்கிறேன். வருகிறேன். எல்லாம் ஒரே காரியத்திற்கு (கொள்கைக்கு(ஆகத்தானே ஒழிய கொள்கை மாற்றத்திற்காக அல்ல என்பதை மக்கள் உணர வேண்டும்.

இவ்வளவு மாத்திரம் அல்ல. இனியும் எந்தக்கட்சியை எதிர்ப்பேனோ, எதை எதை ஆதரிப்பேனோ எனக்கே தெரியாது

பொதுவாக நான் சாகும்வரை இந்த மேற்கொண்டகொள்கைகளை மாற்றிக் கொள்ள மாட்டேன் என்று நான் உறுதியாய் இருக்கிறேன் .

— விடுதலை,

பெரியார் மலர்

1968.

அன்னை நாகம்மையாருடன் தந்தை பெரியார்

இருபெரும்....

(8 ம் பக்கத் தொடர்ச்சி)

தொன்மைச் சிறப்பை அவனிக்கு எடுத்துரைக்கிறார். திராவிட இயக்கம் (தி, க.— தி. மு. க,) தமிழகத்தில் ஒரே காலகட்டத்தில் இருபெரும் இயக்கங்களை நடத்தி வருகிறது. அதில் பெரும் வெற்றியும் பெற்று வருகிறது ஆனாலும் முழு வெற்றிபெற்றுவிட்டது என்று சொல்லிவிட முடியாது.

இந்தக் காலகட்டத்தில் திராவிட இயக்கத்தின் பெரும் கிளை இயக்கமாக வளர்ந்துவிட்ட தி. மு. கழகம், தமிழகத்தின் ஆட்சிப் பொறுப்பை ஏற்கிறது. ஏற்றவுடன் அதுவரை மெதுவாக நடைபோட்டுவந்த மறுமலர்ச்சி— சீர்திருத்த இயக்கங்கள் வேகம் பெறுகின்றன.

அண்ணாவின் காலத்திலே சென்னை தமிழ் நாடானது. உலகத் தமிழ் மாநாடு நடத்தியது; திருக்குறள் ஆராய்ச்சிக்கு வழிவகை செய்தது: சீர்திருத்தத் திருமணம் செல்லும் எனச் சட்டம் செய்தது; எல்லாம் மறுமலர்ச்சி சீர்திருத்த இயக்கப்பணிகளே,

அண்ணாவிற்குப்பின் கலைஞர் காலத்தில் அவ்வியக்கங்கள் மேலும் தீவிரமடைந்தன, புகழ்மிக்க புகார் கடலால் அழிக்கப்பட்டது, ஆனல் அதன் சிறப்பை இலக்கியங்கள் இன்றும் இயம்பிக்கொண்டிருக்கின்றன. அழிந்தொழிந்த புகாரைமீண்டும்படைக்கிறார், கலைஞர். தமிழன் மின்சாரத்தைக் கண்டுபிடித்தான், இரயிலைக் கண்டுபிடித்தான், விமானத்தைக் கண்டு பிடித்தான் என்ற சிறப்புகள் இல்லாதவன். எனினும் அவன் கட்டிடக் கலையிலும் சிற்பக் கலையிலும் எல்லோரையும் விஞ்சியவன் என்ற சிறப்பைப் பெற்றவன், அந்தச்சிற்பக்கலை செத்துக் கொண்டிருந்தது. அதற்குக் கலைஞர் புத்துயிர் அளிக்கிறார்.

மாமல்லபுற சிற்பக்கல்விக் கூடமும் வள்ளுவர் கோட்டமும் இன்ன பிறவும் அக்கலைகளுக்குப் புத்துயிர் அளிக்கு பணிகளே.

அன்றுமொழியின் பேரால் மதத்தின் பேரால் தமிழ்ச்சமுதாயத்தின் தனித்தன்மைகள், சிறப்பியல்புகள் அழிக்கப்பட்டன.ஆனல்இன்று அரசியலின் பெயரால் அத்தீச்செயல்கள் நடக்கத் தொடங்கின, அத்தீச்செயல்கள்நடக்க ஒட்டாமல் கலைஞர் அரசு தடுத்து நிறுத்திக் கொண்டிருந்தது. தேசியத்தின் பெயரால் தேசிய இனங்களை அழிக்கும் முயற்சிக்கு அவர் முட்டுக்கட்டையாக இருந்தார்.

இந்தியாவை ஹிந்து— யாவாக — ஹிந்தி – யாவாக மாற்றும் முயற்சியை அவர் முறியடித்துக் கொண்டிருந்தார். வடபுலத்தார் பொறுத்துக்கொள்வார்களா? தங்களுக்கிருக்கும் அரசியல் பலத்தால் ஆட்சியைக் கவிழ்த்துவிட்டனர். ஆனல் அவர்களால் ஆட்சியைத்தான் கவிழ்க்க முடியுமே தவிர திராவிட இயக்கத்தின் பணியைத் தடுத்திட முடியவில்லை. முடியவும் முடியாது. அவ்வியக்கத்தைக் கட்டிக் காப்பதுதான் தமிழ்ச் சமுதாயத்திற்கு நாம் செய்யும் தலையாயபணி.

பெரியாரின், பேரறிஞர் அண்ணாவின் பிறந்தநாளில் அப் பணியைத் தொடர்ந்து செய்வோம். எந்த வித இன்னல் வந்தாலும் தொடர்ந்து செய்வோம் என்று சூளுரைப்போம்.

பெரிய புரட்சிக்காரர்!

பேரறிஞர் அண்ணா



கல்லூரி காணாத கிழவர்! காளைப்பருவ முதல் கட்டுக்கடங்காத முரடர்! அரசியல் நோக்கத்துக்கான முறையிலே, கட்சி அமைப்பு இருக்க வேண்டுமென்று அறியாத கிளர்ச்சிக்காரர்! பொதுமக்கள் மனம் புண்படுமே, புண்பட்ட மக்கள் கோபத்தால் தாறுமாறாகப் பேசுவரே, ஏன் வீணாக அவர்களின் ஆத்திரத்தைக் கிளப்பவேண்டும்என்று யூகமாகநடந்து கொள்ள மறுப்பவர்! யாராரைத் தாக்கிவிடுகிறாரோ அவர்களாலேயே தாக்கப்படுபவர்.

கவர்னரைக் காணவேண்டுமே, அதற்கேற்ற கோலம் வேண்டாமோ என்ற யோசனை அற்றவர்! தமிழ், ஆங்கில தினசரிகளின் ஆதரவு இல்லாதவர்!

ஆரியமதம், கடவுள் எனும் மூடமந்திரங்களைச் சாடுவதன் மூலம், கேடுவரும் என்று எச்சரிக்கும் போக்கினரின் இச்சைக்குக் கட்டுப்பட மறுப்பவர். ஆம்! இராமசாமியின் கட்சியிலே, தோட்டக் கச்சேரி கிடையாது! முன்சிபல் வரவேற்புகளும், முடுக்கான விளம்பரங்களும் கிடையாது! லண்டன் கிளை கிடையாது! லட்சாதிபதிகளின் பிட்சை கிடையாது!

சாமான்ய மக்களின்—இது அரசியல், இது மதம் என்று வகுத்துப் பார்க்கவும் முடியாத மிகமிகச் சாதாரண மக்களின்—கூட்டுறவை மட்டுமே பெற்றவர்! தேர்தலா? வேண்டாம்! பதவியா? கூடாது! துரைமார் தயவா? தூ, இது இனிப்புப் பூச்சுள்ள எட்டி! என்றெல்லாம் கூறுகிறார். சிறைச்சாலை என்ற பேச்சுக் கேட்டால், முகம் மலருகிறது கிளர்ச்சி என்ற கருத்து, இனிக்கிறது இந்தக் கிழவருக்கு! இவ்வளவு வருஷங்களாகப் பொதுவேலை செய்தார்; ஒரு 'சர்' பட்டம் பெற்றாரா? ஜினிவா போனாரா? (சர்க்கார் செலவில்) அமெரிக்காபோனாரா? (அரசாங்கசெலவில்?) எதைக்கண்டார்? எட்டுமுறைசிறைக் கோட்டம் போய்வந்தார்! இவர்தானையா இராமசுவாமி நாயக்கர்!

★ ★ ★

உலகிலே, பலப்பல தீவிரவாதிகள் தோன்றியது பற்றிய வரலாறுகள் நமக்குத் தெரியும். நாத்திகம் பேசிய நாவலரையும் நாம் அறிவோம். நெருப்பாறு தாண்டும் வீரரும் நமக்குத் தெரியும். ஆனால், அவர்களுக்கும் பெரியாருக்கும் உள்ள ஒரு பெரிய வித்தியாசத்தை நாம் உணரவேண்டும். அவர்கள், படித்த—பக்குவ மனம் படைத்த கூட்டத்திலே பேசினர்; எழுதினர்; பெரியாரின் பணி, தற்குறிகள் நிரம்பியதமிழகத்திலே, கல் வீச்சு, மண் வீச்சுக்கிடையே என்பதை அறியவேண்டும்! அதிலும் சகலமும் உணர்ந்த,சகலகலா வல்லவர்களும்,வெறும்சாமியாடிகளைக் கூடக் கண்டித்துப் பேசச் சக்தியற்றுக்கிடந்த காலை, பெரியாரின் பெருங்காற்றுத் தமிழகத்திலே வீசி, நச்சுமரங்களை வேரோடு கீழே பெயர்த்தெறிந்தது என்பதையும் உணரவேண்டும்...பெரியார், கிளர்ச்சி பல நடத்தி அநுபவம் பெற்ற கிழவர்! சீமான்களின் சீற்றத்தாலும் சுடப்பட முடியாத அளவு, பொதுமக்களின் தொடர்பு எனும் உரம் ஏறிய உள்ளமும் உடலும் படைத்தவர்! தமிழகத்தின் தன்மானத்திற்கே வித்தூன்றிய தலைவர்!...

★ ★ ★

நாத்திகர்! வகுப்புவாதி! பார்ப்பனத் துவேஷி! விதண்டாவாதி! வீண் கலகப்பிரியர் எனத் தூற்றினர்; பிடிசாபம் என்றனர்; கொடு கல்லடி என்று கூவினர்; பெரியார் பேச ஆரம்பித்த காலத்திலே. மதத்தைக் கெடுக்கிறார்—நாட்டைக் கெடுக்கிறார் என்று கூவினர், அவர் மொழி கேட்டு.

ஒஹோ, இவர்தான் எல்லாம் அறிந்தவரோ? பிறர் பித்தரோ? என வாதம் புரிந்தனர், அவரின் புரட்சிக் கீதம் கேட்டு.

சாதி சமய ஆச்சாரம் போச்சு! சாஸ்திர புராண இதிகாசங்களின் மதிப்பு கெடலாச்சு என ஓலமிட்டனர் வைதீகக் கூட்டத்தினர்.

புரட்சிக்காரராக இருக்கிறார் இந்த ஆசாமி! புதுமை பல பேசுகிறார்; பிடித்து அடையுங்கள் கூண்டில் என்றனர் சர்க்கார்.

அவர், தமது புரட்சிப் பிரச்சாரத்தைத் துவக்கியபோது, அவரை வீழ்த்தக் கிளம்பிய புயலின் வேகத்தை என்னென்பது! அதனைச் சமாளித்துச் சாயாது நின்று போரிட்ட அவரது அஞ்சாநெஞ்சை என்னென்பது! அதுதான், அவருடைய பெரியார் தன்மைக்குக் காரணம் என்று கூறுவேன். அதுவே, தமிழரின் தலைவராக அவர் வந்ததன் காரணமும் என்பேன்.

★ ★ ★

பெரியார், ஜாதிமத ஊழல்களை மட்டுமல்ல, மக்களிடையே காணப்படும் பொருளாதார ஏற்றத்தாழ்வுகளையும் பலமாகக் கண்டித்து வருகிறார் என்பது, அனைவருக்கும் தெரியும்.

அவருடைய ஜாதி ஒழிப்புப் பிரச்சாரங்கூட வெறும் மதத்திருத்தமோ மக்களிடை ஏற்படவேண்டிய மனத்திருத்தமோ மாத்திரமல்ல, ஜாதி முறையையே — வர்ணாஸ்ரம தர்மத்தையே, அவர் முற்காலத்தில் தந்திரசாலிகள் அமைத்துக்கொண்ட பொருளாதாரச் சுரண்டல் முறை என்று நம்புகிறார். தக்க காரணங்காட்டி இதனை நிருபித்திருக்கிறார், ஆகையால், ஜாதி முறையை அவர் எதிர்க்கிறார் என்றால்,பொருளாதார பேத நிலையை உண்டாக்கியதும், நிலைத்திருக்கச் செய்வதும், இனியும் வளரச் செய்யக்கூடியதுமான கொடிய ஏற்பாட்டைத் தாக்கித் தகர்க்கிறார் என்றே பொருள். அதாவது, சமதர்மத்துக்கான சூழ்நிலையை ஏற்படுத்துகிறார்.

தமிழகத்தாரின் மனதிலே கிடக்கும் பழங்காலக் கொள்கைகளை, அவர், ஜாதீய முறையின் மூலம் வளர்ந்துள்ள முதலாளித்துவத்தின் முடிக்கயிறுகள் என்று எடுத்துக்காட்டியே கண்டிக்கிறார். அவருடைய பெரும்படையின் பணி, சமதர்மத்துக்கே பயன்படுகிறது. பிறர் அதனை ஏற்றுக்கொள்ள மறுப்பினும் — மதிப்பிடக் கூசினும், இத்தகைய பணி சோவியத்தில் தேவையான அளவுக்கு மேல், புரட்சிக்கு முன்பு செய்யப்பட்ட காரணத்தாலேயே, புரட்சி சாத்தியமாயிற்று. பாட்டு, கூத்து, கதை, காவியம், ஓவியம் முதலிய பல்வேறு துறைகளிலும் இதற்கான பிரச்சாரம் செய்யப்பட்டு, ஏழை ரஷ்யன் மனதிலே தூவப்பட்டிருந்த நெடுங்காலக் கருத்துக்களை அறவே ஒழித்ததால்தான், மாவீரன் லெனின் புரட்சி மார்க்கத்தைக் காட்டியவுடன், சிங்கக் கூட்டம் சீறி எழுந்தது! கிழித்து எறிந்தது பகைக் கூட்டத்தை!

இந்த மூலக் கருத்தை நன்கு தெரிந்ததாலேயே, இன்று பெரியார் நடத்திச்செல்லும் இயக்கம்,நாட்டுமக்களிடைநல்லறிவுப்பிரச்சாரத்தை விடாமல் செய்து வருகின்றது. இலட்சியப் பாதையில் நடந்து சென்றவண்ணம் இருக்கிறது. அதன் இறுதியில் சோவியத்சோபிதம்காணவேண்டும் என்ற உறுதியுடன் சாக்ரடீஸ், லெனின், பிராட்லா, பர்னாட்ஷா, ரூசோ முதலிய பேரறிஞர்களும் புரட்சிக்காரர்களும் எதற்காகஉலகிலே போற்றப்படுகிறார்களோ, அவர்கள் வழி நிற்க எண்ணுகிறதோ அவ்வளவையும் ஒருங்கே திரட்டி ஒரு சொல் பார்க்க வேண்டுமானால் அது பெரியார்தான்

('...' புதுவை ஞாயிறு நூற் பதிப்பகம் வெளியிட்ட பெரியார் இராமசாமி' என்ற தொகுப்பு நூலிலிருந்து)

பட்டிமன்றங்களில் அண்ணா

பேராசிரியர் க. அன்பழகன்

ஒரு காலத்தில் பட்டி மன்றங்களில் பங்கு கொண்டு உரை நிகழ்த்திப் பலரது பாராட்டினையும் பரிசுகள் பலவற்றினையும் பெற்ற மாணவராக இருந்த அறிஞர் அண்ணா அவர்கள், இன்றும் பட்டிமன்றங்களில் ஆர்வத்துடன் விவாதிக்கப்படும் ஒரு பொருளாக, கருத்துப் பெட்டகமாக, தத்துவமாக ஆகியுள்ளார்.

அண்மைக் காலத்தில் நாடெங்கும் நகர்கள் தோறும் பட்டிமன்றங்கள், கவிதை அரங்குகள், கருத்தரங்கு, இலக்கியத் திறனாய்வுக் கூட்டங்கள் நடைபெற்று வருகின்றன. கல்லூரி—பள்ளி மேடைகளிலும் இவை இடம் பெறுகின்றன. மக்களின் அறிவை வளர்க்கவும், சிந்தனை ஆற்றலை மேம்படுத்தவும், பங்கு கொள்வோரின் கல்வியறிவைத் தெளிவிக்கவும், மதி நுட்பத்தைச் சிறக்கச் செய்யவும், சொல்லாடல் வல்லமையை வளர்க்கவும், கருத்தினை விளக்கும் திறனை உயர்த்தவும் இந்த அரங்குகள் பயன்படுகின்றன.

அண்ணாவின் மாணவப் பருவத்தில் இவை துவக்க நிலையில் அருகி இருந்தன. சென்னை மாநகரில் செயற்பட்ட ஒய். எம். சி. ஏ. பட்டிமன்றத்திலும்—கல்லூரிகளில் அமைந்த பட்டிமன்றங்களிலுமே அண்ணா அவ்வப்போது பங்குகொண்டார். அப்படிப்பட்ட பட்டி மன்றங்களிலே ஈடுபட்டு, தமது நாவன்மை, சொல்லாற்றல், வாதத் திறன் ஆகியவற்றை வளர்த்துக் கொண்டவர்தான் அண்ணா.

"கேட்டார்ப் பிணிக்குந் தகையவாய்க் கேளாரும், வேட்ப மொழிவதாஞ் சொல்" என்னும் குறட்பாவினால் சுட்டப்படும் சொல்லாற்றலினைத் தமது இயற்கை மதிநுட்பத்தாலும், தேர்ந்த, தெளிந்த நூலறிவாலும், அப்படிப்பட்ட பட்டிமன்றங்களில் உருவாக்கிக் கொண்டவர்தான் அறிஞர் அண்ணா!

மாற்றுக் கருத்துடையார் கொள்கையைக் காரணத்துடன் மறுத்தலும், தனது கொள்கையைத் தகுந்த சான்றுகள் காட்டி நிலைநிறுத்தலும், மாற்றாரும் ஏற்கும் வண்ணம் விளக்கி உரைத்தலும் அண்ணா அவர்கட்குக் கைவந்த கலையாகும்.

மாற்றாரையும் மதித்து, அவர்தம் கொள்கையையும் அதற்கான காரணங்களையும் உள்ளங் கொண்டு, அதற்குரிய நியாயமான சிறப்பை மறுக்காது ஏற்று, பின்னர் அதிலுள்ள குற்றங் குறைகளையும், அதன் விளைவுகளையும் எடுத்துக்காட்டி, தமது கொள்கையின் உயர்வையும் பயனையும் விளக்கும்போதே ஒருவரது வாதம் வெற்றிபெறும். அதனைத் தெளிவாக உணர்ந்து கையாண்டவர் அண்ணா!

'மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணமுண்டு' என்னும் கருத்து இளமையிலேயே அவரிடத்தில் அரும்பியிருந்தது.

பட்டி மன்றத்தில் பங்கேற்கும் மாற்றுக் கருத்தினர்தம் (ஒட்டியும் வெட்டியும் பேசுவோர், ஒருவருக்கு ஒருவர் மாற்றுக் கருத்தினர் ஆவர்) அறிவு, ஆற்றல், தகுதியையும், அவர் வாதாடும் முறையையும், அவர்தம் கொள்கையையும், அவர் எடுத்து வைக்கும் சான்றுகளையும் அண்ணா ஆய்ந்து பார்த்துக்கொள்வார். மாற்றுக் கருத்தினர் தம் அறிவாற்றல் தகுதிகளைக் குறைத்து மதிப்பிடாது பாராட்டிக் கூறிவிட்டு, அவரது விவாதமிடும் வல்லமையைச் சிறப்பித்துவிட்டு, காட்டிய சான்றுகளுக்கு எதிர்ச் சான்றுகளை எடுத்துவைத்து அவர்தம் கொள்கையின் குறையையும் பயனற்ற தன்மையையும் விளக்கி - அப்படிப்பட்ட அறிவாற்றலும் வாதத்திறனும் இப்படிப்பட்ட குறையுள்ள கொள்கைக்கா பயன்படவேண்டும்? என்று கேட்பது போன்று உரையை முடிப்பார். மாற்றுக் கருத்துக்களை அலசி ஆராய்ந்து, பகுதி பகுதியாகப் புட்டுக் காட்டும் ஒரு முறையை மேற்கொண்டே தமது கொள்கையை நிலைநாட்டுவார் அண்ணா!

பிற்காலத்தில், கம்பரது இராமாயணம் நமது திராவிடத் தமிழ் இனத்தைவடநாட்டவருக்கு வழிபாடு செய்யும் தாழ்ந்த இனமாகவே மாற்றி விட்டது என்பதனால் தந்தை பெரியார் அவர்களால் கண்டிக்கப் பட்டது. அதனை எரிக்க வேண்டும் என்றார் பெரியார். தந்தை பெரியார் சார்பில் அறிஞர் அண்ணா, கம்ப இராமாயணம் எந்த வகையில் இழுக்கினை விளைவிப்பது என்று விளக்கி வாதாடினார்.

அப்படிப்பட்ட விவாதம் ஒன்றினைச் சென்னையில், சொல்லின் செல்வம் பேராசிரியர் சேதுப்பிள்ளை அவர்களுடன் நிகழ்த்தினார். மற்றொரு விவாதத்தினைச் சேலத்தில்—நாவலர் பசுமலை சோமசுந்தர பாரதியாரோடு நிகழ்த்தினார்.



அந்த விவாதங்களில், பேராசிரியர் சேதுப்பிள்ளையையும்—நாவலர் பாரதியையும் அவர்களது தமிழ்ப் பற்றையும்—தொண்டையும் போற்றி உரைத்துவிட்டு கம்பனது தமிழ் ஆற்றல்—கவிதைத் திறன்—படைப்பு ஆற்றல் இவற்றையும் பாராட்டி எடுத்துக் கூறிவிட்டு, ஆனால் அப்படிப்பட்ட கவிதைத் திறன் கொண்டு வடிவெடுத்த காவியம்—'தெய்வ மாகாவியம்' என்று போற்றுவதற்கு ஏற்ற தகுதி கொண்டிருக்கிறதா? என்பதைச் சிந்திக்குமாறு வாதாடினார்.

அந்தக் காவியத்திலே வரும் காமக் களியாட்டங்களும் - காம உணர்வைத் தூண்டும் வருணனைகளும் காகுத்தன் கடவுள் தன்மை உடையவன் என்பதை ஒப்புக் கொள்ள இடந்தருமா? என்னும் வினாவை பலப் பல சான்றுகள் தந்து எழுப்பினார். அண்ணாவின் கருத்துக்கு ஆதரவு பெருகி நின்றது என்பதை கூறத் தேவையில்லை. கம்ப இராமாயணம் குறித்து அண்ணா அவர்கள் நடத்திய அந்த விவாதங்கள், 'பட்டி மன்ற' நிகழ்ச்சிகளிலேயே வரலாற்று முக்கியத்துவம் பெற்றவையாகும்.

அண்ணா அவர்கள், தமது கருத்தை ஏற்போர் சிலரேயாயினும் எதிர்ப்போர் பலராயினும் அதைப் பொருட்படுத்தியதில்லை. தோல்வி மனப்பான்மை அவரிடத்தில் தோன்றியதில்லை, இலட்சியப் பற்றே மேலோங்கி நின்றது. தமது கருத்தை ஏற்போர் பலரானபோதிலும் அதனால் வெற்றிச் செருக்கு அவரிடம் தோன்றியதில்லை.

எந்த அவையில் உரையாற்றினும், தமது அடக்கம் புலப்பட, அவையோர் மதிப்பு மேம்பட, மாற்றார் உள்ளம் தமது கருத்தில் சிலவற்றையேனும் ஏற்றிட கொண்ட கொள்கையில் தமது உறுதி தெளிவுபட உரையாற்றுவதே அண்ணாவின் அரிய திறன்.

தமது பெருமையைத்தாமே சாற்றும் முறையில் தாம் கற்றுள்ள கல்வி பெரிதென்றோ தமது வல்லமை பெரிதென்றோ தம்மை மறுப்பவர் தகுதியால் குறைந்தவர் என்றோ தவறியும் பேசிடாத பெருந்தகைமை அவரிடத்தில் சிறந்திருந்தது.

பயனில சொல்லாமை அவரது பக்குவம். கடுஞ்சொல் கலவாமை அவரது பண்பாடு. 'சினம் என்னும் சேர்ந்தாரைக்கொல்லி, அவரிடம் பிறந்ததில்லை. சூழ்நிலையால் ஆத்திரப்பட்டு, பேச்சிலே

(தொடர்ச்சி 20-ம் பக்கம்)



இந்தியாவும் இந்தியும்!

ஏ.வி.பி. ஆசைத்தம்பி, எம்.பி.

இந்தியாவில் இன்றுள்ள 22 மாநிலங்களில் ஏழு மாநிலங்களில்தான் இந்திபேசுவோர் பெரும்பான்மை.

1972 மத்திய அரசால் எடுக்கப்பட்ட ஜனத் தொகை அடிப்படையில் 55 கோடிமக்களில்16 கோடி மக்கள் இந்தி பேசுவதாக மோசடியாகக் கூறப்பட்டுள்ளது.

"மோசடி'' - என்று நான் கூறுவதற்குக் காரணம் இந்தி மொழி மட்டும் பேசுவோர் 16 கோடி அல்ல— இந்தி மொழியின் கீழே 49 மொழிகளைச்சேர்த்துக்கொண்டு அம் மொழிகள் பேசுவோர் அனைவரும், இந்தி மொழி பேசுவோர் என்று, இதரரை ஏமாற்ற, எண்ணிக்கையை அதிகப் படுத்திக்காட்ட, இந்தியாவில் இந்திமொழி பேசுவோர் 16 கோடி என்று குறிப்பிட்டுள்ளனர்.

ஆனால்—

உண்மையில் அசல் இந்தி என்பது "கூடிபோலி'' என்று கருதக் கூடிய மொழிதான். அந்தக் கடிபோலி இந்தி மொழியை இந்தியாவில் பேசுவோர் 2 கோடிதான்.

49 மொழிகளை இந்திமொழியோடு இணைத்து இந்தி பேசுவோர் எண்ணிக்கையை அதிகரித்துக்காட்ட முயற்சிப்பதுபோல், தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், துளு போன்ற திராவிட மொழிக் குடும்பத்தை சேர்ந்த மொழிகளை ஒன்றுபடுத்தினால் — வட இந்தியாவில் மலைப் பகுதிகளிலும், ஆதிதிராவிடர்களிடமும் பேசப்படுகிற திராவிட இன மொழிகளையும் இணைத்துக் கணக்கிட்டால், இந்தியாவில் திராவிட இன மொழியே அதிகம் பேசப்படுகிறது என்பதை ஆராய்ச்சியாளர்களால் நிரூபிக்க முடியும்.

பெரும்பான்மையினரால் பேசப்படும் மொழியேதேசிய மொழி— ஆட்சி மொழி என்பது ஒரே ஒரு நாடாக இருக்கும் இடத்திற்குத்தான் பொருந்துமே தவிர, பல நாடுகள்— பல மொழிகள்— பல கலாச்சார நாகரீகங்கள்— உள்ள இந்தியா போன்ற பல நாடுகளை உண்டாக்கிய உபகண்டத்திற்கு பொருந்தாது.

ஒரு அந்நிய ஆட்சி அல்லது ஏகாதிபத்தியம், ஒரு நாட்டை அல்ல - ஒரு உபகண்டத்தை மட்டுமல்ல — ஒரு கண்டத்தையே கூட அடக்கி ஆளும் போது ஒரு மொழி ஆட்சி என்பது தற்காலிகமாக இருக்கலாமேதவிர நிரந்தரமாக நீடித்து இருக்கமுடியாது - என்பதற்கு வெள்ளையர் ஆட்சி நல்ல சாட்சியாகும்.

பல நாடுகளை உள்ளடக்கிய இந்தியா என்ற உபகண்டம் ஒருநாடுபோல ஒற்றுமையாக ஒன்றாக இருப்பதற்கு – எத்தனையோ முறைகள் இருக்க அதனை விட்டுவிட்டு, ஒரு மொழியின் கீழ் இந்தியாவைக்கொண்டுவர நினைப்பதும் ஒரு புதிய ஏகாதிபத்தியம் தோன்ற உதவுமேயல்லாது, இந்திய ஒற்றுமையை ஒருக்காலும் காப்பாற்றாது.

உலகில் ஆதிக்க ஏகாதிபத்தியவாதிகளிடமிருந்து தற்காத்துக்கொள்ள— ஆசிய நாடுகளெல்லாம் ஒன்று சேர்ந்து இருக்க நினைத்து, ஆசியா ஒரே நாடு — என்று இயங்க ஆரம்பிக்கிறபோது, ஆசியாவில் சீன மொழிதான் பெரும்பான்மையினர் பேசும் மொழி — எனவே சீன மொழிதான் ஆசியாவின் தேசிய மொழி ஆட்சி மொழி, இணைப்பு மொழி—என்று சீனர்கள் கூற ஆரம்பித்தால், ஆசியா ஒன்றுபட்டு இருக்க முடியுமா? வல்லரசுகள் ஆசியாவை விழுங்கிவிடக் கூடாதே என்பதற்காக, ஆசியா ஒன்றுபடும்போது, ஆசியாவிற்குள் இருக்கும் நாடே, மற்ற ஆசிய நாடுகளை மொழி ஆதிக்கத்தின்மூலம் விழுங்க நினைத்தால்—ஆதிக்கம் செலுத்த அடிகோலினால், ஆசியா ஒரே நாடு என்ற கொள்கையை இந்தியா ஏற்குமா?

இதைப்போலத்தான் உலகில் இந்தியா ஒரு பெரிய நாடு மாதிரி ஒன்றுபட்டிருந்தால் எல்லா வகையிலும் நலமாக இருக்கும் என்ற அடிப்படையில் அனைவரும் இந்தியராக வாழ சம்மதிக்கிறபோது, இந்தி மொழிதான் தேசிய மொழி— ஆட்சி மொழி — இணைப்பு மொழி — என்று கூறினால் அரசியல் அறிவு உள்ளவன் எப்படி ஏற்றுக் கொள்ள முடியும்?

இதை இந்தியாவிலேயே முதன் முதலாக 1938 முதல் எடுத்துக் காட்டிப் போராடியவர் தந்தை பெரியார்; அவர் வழியில் போராட்டத்தைப் புரட்சியாக்கியவர் பேரறிஞர் அண்ணா அவர்கள். பெரியார் அண்ணா ஆகியோர் வழியில் —இந்தியை எதிர்த்திடும் போர்ப் பாசறையாக விளங்குவது, கலைஞரை தளபதியாகக் கொண்ட திராவிட முன்னேற்றக் கழகம்.

தந்தை பெரியார் பிறந்தநாள் — அறிஞர் அண்ணா பிறந்தநாள்—தி. மு. கழகம்தோன்றிய நாள் — ஆகிய மூன்றும் ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் திங்களில் வருகிறது.

இதனை முப்பெரும் விழாவாக வருடா வருடம் கொண்டாடி திராவிட இனத் தமிழ் சமுதாயத்தைக் காத்திடும் உறுதிமொழியை எல்லோரும்எடுத்தாக வேண்டும்.

வாழ்க பெரியார். பேரறிஞர் அண்ணா, வளர்க தி. மு. க; வெல்க கலைஞர் உழைப்பு.

நம் நாடு மலருக்கு எமது வாழ்த்துக்கள்!

ஆடவர் ஜவுளிகளின் ஜீவநதி கன்னிவாடி பிரதர்ஸ்!

சூட்டிங்களின் கலைப்பெட்டகம் கன்னிவாடி பிரதர்ஸ்
சூட்டிங் அண்டு சர்ட்டிங்குகளுக்கு சிங்காரக் கொலுமண்டபம்
கன்னிவாடி பிரதர்ஸ்

மேலக் கோபுரத்தெரு மதுரை—62500 (போன்: 22971)

கன்னிவாடி பிரதர்ஸ் டிரஸ்ட.
அமெரிக்கன் கல்லூரி எதிரில்; மதுரை 2

மெத்தை, தலையணைகளுக்கு கன்னிவாடி பிரதர்ஸ் (பர்ம்)
அம்மன் சந்நிதி (மாடிக்கடை) மதுரை—1, போன்: 32978

காலத்தை வென்றவர்கள்

எஸ். ஜே. சாதிக்பாட்சா பி.ஏ., பி.எல்., எம்.எல்.ஏ

தந்தை பெரியார் அவர்களின் நூற்றாண்டு விழாவையும், பேரறிஞர் அண்ணா அவர்களின் எழுபதாமாண்டு பிறந்த நாள் விழாவையும் நாட்டோர் அனைவரும் நன்முறையில் சிறப்பித்துக் கொண்டாடி வருகின்றனர்.

தமிழகத்தைச் சேர்ந்த அனைத்துக் கட்சித் தலைவர்கள் மட்டுமல்லாது, இந்தியாவிலிருக்கும் பிறமாநிலத் தலைவர்களும் இவ்விழாக்களில் பங்கேற்க மனமுவந்து இசைந்துள்ளனர்.

மாபெரும் இவ்விரு— தலைவர்களும் தோன்றியிராவிட்டால் தமிழகத்தின் நிலை எப்படி இருந்திருக்கும் என்பதைக் கற்பனை செய்து பார்க்கவே நெஞ்சம் அஞ்சுகிறது,

உலகமென்ற நாடக அரங்கில் எத்தனை யெத்தனையோ சீர்திருத்தவாதிகள், பகுத்தறிவாளர்கள், சமுதாய மறுமலர்ச்சி ஏற்படுத்திய மேதைகள் தோன்றி மறைந்தார்கள் என்றபோதும்,

அத்தனை பேரும் மக்கள் மனதில் பதிந்து தொடர்ந்து நினைவு கூரப்படுவதில்லை.

ஆனால் –

ஞாலம் உள்ளவரை காலமெல்லாம் போற்றிப் புகழப்படும் தகுதி பெற்றவர்கள் விரல்விட்டு எண்ணக்கூடிய அளவிலேயே இருப்பார்கள்.



ஏதன்ஸ் என்றால் ஒரு சாக்ரடீசும், பிரெஞ்சு என்றால் ஒரு ரூசோவும், ஜெர்மனி என்றால் ஒரு கார்ல்மார்க்சும் நெஞ்சத்தில் நிழலாடுவதுபோல் இந்தியா என்றால் ஒரு பெரியார் தான் இதயத்தில் இடம்பெறுவார்.

மத மூடநம்பிக்கைகள், உயர்சாதி–கீழ்ச்சாதி பிளவுகளால் ஏற்பட்ட அநியாய அக்கிரமங்கள், பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் போன்றவற்றை வேரோடும், வேரடி மண்ணோடும் தூர்த்துத்துடைக்கப் போராடியதுபோலவே— பெண்ணடிமைத்தனத்தையும் எதிர்த்துக் கடுமையாகப் போரிட்டார் பெரியார்.

உயிரும் உணர்வும் உள்ளவர்களாகக் கருதாது, வெறும் ஊமைகளாய், ஆமைகளாய், கட்டிலறைப் பதுமைகளாய்க் கருதப்பட்டு அடிமைப் புழுக்களாக அவமதிக்கப்பட்ட பெண் இனத்தை மேம்படுத்தி 'ஆணுக்கிணையானவளே பெண்ணும்' என்ற மாபெரும் மாற்றத்தை ஏற்படுத்தியவர் பெரியார்!

பெரியாரின் சித்தாந்தங்களுக்கு உயிரூட்டி—கூடுமானவரை அவைகள் சட்ட அங்கீகாரம் பெறச் செய்ய முனைந்தவர் 'தளபதி' என்றழைக்கப்பட்ட பேரறிஞர் அண்ணா.

'எந்த வர்க்கத்தின் கையில் அரசு எந்திரம் இருக்கிறதோ அந்த வர்க்கத்தின் நலன்தான் பாதுகாக்கப்படும்' என்ற மார்க்சிய போதனையை உணர்ந்தவர் அண்ணா; அரசு எந்திரத்தைக் கைப்பற்றாது தொழிலாளர், விவசாயிகள், ஏழை எளியோர்-ஆகியோரின் நலிந்த வாழ்வுக்குப் புத்துயிர் ஊட்ட இயலாது என்பதைப் புரிந்துகொண்டு அந்த அரசு எந்திரத்தைக் கைப்பற்றத் தீவிரமாக முனைந்தார்; வெற்றியும் பெற்றார்.

முழுமையாக இரண்டாண்டுகள் கூட அண்ணா ஆளவில்லை என்றபோதும் அந்தக் குறுகிய காலகட்டத்தில் அவர் சாதித்தவைகள் நெடும்புகழ் பெறத்தக்கவைகள் என்பதை மாற்றாரும் ஒப்புக்கொள்வர்.

'பெரியாரின் பார்வையின் கீழ்' அண்ணாவின் தலைமையில் நம்முடைய இனம், நலன், மொழி அனைத்தும் பாதுகாக்கப்பட்டு எதிர்காலம் ஒளிமயமாக என்றென்றும் திகழும்' என்று நினைத்து நிம்மதிப்பெருமூச்சு விட்டுக்கொண்டிருந்த தமிழர் எண்ணத்தின் மீது— அடுத்தடுத்து இரண்டு பேரிடிகள் விழுந்தன! ஆம்... மரணத்தின் நிழல் அண்ணாவின்மீதும், பெரியார் மீதும் கவிழ்ந்து அவர்களை நம்மிடமிருந்து அகற்றியது...

தமிழகம்கண்ணீர்க்கடலில் மூழ்கியபோதும் – 'அவர்களுக்குப் பின் யார்?' என்றகேள்வி எழுந்துநம்மை மருட்டவில்லை! (காந்திக்குப் பின் யார்? நேருவுக்குப் பின் யார்? சாஸ்திரிக்குப் பின் யார்?—போன்ற— 'இவருக்குப் பின் யார்?' என்ற' கேள்வி இந்திய அரசியலரங்கில் அடிக்கடி எழுந்து ஆழ்ந்த கவலை எழுப்பியது அனைவரும் அறிந்ததே)

பெரியாரின் பகுத்தறிவுக் கொள்கைகளால் 'தாலாட்டப்' பட்டு-பேரறிஞர் அண்ணாவின் அரசியலறிவால் 'பயிற்று'விக்கப்பட்டு – இருவரின் எண்ணப்போக்கையும், தீவிர செயல்பாட்டுத் திறனையும்

ஒரு சேரப்பெற்ற தானைத்தலைவர் கலைஞர், இப்போது 'சுமையை' தன் தோளுக்கு மாற்றிக் கொண்டுள்ளார்!

எதிர்ப்புகளுக்கஞ்சாதவர் நம்முடைய தானைத்தலைவர் என்பதை நெருக்கடி காலச் சம்பவங்கள் மெய்ப்பித்துவிட்டன. தமிழர் நலன் காக்கும் நம் தானைத்தலைவரின் கரத்தை வலுப்படுத்தி — பெரியார், அண்ணா பெயரைச் சொல்லிச் சொல்லி அரசியல் பிழைப்பு நடத்தி ஆதாய வேட்டையாடும் இனத்துரோகிகளை அரசியலரங்கிலிருந்து தூக்கி எறிவோம்... தூக்கி எறிவோம் என உரத்துக் குரலெடுத்து இந்த முப்பெரும் விழா நாளில் சூளுரைப்போமாக!

விடுதலையில் பூத்த ஒரு மலர்...

(17-ம்பக்கத்தொடர்ச்சி)

தியாகங்கள் பல புரிந்தவர் பெரியார். நாட்டுக்கு அரசியல் விடுதலை மட்டும் கிட்டிப் பயனில்லை; சமுதாய விடுதலையும் கிடைக்க வேண்டும் என்பதற்காகத்தான் தமது வாழ்நாள் முழுவதும் உழைத்தார், அந்த இலட்சியத்தின் அடிப்படையிலேயே 'விடுதலை' என்ற பெயரிலேயே இதழையும் தொடங்கினார்.

பெரியார் விரும்பிய 'விடுதலை' நாட்டில் மலரா விட்டாலும், அது அரும்புவதற்காக நாளும் இதழ் விட்டு வந்த 'விடுதலை' ஏடு அன்றைக்கு மொட்டவிழ்த்து மலர்ந்தது. அந்த மலரைக் கண்டு பெரியாரும் நாங்களும் மகிழ்ந்தோம்.

பெரியாரின் கனவும், பேரறிஞர் அண்ணாவின் இலட்சியமும் ஈடேறும் வரை 'விடுதலை'யும், 'முரசொலி'யும் 'நம் நாடும்' இயக்க ஏடுகளும் இலட்சிய மலர்களை மலர்விக்க வேண்டும்.

தமிழினத்தின் விடிவெள்ளியாகவும் தந்தைபெரியாரின் – பேரறிஞர் அண்ணாவின் வழித்தோன்றலாகவும் திகழும் நமது தானைத் தலைவர் கலைஞர் அவர்கள் தலைமையில், அணிதிரண்டு பணியாற்றுவதே இலட்சிய மலர்ச்சிக்கு இருக்கின்ற ஒரே வழி!

இருபெரும் இயக்கங்களை நடத்திடும் ஒருபெரும் இயக்கம்!

எல். கணேசன், B.A., B.L

சிந்தனையோ தேங்கிய குட்டை, கலைகளோ உயிரற்ற சடலங்கள். எனவே நிலவும் நிலைமையில் வெறுப்பு; இருக்கும் ஏற்பாட்டில் விரக்தி; தேக்கநிலையைப் போக்கி, சிந்தனைக்கு இயக்கமளிக்கவேண்டும், அறிவுத் தீபத்தைத் தூண்டி எரிய விடவேண்டும். இப்படி விரும்பிய அறிவாளர்கள் நிகழ்காலத்தில் நின்றுகொண்டு, கடந்த காலத்தைத் திரும்பிப்பார்த்து, எதிர்காலத்திற்குப் பாதை அமைக்கக் கருதினர். இறந்தகாலத்தைத் திரும்பிப் பார்த்தபோதுதான் சமுதாயம் இழந்துவிட்ட பழம் சிறப்புத் தெரிந்தது. எனவே புதுப்பாதை அமைக்க முதற்பணியே பழஞ்சிறப்பைப் புதுப்பிப்பதுதான் என்ற முடிவிற்கு வருகின்றனர். முடிவு செயல் வடிவம் பெறுகிறது.



அவ்வடிவமே மறுமலர்ச்சி இயக்கம்.

ஆம், மறுமலர்ச்சி இயக்கம் வைகறைத்திருப்பள்ளி எழுச்சிப் பண். 'உஷா' காலத்துப் பூபாளம்!

பழம் சிந்தனைகளின் மறுபிறப்பு. பண்டைக்கலைகளின் புனர்ஜன்மம், இவ்வியக்கத்தின் தாயகம் இத்தாலி. இதன் முன்னோடிகள் டாண்டேயும். பொக்காசியோவும் இன்னபிற சிந்தனையாளர்களும் இவ்வியக்கத்தின் ஊற்றுக் கண்;

இவ்வியக்கம் 14.ம் நூற்றாண்டின் மிகச் சிறந்த படைப்பு.

மறுமலர்ச்சி இயக்கம்இலக்கியத்தில், சித்திரத்தில், சிற்பத்தில் இன்ன பிற கலைகளில் புதிய வேகத்தையும் விறுவிறுப்பையும் உண்டாக்கியது, புதிதாகக் கண்டு பிடிக்கப்பட்ட அச்சு இயந்திரம் அதற்கு ஆக்கம் அளித்தது. கண்டுபிடிக்கப்பட்ட புதிய நாடுகள்—புதிய கடல்வழிப் பாதைகள் அதற்கு ஊக்கம் அளித்தன.

மறுமலர்ச்சி இயக்கத்திற்கு அடுத்துத்தோன்றிய பேரியக்கம் சீர்திருத்த இயக்கமாகும். அவ்வியக்கத்தின் பிறப்பிடம் ஜெர்மனி. அவ்வியக்கத்தின் முன்னோடி மார்டின் லூதர். மகேசன் பேரால், மதத்தின் பேரால் போப்பும் குருமார்களும் அடித்த கொள்ளையை, இழைத்த கொடுமையை எதிர்த்து எழுந்ததே சீர்திருத்த இயக்கம்,

மண்ணாசை, பெண்ணாசை, பொன்னாசை ஆகிய மூவாசைகளையும் துறந்தவர்கள் என்று கூறிக்கொண்டு வரம்பற்ற சொத்துக்களில், சுகபோகங்களில் புரண்டு கொண்டிருந்தனர் மதத் தலைவர்கள்.

(8 ம் பக்கம் பார்க்க)

இருபெரும் ....

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

யோகத்தில் திளைக்க வேண்டியவர்கள் போகத்தில் திளைத்துக்கிடந்தனர். போதனைபுரிய வேண்டியவர்கள் போதையில் மயங்கிக் கிடந்தனர். ஒழுக்கத்தின் காவலர்கள் இழுக்கத்தின் இருப்பிடங்களாய்திகழ்ந்தனர்.

இந்த வேஷதாரிகளை எதிர்த்து எழுந்ததேசீர்திருத்த இயக்கம். உண்மையைச் சொன்னால் ஒரு சிறு பொறி தான்பெருந்தீயாகவளர்ந்தது.

போப் லியோ தூய பீட்டடர்க்கு ஆலயம் எழுப்ப நிதி திரட்ட டெட்ஜில் குருவிற்கு அதிகாரம் வழங்கினார்.

டெட்ஜில்லோ நிதிதிரட்ட எளிய வழி ஒன்றைத் திறம்படக் கையாண்டார், அருள் சீட்டு விற்பனை மூலம் அளவிறந்த நிதி திரட்டிக் கொண்டிருந்தார்.

பணம் தந்து,பாப விமோசனச் சீட்டை வாங்கினால் சொர்க்கத்தில் இடம் பதிவு செய்யப்படுவதாக நம்பி மக்கள் அருள்சீட்டுகளை வாங்கிக் கொண்டிருந்தனர். டெட்ஜில்லிடம் பணம் குவிந்து கொண்டிருந்தது. டெட்ஜில் விட்டன்பர்க் நகருக்கு விற்பனைக்கு வருகிறார்; அதே நகரில் உள்ள பல்கலைக்கழகத்தில் மார்ட்டின் லூதர் சமய நெறிக் கல்விப் பேராசிரியராகப்பணியாற்றிக் கொண்டிருக்கிறார். அவர் ஆழ்ந்த பக்தி உடையவர். ஆண்டவன் பால் அன்பும் நம்பிக்கையும் கொண்டவர். ஆண்டவன் பெயரால் நடைபெறும் மோசடியைக் கண்டு கனன்று எழுகிறார். அருள் சீட்டு விற்பது அயோக்கியத் தனம் என்று வேத நூலிலிருந்தே ஆதாரம் காட்டுகிறார். தன்னுடைய மறுப்புகளை எழுதி பல்கலைக்கழகக் கதவிலே ஒட்டுகிறார். வைதிகபுரி சீறி எழுகிறது. அவரை மதப் பிரஷ்டம் செய்கிறது. லூதரோ அந்த உத்தரவைச் சந்தைச்சதுக்கத்தில் தீயிட்டுக் கொளுத்துகிறார். புனித ரோமானியச் சக்கரவர்த்தி அவரை அழைத்து வரச் சொல்லி அச்சுறுத்துகிறார். ஆனால் லூதரோ அடங்கிவிடவில்லை. அவர் கருத்துகள் வேகமாகப் பரவுகின்றன. சாம்ராஜ்யாதிபதியே சமரசத்திற்கு வரவேண்டிய நிலை உருவாகிறது. லூதரின் வெற்றிக்கு அப்போதிருந்த அரசியல் சூழ்நிலை காரணமாக அமைகிறது. சிற்றரசர்களின் பாதுகாப்பு அவருக்குக் கிடைக்கிறது. அதுமட்டும் இல்லாதிருந்தால் பரந்தாமனின் பாதுகாவலராக இருந்த போப் சுட்டெரித்திருப்பார்.

ஆங்கில நாட்டில் இந்த இயக்கம் 8 ஆம் ஹென்றி காலத்தில் பெரும் வெற்றி பெறுகிறது. இங்கிலாந்திலும் ஜெர்மனியிலும் சீர்திருத்த இயக்கம் பெரிதும் அரசியல் சார்ந்தே நடைபெறுகிறது. ஹென்றியின் சொந்தவிவகாரத்தில் அதுவும் விவாக விவகாரத்தில் போப்புடன் ஏற்பட்ட சச்சரவே அவ்வியக்கத்திற்கு வேகத்தை அளிக்கிறது.

ஹென்றியின் மனைவி காத்தரைன் 7 குழந்தைகளைப் பெறுகிறாள். 6 குழந்தைகள் இறந்து போகின்றன. எஞ்சியுள்ள ஒரு குழந்தையும் பெண் குழந்தை;பெயர் மேரி. பெண்கள் பட்டத்திற்கு வருவது அங்கு அந்தக் காலத்தில் பழக்கமில்லை. எனவே தனக்குப் பிறகு தன் நாட்டை ஆள ஆண் வாரிசு வேண்டும் என்று விரும்புகிறான். மறுமணமே வழி என்று கருதுகிறான். முதல் மனைவியை மண விலக்குச் செய்தால் தவிர மறுமணம் செய்யமுடியாது. ஆகவே ஹென்றி ரோம் நகரில் உள்ள போப்பிளமண்டிடம் முதல் மணத்தை ரத்துச் செய்ய வேண்டுகிறான். ஆனால் முதல் மனைவி காத்தரைனோ ஸ்பெயின் நாட்டுப் பேரரசனின் அத்தை. போப்போ பேரரசன் சார்லசைப்பகைத்துக் கொள்ளப்பயப்படுகிறான்; எனவே மணவிலக்களிக்க மறுக்கிறான். முடிவோ போப்பிற்கும் ஹென்றிக்கும் தீராப் பகை; அப் பகை தீயாகக் கொழுந்து விட்டெரிகிறது. முடிவு ரோம்நகரத் தொடர்பு மதத்துறையில் துண்டிக்கப்படுகிறது. மடாலயங்கள் அழிக்கப்படுகின்றன. அவற்றின் அளவிறந்த சொத்துக்கள் பறிக்கப்படுகின்றன. எதிர்க்கின்ற குருமார்கள் எமனுக்கு இரையாக்கப்படுகின்றனர்; அரசனே மதத்திற்கும் தலைவனாக்கப்படுகின்றான். அத்தனையும் நாடாளுமன்றத்தின் ஒப்புதலுடன்! ஹென்றியின் வெறிச் செயல் வெற்றி பெறுவதற்குக் காரணம் மதக் குருக்களின் ஒழுக்கக் கேடு தான். அவர்களின் ஒழுக்கக் கேட்டை சிந்தனையாளர்கள் அம்பலப்படுத்தினர். அதனை அறிந்த மக்கள் அவர்கள்பால் ஆத்திரம் கொண்டிருந்தனர். மக்கள் மதவாதிகள்மீது கொண்டிருந்த ஆத்திரம் ஹென்றிக்குச்சாதகமாகி விட்டது. இல்லை என்றால் அவனுக்கு முன்னிருந்த மன்னர் பலர் போப்புக்கு மண்டியிட்டுக் கிடந்ததைப்போல் அவனும் கிடந்திருக்க வேண்டும்

மறுமலர்ச்சி இயக்கமும் சீர்திருத்த இயக்கமும் மேலை நாடுகளில் தனித் தனி இயக்கங்களாகத் தழைத்தன. தனித் தனிக் காலக் கட்டங்களில் செழித்தன. தனித் தனி தலைமைகளில் வளர்ந்தோங்கின. ஆனால் அவ்விரு இயக்கங்களும் தமிழகத்தைப் பொறுத்தவரை ஒரே காலகட்டத்தில் ஒரே தலைமையின்கீழ் ஒன்றோடு ஒன்று இணைந்த இயக்கங்களாய்ச் சேர்ந்து வளர்ந்தன. ஆம் இந்த 20 ஆம் நூற்றாண்டில் தந்தை பெரியார். பேரறிஞர் அண்ணா இருவரும் உருவாக்கி வளர்த்த திராவிடப் பேரியக்கம் தான் தமிழகத்தில் அவ்விரு இயக்கங்களையும் வளர்த்தது.

தந்தை பெரியார் நிகழ் காலத்தில்சமுதாயத்தைச் சீரழிக்கும் சாதி மத பேதத்தைக் கண்டு கொதித்தெழுகிறார், கடந்த காலத்தில் தமிழ்ச் சமுதாயம் எப்படி இருந்தது என்று திரும்பிப் பார்க்கிறார் அண்ணா. சங்க இலக்கியக் காலத்தில் வர்ணாசிரமமுறை இல்லாதிருந்ததை எடுத்துக் காட்டுகிறார்.

மதத்தின் பெயரால் மகேசன் பேரால் மனிதன் சுரண்டப்படுவதைமக்கள்மாக்களாக்கப்படுவதைத் தடுத்து நிறுத்தத் தந்தை பெரியார் திராவிடர் இயக்கத்தைத் தோற்றுவிக்கிறார். அண்ணா அவரோடு இணைந்து அதனை வளர்க்கிறார். 'கடவுளாவது வெங்காயமாவது' என்று தந்தை பெரியார் தாக்குகிறார். மாஜி கடவுள்களை எழுதிமக்களுக்குத் தெளிவளிக்கிறார் தளபதி அண்ணா. ஆரியக் கோட்பாடுகள் தமிழரின் தனித் தன்மையை அழிப்பது அறிந்து ஆத்திரம் கொண்ட பெரியார் 'பார்ப்பானே வெளியேறு' என்று எதிர்ப்பின் முனைக்கே சென்றார். அண்ணாவோ நளினமாக 'ஆரியமாயை'யை விளக்குகிறார்.

வடமொழி தேவமொழி எனும் தெகிடுதத்தத்தை உடைத்தெறிகிறார்கள் இருவரும். அண்ணா தமிழின்

(தொடர்ச்சி 3-ம் பக்கம்)

நம் நாடு வெளியிடும் முப்பெரும் விழா மலருக்கு
என் இதய வாழ்த்துக்கள்!

உரிமையாளர் : கோ. ஆனந்தன்
கோவை மாவட்ட தி மு கழக பிரதிநிதி,
திருப்பூர்
குறிப்பு: தமிழ்நாடு முழுவதற்கும் ஸ்டாகிஸ்டுகள் மற்றும் ஏஜண்டுகள் தேவை.

நம்நாடு முப்பெரும் விழா மலருக்கு எமது நல் வாழ்த்துக்கள்!

Tel: JEKAyKAy, Phone: 679, (Bhavani)

J.K.K

J.K.K. TEXTILE PROCESSING MILLS

POST BOX No. 55

KOMARAPALAYAM- 638 183

(via) ERODE.

With pleasure we have started our new Textile processing Mills, near New Cauvery Bridge, Komarapalym. We are doing cloth bleaching. dyeing and finishing works with most modern sophisticated machineries and well trained personnel, to the entire satisfaction of the customers.

We proudly announce that We are reputed processors in international market and 90: of our capacity is engaged in Export variety.



பெரியாரும் நானும்

முத்தமிழ்க்காவலர் கி. ஆ. பெ. விசுவநாதம்

1 வியப்பு:

1931-ல் நானும், பொரியாரும் பல ஊர்களுக்குச் சென்று ஈரோடு சந்திப்பு நிலையத்திற்கு வந்தோம், நான் திருச்சி வண்டிஏறியதும், என்னை வழியனுப்பிய அவரைப்பார்த்து "நீங்கள் சுகமாக வீட்டுக்குப் போகிறீர்கள். நான் வீடு போய்ச்சேர இன்னும் பல மணி நேரமாகும்'' என்று கவலையோடு சொன்னேன். பெரியார் அதற்கு, "ஐந்து நாட்களாக ஒரு கவலை இல்லாது உங்களோடு சுற்றுப்பயணம்செய்தேன். இப்போதுவீடுபோய்ச் சேருவதுதான் எனக்கு கவலை'' என்றார். 'ஏன் அப்படி'? என்றேன். வீட்டில் இருப்பவர்கள் எல்லாம் செலவுக்குப் பணம்கேட்பார்கள். குடியரசுப் பத்திரிகை ஆபீசில் பேப்பர்காரன் பணத்திற்கு காத்திருப்பான். கம்பாசிட்டர்களும் வேலையாட்களும் பணம்,பணம் என்று என்னை அரிப்பார்கள். என்ன செய்வது?'' என்று கவலையோடு சொல்லிச் சென்றார்.

எனக்கு அப்போது வீடுபோய்ச் சேருவது மகிழ்ச்சியாகவும், வெளியில் அலைவது துன்பமாகவும் இருந்தது. ஆனால் பெரியாருக்கு வெளி அலைச்சல் இன்பமாகவும், வீடு போய்ச் சேருவது துன்பமாகவும் இருந்தது. எனக்கு வியப்பைத் தந்தது.

2. பொதுஜனம்

1935 ல் பெரியாரின் இல்லத்தில் மாடியில் கூட்டத்தில் வசூலித்த உண்டியல் காசுகளை நான் எண்ணிக்கொண்டிருந்தேன். பெரியார் ஏதோ எழுதிக்கொண்டு இருந்தார். திடீரென்று ஒருவர் ஓடிவந்து ஆச்சாரியார் உங்களைப் பார்க்க வந்திருக்கிறார் என்று பெரியாரிடம் சொன்னார். உடனே பெரியார், தன் சால்வையை எடுத்து இடுப்பில் கட்டிக் கொண்டு ஓடிப்போய் அவரை வரவேற்று மாடிக்கு அழைத்து வந்து உட்காரச் செய்து, "ஏது இவ்வளவு தூரம் வீடு தேடிவந்தீர்கள்?'' என்று கேட்க திரு. C. R. அருகில் இருந்த என்னை ஒரு மாதிரிப் பார்த்தார். குறிப்புணர்ந்த பெரியார், "இவர் நம்மவர்தான், சொல்லக்கூடியதைக்கூசாமல் சொல்லுங்கள் என்றார். அதற்கு C. R. ஒன்றுமில்லை, ஒரு ஆலோசனை கேட்டுப்போகலாம் என்று வந்தேன் என்றார். பெரியார் உடனே "என்ன! கேலிபண்ணுகிறீர்களா...? ஆலோசனையா...? அதுவும் தாங்களா...? என்னிடமா?... இது நன்றாய் இல்லையே '' என மெதுவாகச் சொன்னார். திரு. C. R., "இல்லை நாயக்கரே – பல நாள் யோசித்தேன்...சிக்கலாக இருந்தது... கடைசியாக உங்களை ஆலோசனைகேட்கலாமே என்று வந்தேன்'' என்று பிரச்சினையைச் சொன்னார். அந்தச் செய்தி அருகில் இருந்த எனக்கும் சிக்கலாகவே தோன்றியது. ஆனால் சி. ஆரின் பிரச்சினைக்கு, அவர்சொல்லிமுடிக்கு முன் பெரியாருடன் "நீங்கள் இப்படிச் செய்யலாமே'...இது உங்களுக்குத் தெரியாததா?'' என்று ஒரு எளிதான யோசனையைச் சொன்னார். அதற்கு சி. ஆர். "நானும் அப்படிச் செய்யலாம் என்றுதான்எண்ணினேன். ஆனால் பொதுஜனங்கள் நம்மைப் பற்றி தப்பாக நினைப்பார்களே என்று அச்சப்பட்டேன்'' என்றார். அதற்குப்பெரியார் சிரித்துக்கொண்டே "மற்றவர்கள் எல்லாம் 'பொதுஜனங்கள்' என்று சொன்னால் அர்த்தமிருக்கிறது. ஆனால் நீங்களும் நானும் பொதுஜனங்கள்' என்று நினைக்கலாமா? என்று திருப்பிக்கேட்டார். உடனே சி. ஆரும் "அப்பசரி'' என்றுகூறி எழுந்து போய்விட்டார்.

நாம்தான் பொதுஜனங்களையே உண்டு பண்ணுகிறவர்கள் என்ற இப்புதுக்கருத்து எனக்கு அன்றுதான் விளங்கியது.

3. துணிவு:

1932-ல் பெரியாருடன் திருநெல்வேலி மாவட்டங்களில் பொதுக்கூட்டங்களில்பேசி விட்டு, பட்டிவீரன் பட்டி W. P. A. S. சௌந்திரபாண்டியன் வீட்டுக்குச் சென்று கொண்டிருந்தோம். வழிநெடுகிலும் பெரியாருக்கு வயிற்றுவலி. W. P. A. S. வீட்டுக்குள் நுழைந்ததும் எனக்கு சைவ உணவும், பெரியாருக்கு அசைவ உணவும் காத்திருந்தன. வலிமிகுதியால் டாக்டரிடம் மருந்து வாங்கிச் சாப்பிட்ட பெரியார் அசைவ உணவை ஒரு வாரம் சாப்பிடக்கூடாதுஎன்று டாக்டர் சொன்னதைக்கேட்டிருந்தார் என்றாலும், வாளை மீன் பொறியலையும், வறுத்த கறியையும் சுவைத்து உண்ட பெரியாரை நானும் தடுக்கவில்லை. விருந்து முடிந்து W.P.A.S. காரிலேயே ரயில்நிலையம் வந்தோம் வண்டி ஏறிய பின்னர்வலியும் வந்துவிட்டது. திண்டுக்கல் முதல் மணப்பாறை நெருங்கும் வரையில் அவர் பட்டபாடுசொல்ல முடியாத துன்பத்தை எனக்குத்தந்தது. 'மணப்பாரை' வரை பொறுத்துக் கொள்ளுங்கள். மீண்டும் டாக்டரிடம் காண்பிப்போம்'' என்றேன். அவர் என்னிடம் "கொஞ்சம் பொறுங்கள்... சரியாகப் போய்விடும்'' என்று பதில் சொன்னார். எனக்கு வியப்பாக இருந்தது. வண்டி மணப்பாறை நெருங்க, நெருங்க வலிமிகுதியால் "அப்பா...அப்பா...'' என்று வாய்விட்டு அலறினார். மணப்பாறையும் வந்தது. வண்டி நின்றபின் "இறங்குங்கள்...சீக்கிரம்— டாக்டரிடம் போவோம்'' என்று வலியுறுத்தினேன். அப்போதும்கூட அவர், "கொஞ்சம் சும்மா இருங்கள்...சரியாய்ப்போய்விடும்' என்றார். வண்டியும் அதற்குள் புறப்பட்டுவிட்டது. வலியைப் பொறுக்கும் வரை பொறுத்து இருந்து முடியாமல் போகவே, வண்டி ஓடும் போதே, ஜன்னலுக்கு வெளியே தலையை நீட்டி வாயில் விரலைவிட்டு சாப்பிட்டஅனைத்தையும் வாந்தி எடுத்தார். பின்னர் வாயைக் கொப்பளித்துவிட்டு என் அருகில் உட்கார்ந்து கொண்டே "இப்பொழுது எல்லாம்சரியய்ப் போயிற்று'' என்றார். என் பயமும் ஒருவாறு தெளிந்து, "டாக்டர் சொல்லியும்கூட அசைவ உணவு ஏன் சாப்பிட்டீர்கள்? என்று சிறிது கோபத்தோடு கேட்டேன். அதற்கு பெரியார், "வைத்தியர் அதை மட்டுமா சொன்னார்? புளியும், மிளகாயும் கூட சாப்பிடவேண்டாம் என்றும் சொன்னார். இவைகளை எல்லாம் சாப்பிடாமல் நடைபிணமாக இருந்து எதற்காக உயிர்வாழவேண்டும்? சாவு வருவதானால் அது எப்போதும் வரட்டும்'' அதற்காகப் பயந்து நம் தேவையை நாம் குறைத்துக் கொள்ளக்கூடாது என்று சொன்னார்.

இத்தகைய துணிவை பெரியாரிடமன்றி வேறு எவரிடமும் நாம் எதிர்பார்க்க முடியாது.

4. முதல் சுயமரியாதைத் திருமணம்:

48 ஆண்டுகளுக்கு முன்புஇராமநாதபுரம் மாவட்டம் அருப்புக்கோட்டையைச் சேர்ந்த சுக்கிலநத்தம் கிராமத்தில் துரைசாமி ரெட்டியார் மகனுக்கு சுயமரியாதைத் திருமணம் செய்துவைக்கப்பெரியாரும், நானும், விடுதலை ஆசிரியர் J. S. கண்ணப்பரும், காரைக்குடி முருகப்பாவும், சிதம்பரம் N. தண்டபாணி பிள்ளையுமாக ஐந்து பேர் சென்றிருந்தோம். மணமேடையில் மணமகன் வந்து உட்கார்ந்ததும், மாப்பிள்ளையின் இருபுறமும் இரண்டு பெண்களை அலங்காரத்துடன் அழைத்து வந்து உட்கார வைத்தார்கள். ரெட்டியார் எங்களிடம் வந்து 'திருமணத்தை நடத்தி வையுங்கள்' என்றார். நான் பெரியாரைப் பார்த்து "இது என்ன? ஒரு மாப்பிள்ளைக்கு இரண்டு பெண்கள்'' என்று கேட்டேன். பெரியார் ரெட்டியாரைப் பார்த்து, 'ஏன் இப்படி?' என்று கேட்டார். ரெட்டியார், "ஒன்று அத்தைப்பொண்ணு, ஒன்று மாமா பொண்ணு...ஒன்றைவிட்டு ஒன்றைச் செய்தால் குடும்பத்தில் குழப்பம் வரும். அதனால் இப்படி செய்கிறேன் என்றார். எங்கள் பக்கம் திரும்பிய பெரியார், "எப்படியோ போகட்டும். ஐயர் இல்லாமல் கல்யாணம் செய்ய ரெட்டியார் சம்மதித்தாரே! அதுவேபோதும் அதுவே பாதிசுயமரியாதை'' என்று சொல்லி திருமணத்தை நடத்திவைத்தார். நாங்களும் வாழ்த்தி வந்தோம்.

இதுதான் நாங்கள் நடத்திவைத்த முதல் சுயமரியாதைத் திருமணம்.

5. ஆழமான உள்ளம்:

ஒரு தடவை நாங்கள் எல்லோரும் ஒரு மாநாட்டுக்குப்போகப் பெரியாரின் இல்லத்தில் கூடினோம். பெரியார் தாடி வைத்திருப்பதுபற்றிய சர்ச்சைகிளம்பியது. பெரியார்புதிதாகத்தாடிவைத்திருப்பதுஏன்? ஒன்றுஒருவர் கேட்க, மாயவரம் நடராசன், "தாடி வைத்திருப்பது முகத்துக்கு அழகு தருகிறது என்றும், அதனால் நான் தாடி வளர்க்கிறேன்'', என்றும் பெரியார் தன்னிடம் சொன்னதாகச் சொன்னார். உடனே எஸ். வி. லிங்கம்இல்லை... இல்லை...ரஷ்யா சென்று வந்ததும், ரஷிய அறிஞர்கள் அனைவரும் தாடி வைத்திருப்பதைப் பார்த்துத்தானும் அவ்வாறு தாடிவைத்திருப்பதாகப் பெரியார் தன்னிடம் சொன்னதாகச் சொன்னார். உடனே மூவலூர் இராமாமிர்தத்தம்மாள் சொன்னார்கள்: "இல்லை, இல்லை'' நாள் தோறும் நாலணா சவரக்கூலி மிச்சம் என்றுதான், தான் தாடி வளர்ப்பதாக என்னிடம் சொன்னார் என்றார். இதைக்கேட்ட பட்டுக்கோட்டை அழகிரிசாமி "அதெல்லாம் ஒன்றுமில்லை...பெரியாரிடம் இது பற்றி நான் கேட்டுவிட்டேன். கொஞ்சநேரம் என்றாலும் இன்னொருவரிடம் போய்த் தலையைக் குனிந்து கொண்டு உட்கார்ந்திருப்பது தனக்கு மானக்கேடாக இருக்கிறது என்பதால் தாடிவளர்க்க ஆரம்பித்ததாக என்னிடம் சொன்னார் என்றார். இத்தனையும் கேட்ட பூவாளூர் பொன்னம்பலனார், "அப்படியா சேதி!... நான் அவரிடம் ஏன் தாடி வளர்க்கிறீர்கள்? என்றுகேட்டதற்கு, "மேடையில்ஏறிபலரைத் தாக்கித் திட்டிப்பேசினால், போனால்போகிறான் கிழவன்...வயதானவன்...எதையாவது சொல்லிவிட்டுப்போகிறான்'' என்று விட்டு விடுவார்கள், என்பதற்காகவே தாடி வளர்க்கிறேன் நான் என்றல்லவா என்னிடம்சொன்னாரென்றார். எல்லாவற்றையும் பொறுமையோடு கேட்ட எனக்கும் எது உண்மை என்று அறிய ஆவல் ஏற்பட்டுவிட்டது. "எல்லோரும் படுங்கள். நாளை நான் எது உண்மை என்று உங்களுக்குச் சொல்கிறேன் என்று சொல்லித் தூங்கவைத்தேன். மறுநாள் மாநாட்டுக்குப்போகும்வழியில் அவரிடம் சரியான காரணத்தைக் கேட்டேன். சிரித்தார். பின் என்னிடம் "நாள்தோறும் முகத்தை சவரம் செய்ய பத்து நிமிடங்கள் வீதம் மாதம் முந்நூறு நிமிடங்கள் செலவாகிறது. இந்த நேரத்தை நல்ல காரியங்களைச் செய்ய செலவிடலாமே என்று நினைத்து விட்டுவிட்டேன் தாடிதானாகவேமுளைத்துவிட்டது. வேறொன்றுமில்லை என்று மீண்டும் சிரித்துக்கொண்டே கூறினார், பின்னர் எல்லோரிடத்தும் நான் இதுதான் உண்மை என்று கூறினேன். அதற்கு அருகில் இருந்த காருகுடி சின்னையாபிள்ளை "இன்னும் யாராரிடத்தில் என்னென்ன சொல்லியிருக்கிறாரோ? அவைகளையெல்லாம் கேட்டுத்தெரிந்துகொண்டுதான் ஒருமுடிவுக்கு வரவேண்டும்என்றுசொல்லிசிரிப்புமூட்டினார்! உடனே மாயவரம் லிங்கம் "சும்மாயிருங்கள். இன்னும் எத்தனை பேரைக் கேட்டாலும் பெரியாரின் உள்ளத்தில்உள்ளதைஎவராலும் அறிய முடியாது. அவரது உள்ளம் அவ்வளவு ஆழமானது என்று கூறினார்.

ஆம்! அவரது உள்ளம் ஆழமானது மட்டுமல்ல...அரிய உள்ளமும் பெரிய உள்ளமும் ஆகும். இதிலிருந்து அவர் தன்னைப் பற்றியும் தன் செயலைப் பற்றியும் எவரிடமும் எதுவும் கூறவிரும்பாத பெருமனம் படைத்தவர் என்று நமக்கு நன்கு தெரிகிறது.

வாழட்டும் பெரியாரின் புகழ்!

மறக்கக்கூடாதது

இளமுருகு பொற்செல்வி



இன்று தமிழகத்தில் 'நூற்றுண்டு விழா' இருமுனைகளில் நடைபெறுகிறது. ஒன்று தந்தை பெரியார் நூற்றுண்டு விழா; மற்றொன்று வடதுருவம். இரண்டுதுருவங்களுக்கும் ஒரே நேரத்தில் நூற்றுண்டு விழாக்கள்!

தென்துருவமான தந்தை பெரியார் நூறு ஆண்டுகளுக்கு முன் தோன்றியிராவிட்டால்...! அவ்வாறு நினைக்கவே நெஞ்சம் நடுங்குகிறது. ஆம்! தமிழர்கள் மேலணியின்றி காலணியின்றி காட்டுமிராண்டிகளைப்போல நடமாடிக் கொண்டிருந்திருப்பார்கள். அப்படித்தான் அனுமதிக்கப்படுவார்கள். கல்வி, நீரோடை சலசலவென ஓடி சகலர்க்குமல்லவா இன்று பயன் பட்டுக் கொண்டிருக்கிறது! கல்வி அவ்வாறின்றி ஓதுவதைப் பார்த்தால் கண்களை அழுத்தும்; கேட்டால் கேட்கும் காதுகளை அறுத்தும் தமிழர்களைத் தண்டித்துக் கொண்டிருக்கும் காரியங்கள் கொடிகட்டிப் பறந்துகொண்டிருந்திருக்கும்

பொய்யான அல்லது மிகைப்படுத்தப்பட்டகற்பனையல்ல இது!

எவ்வளவு பெரிய துணிவு மிக்க புரட்சியைத் தந்தை பெரியார் தொடர்ந்து நாற்பதாண்டுகளுக்கும் மேல் இந்தச் சமுதாயத்திற்காகச் செய்திருக்கிறுர்? தம்மையே அர்ப்பணம் செய்த அரும்பெருந்தியாகம்; நினைத்துப் பார்க்கவே முடியாத பெருமையுடையதாகும்.

எந்தச் சமுதாயத்தின் உரிமைக்காகப் பாடுபட்டாரோ அந்தச் சமுதாயமே அல்லவா தந்தை பெரியாரை எதிர்த்தது! எதிர்த்தது மட்டுமா? தாக்குதலிலும் அல்லவா ஈடுபட்டது!

ஆம்! எதைச் செய்கிறோம்? எதற்காகச் செய்கிறோம்? எவருக்குச் செய்கிறோம் என்று எண்ணிப் பார்க்காமல்தான் பயனைப் பெறுகிறவர்களே—பயனைப் பெற்றுத் தருவதற்காகத் தமது நல்வாழ்வை—உயிரை பணயம் வைத்துத் தொண்டாற்றும் தந்தை பெரியாரைத் தாக்கியும், தரக்குறைவான சொற்களால் பழித்தும் பேசிய சமுதாயம் வாழ்வதற்காக உழைத்தவர் உயரிய தலைவர் — தந்தை பெரியார் அவர்கள். அவருடைய நூற்றுண்டு விழா! தமிழர்க்கு உயர்வான காலம்!

இந்த நூற்றுண்டு விழாக் காலத்தில் நாம் வாழ்கிறோம். தந்தை பெரியாருடன்தொண்டாற்றும் வாய்ப்பைப் பெற்று வாழ்கிறோம். இந்த நினைவுகள் தருகின்ற மகிழ்ச்சியும் பூரிப்பும் எழுத்திலடங்காதவையாகும்.

கண்களிருந்தும் காணத் தெரியாதவர்களை, வாயிருந்தும் பேசத் தயங்கியவர்களை, காணவும் பேசவும் வைப்பது எவ்வளவு பெரிய சிரமமானது என்பது கூறித்தான் தெரியவேண்டும் என்பதில்லை. தூங்குபவனை எழுப்ப முடியும்; தூங்குவதுபோல் பாவனை செய்பவனை எழுப்பிட முடியாது'' என்பது பழமொழி! அதே நிலைதானே சமுதாயத்தில் அன்று நிலவிய ஆதிக்கத்தால் ஏற்பட்டுவிட்ட தாழ்வு நிலை!

தன்னைத்தானே தாழ்வு படுத்திக் கொண்டவர்களை அந்தத் தாழ்வு மாயையிலிருந்து விடுவிப்பது என்பது எளிய செயலா என்ன?

"நான் தாழ்ந்த சாதிக்காரனுங்க'' என்று ஒப்புதல் வாக்கு மூலம் கொடுத்துக் கொண்டிருந்தவர்களை —அந்த வாக்குமூலத்திலிருந்து மட்டுமல்ல; - அந்தத் தாழ்வு நிலையிலிருந்தும் மாற்றி உயர்த்திய தந்தை பெரியார் அவர்களின் பெருந்தொண்டு சாதாரணமானதா?

ஒருகாலத்தில் டாக்டர்களா; வழக்கறிஞர்களா? நீதிபதிகளா? ஆசிரியர்களா? இப்படி சமுதாயத்தின் உச்சாணிக்குரியவர்களாக ஒரு குறிப்பிட்ட வட்டத்துக்குரியவர்களே இருந்து வந்ததும் மறக்க முடியாதது.

தந்தை பெரியாரின் பெருந்



தொண்டினுல்தான் இன்று அந்தப் பதவிகளில் நம்மவர்கள் தாழ்த்தப்பட்டவர்கள்; எதற்கும் உரிமையில்லாதவர்கள் என்று சமுதாயமே புறக்கணித்திருப்பது போல். உயர்ந்தவர்களால் வரையறுக்கப்பட்ட கொடுமைகள் தகர்த்தெறியப்பட்டது.

திருவள்ளுவருடைய
'பிறப்பொக்கும் எல்லா
உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில்
வேற்றுமையால்''

என்ற திருக்குறள் உயிர் பெற்றிருப்பது பெரியாரால்.

அத்தகைய மனிதஉரிமைக் காவலர் தந்தை பெரியார் அவர்களின் நூற்றுண்டுக் காலம் இது!

அறிஞர் பெருந்தகை அண்ணு அவர்களின் பிறந்த நாள்!

தந்தை பெரியார் சூறுவளிக் காற்று. அறிஞர் அண்ணுவோ வீசுந்தென்றல்! பயன் தருவதில் சூறுவளியையும் மிஞ்சியவர்.

தந்தை பெரியார் தொடங்கிய பணியைச் செவ்வையாகச் செய்து வெற்றிகளைக் குவித்தவர் அறிஞர் அண்ணு!

கசப்பு மருந்தை தாய்மார் தேனில்குழைத்து இனிப்பைக் கூட்டி நோயுற்ற குழந்தைகளுக்கு ஊட்டுவதுபோல் தந்து வெற்றிக்கனியைக் கொய்தவர் அறிஞர் அண்ணு அவர்கள். தந்தை பெரியாரவர்களுக்கு அறிஞர் அண்ணு கிடைக்கவில்லையென்றுல் எடுத்த கொள்கை; கொண்ட முயற்சி முற்றுப் பெற்றிருக்காது என்று கூறிஞலும் பொருந்தும்.

அறிஞர் அண்ணு அவர்கள் எவரையும் கடுமையாக விமர்சனம் செய்ய மாட்டார்கள். ஆனுல் அதற்காகக் கொண்ட கொள்கையிலிருந்து கடுகளவும் விலக மாட்டார்கள், தாக்குபவர்களையும் தாங்கிப் பேசுவாரேதவிர தனி மனிதனைப் பற்றிய விமர்சனமே அண்ணு செய்தது கிடையாது.

அண்ணுமலைப் பல்கலைக் கழகத்திலே அறிஞர் அண்ணு அவர்களுடைய பேருரை நிகழ்ச்சியை மாணவர்கள் பெரிதும் விரும்பினுர்கள். நிர்வாகமோ தயங்கியது. பல்கலைக்கழகத்திலே பேராசிரியராக இருந்த பல்கலைப் புலவர் தாகூர் சட்டப் பேராகிரியர் கா. சுப்பிரமணியம் அவர்கள் தாம் தலைமை தாங்குவதாகவும்.—கொடுத்த கருத்தின் வட்டத்தை விட்டு பேச்சு மாறினுல் தாம் தடுத்து நிறுத்துவதாகவும் உறுதி கொடுத்ததன்பின் அறிஞர் அண்ணுவின் பேருரைக்கு நாள் குறிக்கப்பட்டது. பேச்சைத் தொடங்கும் அந்த விஞடிவரை எதைப் பற்றிப் பேசவேண்டும் என்பதைத் தெரிவிக்கவில்லை.

பேசத் தொடங்கும்போது "ஆறு'' என்ற தலைப்பைத் தெரிவித்தார்கள்.

அறிஞர் அண்ணு அவர்கள் புன்னகையுடன் தலைப்பை ஏற்றுப் பேசலானுர்கள். நைல் நதி—தேம்ஸ் நதி போன்ற எல்லா ஆறுகளும் வந்தன பேச்சில். ஆம்! கங்கை நதியும் வந்தது. தமது கொள்கையை ஆற்றின் கரையில் நடைபெறுகின்ற நிகழ்ச்சிகளாக உருவமாக்கி நீண்டதோர் உரையாற்றினுர்கள். அன்றைய பல்கலைக்கழக ஆதிக்கக்காரர்கள் — பேச்சில் குறுக்கிட முடியவில்லை. காரம் 'ஆறு' ஆற்றின் பகுதியில் உள்ள நிலை. இது தானே பேச்சு.

ஏறத்தாழ முப்பது முப்பத்தைந்து ஆண்டுகளுக்கு முந்திய நிகழ்ச்சி இது. அண்ணு அவர்கள் எந்தக் கோணத்திலிருந்தும் தாம்



ஏற்றுக்கொண்ட இலட்சியத்துக்கான பாதையிலிருந்து விலகாது எவரும் ஏற்றுக் கொள்ளத்தக்க நிலையிலே செயலாக்கிய பெருமை அருமை அண்ணு அவர்களுடையதாகும்.

சிலர் "ஆகா ஓகோ'' என்று செய்யும் ஆர்ப்பாட்டமும் அண்ணுவிடம் இருக்காது. 'போச்சே இதை ஒப்புக் கொண்டால்' என்ற போலித்தனமும் இருக்காது.

எதிரி எந்த வியூகம் வகுக்கிறுரே அதே வியூகம் அண்ணுவால் உருவாக்கப்பட்டு— வெற்றிக்கனி, கொய்யப்பட்டு விடும்!

இதற்கான விளக்கத்தை அண்ணு அவர்களின் வாய்மொழியாகவே விளக்குவதென்றுல் "இபுராகிம்'' என்று பெயர்; இருந்தால் போதும் தலையில் தொப்பியுண்டா என்று ஆராயவேண்டாம் — நிச்சயம் அவர் இஸ்லாமிய மார்க்கத்தவர்தான். 'தேவசகாயம்' என்று அழைக்கப்படுவரிடம் சிலுவையைத் தேடவேண்டாம்; ஏசுநாதர்கொள்கையை ஏற்றுக் கொண்டவர்தான். அதைப்போல் தி. மு. கழகம் என்றுல் தென்னுட்டு மக்களின் நல்வாழ்வுக்காக எதையும் தியாகம் செய்யும் குழு என்பதாகும். இது அறிஞர் அண்ணு அவர்களது செயல் முறை!

"பாராமை; தீண்டாமை நினையாமை, கூடாமை''

(தொடர்ச்சி 23 ம் பக்கம்)

★★★★★★★★★★★★★★★★★★★★★★

ஒரு முறை தோன்ற வேண்டும்

உனையபாரம் பாண்டுரங்கன்

அடக்கமுடன் நின்றுதிந அறிவினை நல்கிடும்
அன்பர்கள் உறவு வேண்டும்;
அகத்தில் பகமைகொண் டுன்றனின் நாமத்தை
அணிந்துளோர் அகல வேண்டும்;
கடுகியே நின்கடமை முடிக்கவேண்டும் நிலையிலா
கயவர்கள் ஒழிய வேண்டும்;
கண்ணியம் காத்தொழுகி கட்டுப் பாட்டோடுலவும்
கழகமதை வளர்க்க வேண்டும்;
மாற்றுர் ஆட்சிதனை மாய்க்கவேண்டும், அவர்கள்
மாய்மாலம் மறைய வேண்டும்.
மதிவேண்டும் நின்கருணநிதி வேண்டும்; அவர்நீடு
வாழ்ந்திட அருள வேண்டும்.
அறிவுமிகு சென்னைகடற் கோட்டுள் ளுறைகின்ற
அன்போங்தும் அறிஞர் வேந்தே!
எம்முயிர் இதயமணி இயக்கத்திற் கலைஞரணி
எழுப்பிய மனித மணியே!
உம்மையே வணங்கிடும் எங்களை வாழ்த்தவே
ஒருமுறை தோன்ற வேண்டும்!

★★★★★★★★★★★★★★★★★★★★★★

கழகத்தைக் காப்போம்

நெ. ஆ. பூபதி

இனமானம் உனக்கில்லை என்று சொன்னுல்
இருந்தென்ன இறந்தென்ன தோழா இன்று
இனமானம் அழிக்கின்ற வேலை தன்னில்
என்தமிழா உனக்குந்தான் பங்கா? அன்று
இனமானம காப்பதற்கே பெரியார் அண்ணு
எடுத்துரைத்த கருத்துக்கள் மறந்தா போனுய்?
இனமானம் காத்திடவே இருப்போர் தம்மில்
இனத்தலைவர் கலைஞரின்றி யாரே உள்ளார்?
தன்மானம் தமிழ்மானம் காக்க வேண்டி
தலைநிமிர்ந்து பாட்டிசைத்தான் புரட்சி வேந்தன்!
தன்மானம் அடமானம் வைத்து விட்டுச்
சன்மானம் பெறுவோனும் கவிஞன் தானு?
தன்மானம் தமிழ்மானம தமிழர் மானம
தரைமட்டம் ஆனுலும் கவலை யின்றி
தன்வாழ்வு நிமிர்ந்தாலே போது மென்று
தாள்பணிந்து வாழ்கின்றுர் வெட்கம் உண்டா?
இனம்காக்க இனமுரசு கொட்ட வேண்டும்
இனப்பகைவர் வீழ்ந்திடவே எழுஎன் தோழா!
பணம்காட்டி பதவிகாட்டி ஆளைச் சேர்க்கும்
பச்சோந்திக் கூட்டத்தை வேர றுப்போம்!
பனங்காட்டு நரியோடும் சலசலப்பால்
பயந்தோடும் கோழைகள் நம்மில் இல்லை!
இனத்தலைவர் நம்கலைஞர் தலைமை யேற்று
இன்னுயிராம் கழகத்தைக் காப்போம் நாமே!

இந்தியாவுக்குத் தேவை— பெரியாரிசமா? மார்க்சிசமா?

பழனி சித்தார்த்தன்

எங்கெங்கு வறுமை, வேலையின்மை, பொருளாதார ஏற்றத்தாழ்வு பரவியுள்ளதோ அங்கெல்லாம் சோசலிசம் கொடி நாட்டி வந்திருக்கிறது.

—இந்தியாவைத் தவிர.

பிரெஞ்சுப் புரட்சி, சோவியத் புரட்சி, சீனப் புரட்சி வெடிக்க எந்த அளவுக்கு மக்களின் வாழ்க்கைத்தரம் மோசமாக இருந்ததோ அதைவிட மோசமான வாழ்க்கைத்தரம் இருந்தும் புரட்சி பற்றிய எண்ணம் கூட இந்தியருக்கு இல்லையே; ஏன்?

இதற்கான மூலகாரணத்தைக் கண்டவர் — பெரியார்.

இந்தியாவைப் பொறுத்தவரை செய்யவேண்டிய முதல் புரட்சி—சமுதாய மாற்றமே என்று முழங்கிய பெரியார் ஒரு சமூக சீர்திருத்தவாதி மட்டுமல்ல - ஒரு முழுமையான சோசலிஸ்ட்டும்ஆவார்.

ஜாரின் வீழ்ச்சிக்குப்பிறகு-பொதுவுடைமைப் பூங்காவான சோவியத்திற்குச் சென்றுவந்த முதல் தமிழரான பெரியார் கம்யூனிஸ்ட் பிரச்சாரம்செய்ததற்காக பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தால் தண்டிக்கப்பட்டவரும் கூட!

என்ற போதும் —

'இந்தியக் கம்யூனிஸ்டுகளோடு அவர் உடன்பாடு கொள்ள இயலாமற் போய் விட்டது.

காரணம் —

இங்குதான் ஒரு நாவல் ஆசிரியையின் கூற்றை நினைவுகூறவேண்டும்:

"இந்தியக் கம்யூனிஸ்டுகள் மார்க்சிசத்தைக் குழிதோண்டிப் புதைத்து விட்டார்கள்'' — குர் அதுல்ஐன் ஹைதர் எழுதிய 'அக்னி நதி' என்ற நாவலிலிருந்து —

மார்க்சிசம் இந்தியாவில் இன்னும் வெற்றி அடையாமல் இருப்பதற்குக் காரணங்கள் பலப்பல. இந்தியக் கம்யூனிஸ்டுகளின் 'இரட்டைச்—சிந்தனை' அக்காரணங்களில் ஒன்றாகும். மார்க்சிசத்தை அந்தந்த நாட்டு மண்ணின் மாண்புக்கேற்ப மாற்றியமைக்காது ஒரு நாளும் அது ஈடேறப் போவதில்லை. இவ்வுண்மையைத் தெரிந்து கொள்ளாமல் அல்லது தெரிந்து கொள்ள விரும்பாமல் — துவக்கத்திலிருந்தே பெருந்தவற்றைசெய்து வருகின்றனர் இந்தியக் கம்யூனிஸ்டுகள்.

சோவியத்திலும்,சீனாவிலும் வேண்டுமானால் பொருளாதார மாற்றம் சோசலிச அமைப்பை ஏற்படுத்துவதில் வெற்றி கண்டிருக்கலாம் ஆனால் இந்தியாவைப் பொறுத்தவரைசமுதாய மாற்றம் இல்லாமல் முழுமையான சோசலிசம் அல்லதுகம்யூனிஸ்டுகளின் வார்த்தைகளில் சொல்வதானால் 'விஞ்ஞான பூர்வமான' சோசலிசத்தை ஒரு நாளும் உருவாக்க இயலாது.

'பொருளாதார மாற்றம், சமுதாய மாற்றத்தைத் தானாகவே எற்படுத்திவிடும்' என்ற கம்யூனிஸ்டுகளின்கிளிப்பிள்ளை வாதத்தை பெரியார் அடியோடு நிராகரித்தார்.

சாதிப்பிரிவுகள் என்ற நெடுஞ்சுவர்களை எழுப்பிக் கொண்டு கடந்துபோன நூற்றாண்டுகளின் அழுகல் காற்றையே சுவாசித்துவரும் மக்களை மதங்களின் பிடியிலிருந்து மீட்காதவரை சோசலிச சமுதாயம் என்பது கைகூடாக் கனவென்று உணர்ந்த பெரியார்—

மக்களின் பகுத்தறிவை மாய்த்து அவர்களை அறியாமை எனும் அதலபாதாளத்தில் உழலவிடும் சகலவிதமான மதநம்பிக்கைகள் மூடக்கொள்கைகள், பத்தாம்பசலித்தனமான போக்குகள்—ஆகியவைகளை எதிர்க்க வரிந்துகட்டிக்கொண்டு கிளம்பினார்.

பெரியாரின் பேச்சுக்களும் எழுத்துக்களும், காலம் காலமாகக் கட்டிக்காக்கப்பட்டுக் கெட்டித்துப் போயிருந்த பழமைச் சுவர்களை உரத்து எழும் சூறாவளியென ஓங்கி ஓங்கித் தாக்கின; நுரையிட்டு வரும்



புதுவெள்ளம்பழங்குப்பைகளையும் ஒட்டை உடைசல்களையும் அழுகல்களையும் அடித்துக் கொண்டு போவதுபோல-அவரதுபிரச்சாரங்கள்அமைந்தன

[...]யக் கம்யூனிஸ்டுகள் [...]ரின் கருத்துக்களோடு உட[...]பாடு கொள்ளாவிட்டாலும், வாய்ப்புக்கிட்டிய போதெல்லாம் முரண்பட்டு மோதத் தயங்கவில்லை.

'சகல கருத்துக்களும் ஈவிரக்கமில்லாது விமர்சனம் செய்யப்பட வேண்டியவைகளே' என்ற மார்க்சின் கணிப்பை மறந்த இந்தியக் கம்யூனிஸ்டுகள் 'கம்யூனிசம் மட்டும் விவாதத்திற்கும்மாற்றத்திற்கும்அப்பாற்பட்டதென்றும் அதுவே உலகை வெல்லும் இறுதியான சித்தாந்தம்' என்றும் மதப் பிரச்சாரகர்களின் பாணியில் ஓயாது 'ஜெபித்து' — கம்யூனிசத்தைப் புதிய மதமாகவும், மார்க்சைப் புதிய கடவுளாகவும் மாற்றத் தலைப்படுகின்றனர்

எனவே

'இந்தியாவிலிருக்கும் சகல ஏற்றத்தாழ்வுகளுக்கும் மண்டிக் கிடக்கும் தீமைகளுக்கும் மதங்களே அடிப்படைக் காரணம்...' என்று ஆய்ந்து கூறிய பெரியாரை அவர்கள் விமர்சனம் செய்ய ஆரம்பித்தார்கள்

ஏனென்றால்—

'சமுதாய எற்றத்தாழ்வுகளுக்கும் சகலதீமைகளுக்கும் அடிப்படைக்காரணம் பொருளாதார வேறுபாடே' என்று கூறிய மார்க்சிய சித்தாந்தத்தைப் பெரியார் மறுக்கிறார் அல்லவா?

ஆனாலும் —

உண்மை என்னவென்றால், மார்க்சைப் பெரியார் மறுக்கவில்லை; இந்தியாவைப் பொறுத்தவரை மார்க்சின் கண்ணோட்டத்திலிருந்து மாறுபட்டு ஒரு புதிய கண்ணோட்டம் செலுத்தினர் பெரியார்.

யதார்த்தவியல் பேசும் இந்தியக்கம்யூனிஸ்டுகள்,பெரியார் கண்டுணர்ந்து சொன்ன இந்த யதார்த்தத்தை மட்டும் கண்மூடி எதிர்த்தார்கள்.

அது மட்டுமல்ல —

வர்க்க இலக்கியம் படைக்காத எழுத்தாளர்களை எல்லாம் பிற்போக்குவாதிகள் என முத்திரையிட்டுவிளிக்கும் இந்தியக் கம்யூனிஸ்டுகள் —

திராவிடர் கழகத்து எழுத்தாளர்களும், திராவிட முன்னேற்றக் கழகத்து எழுத்தாளர்களும் சாதிக் கொடுமைகளைச் சாடிக் கதைகள்எழுதிய போதெல்லாம் அவைகளை 'நச்சு இலக்கியங்கள்' என்று கூசாது கூறினர்.

மாக்ஸிம் கார்க்கியின் இலக்கியங்களையோ, அவரைப் பின்பற்றி எழுதும்எழுத்தாளர்களின் கதைகளையோ 'பிரச்சார இலக்கியங்கள்' என்று முதலாளித்துவப் பத்திரிகைகளும், அவர்களுடைய 'ஏஜெண்டு'களும் விமர்சனம் செய்தால் ஆத்திரம் வருகிறது கம்யூனிஸ்டுகளுக்கு.

ஆனால் இதே கம்யூனிஸ்டுகள்தான் —

அறிஞர் அண்ணா, கலைஞர் —அவர்தம் இலக்கியவழிநடப்பவர்கள் படைக்கும் இலக்கியங்கள் மீது புழுதி வாரித் தூற்றுகின்றனர்.

இந்தியாவில் இருக்கும் மாஸ்கோ விசுவாசிகளாகட்டும்—அல்லது சீன தாசர்களாகட்டும் மத எதிர்ப்பைப் பொறுத்தவரை சற்று—சற்று என்ன, வெகு தூரத்திலேயே நிற்கின்றனர்;

(ஒரு முறை, கம்யூனிஸ்டுகளிடையே தீவிரப் போக்குடையவர் எனக் கருதப்படும் ஈ. எம். எஸ். நம்பூதிரிபார்ட்டிடம் பத்திரிகையாளர் ஒருவர் கேட்டார்:

"கடவுள் உண்டா? இல்லையா?'' என்று.

(22ம் பக்கம் பார்க்க)

"நம்நாடு மலருக்கு எங்கள் நல்வாழ்த்துக்கள்!"

கே.எஸ். சுப்பையா விலாஸ் பீடி கம்பெனி,

24-ஏ,வடக்கூர், தூத்துக்குடி, நெல்லை மாவட்டம்.

அண்ணாவால் மணம் பெற்ற கலைச்சோலை!

குடியேற்றம் சுப்பிரமணியம்

"கடும் பயணத்திடையே சிறிது இளைப்பாறும் சோலை தான் கலை உலகம்''

'' அண்ணாவும், கலைஞரும் கலைப்பூங்காவில் நுழைந்து விட்டனர். இனி கழகத்தை எங்கே வழிநடத்திச் செல்லப் போகிறார்கள்?'' என்று புழுதிவாரித் தூற்றியவர்களுக்கு அண்ணா கூறிய விளக்கந்தான் முதலில் கூறியது.

அண்ணாவும் கலைஞரும் திரைப்படத்துறையில் கதை வசனம்எழுதப்புகுந்ததுபணம் சம்பாதிப்பதற்காவா? அல்ல... அல்ல... தாங்கள் கொண்டிருந்த இலட்சியங்களை, கழகக் கொள்கைகளை திரைப்பட வாயிலாகப் புகுத்தத்தான் நுழைந்தனர்.

திரைப்படத் துறையையே ஒரு மாற்றத்திற்குள்ளாக்கியது போல் கலை உலகில் மறுமலர்ச்சியினை ஏற்படுத்தி மக்களின் பாராட்டுதலைப் பெற்றனர்.

வாதங்கள் அறிவு விளக்கங்கள் தமிழ்ப் பண்புகெடாத வகையில் காதல் காட்சி அமைப்புகள் இப்படி சுயமரியாதைக் கொள்கைகளை மெல்லப் புகுத்தி வெற்றியும் கண்டார்கள்.

" கதை வசனம் அறிஞர் அண்ணா''

"கதை வசனம் கலைஞர் கருணாநிதி''

என்று திரையில் தென்பட்டாலே போதும்; உற்சாகப் பெருக்குடன் மக்கள் கைகளைத் தட்ட ஆரம்பித்து விடுவார்கள், எதற்காகத் தெரியுமா?

அழகுத்தமிழ் மணம் கமழ மேடையிலே தேனாய் – தென்றலாய் – புயலாய் ஆணித்தரமான வாதங்களால் மக்கள் மனதிலிருந்த மருட்சியை அறியாமையைப் போக்கும் விதமாய் சிந்தனையைத்தூண்டிவிடும் சுவை மிகு பேச்சைச்சிந்திடும் சொல் வல்லவர்கள். திரைப்படத்தில் தங்கள் கை வண்ணங்களை செந்தமிழ்ச் சுவையாய் வண்ணந் தீட்டியிருந்ததை வரவேற்பது போல் தங்களை உள்ள உவகையை மன எழுச்சியை – எண்ண உருக்களை வெளிக்காட்டுவதுபோல் கரவொலி எழுப்பினார்கள்.

ஆனால் இப்போதோ ரிகார்ட் டான்ஸ் முகத்தைக் கண்டால் கூட கைதட்ட ஆரம்பித்துவிடுவார்கள் விசில் ரசிகர்கள்

அண்ணாவும், கலைஞரும், ஆசைத்தம்பியும் தென்னரசுவும் எழுதிய கதைவசனங்களில் தவறாது நமது கழக முத்திரையைப் பதிய வைத்திருந்தார்கள்.

"பச்சைக்கிளி இச்சைகனி-மொச்சைக் கொடியாளோ'' என்று கதாநாயகி மீது விழுந்து புரண்டு டூயட் பாடி திரை உலகை அசிங்கப் படுத்தி விட வில்லை.

'சட்டம் ஓர் இருட்டறை அதில் வக்கீலின் வாதம் ஒரு விளக்கு; அந்தப் பிரகாசமான விளக்கை ஏழையால் பெற முடியாது''

'வேஷமணியாத வேதாந்தி

சேடியில்லாத ராஜகுமாரி!

சேடியில்லாத மாடப் புறா

மோசடி செய்யாத மாது இருந்ததே இல்லையாம்'

'பல நூறு சான்றுகளை ஓரிரு வரிகளில் காட்டிடும்' ஆற்றல் படைத்தவராக அண்ணா இருந்தார் என்பதற்குச் சிறு சான்றே அவர் கதை வசனங்கள்

'காஷாயம் அணிவதே கால்பலம் கஞ்சாவிற்குத் தானே?' நையாண்டி செய்கிறார் போலி வேடதாரிகளை; பகலிலே சுந்தர கோஷாக ஹரிஹரதாசின் சீடனாக.

இரவிலே போலி சன்னியாசியின் மடியிலே காதல் மொழி பேசிக் கொஞ்சும் குமரிதான் சுந்தர கோபுவாக நிற்பவர்' என்று ஆணுடையில் நிற்கும் ஆரணங்கின் வேடத்தைக் கலைத்துக்காட்டி அறியாமை இருளில் மூழ்கிக் கிடக்கும் சமுதாயத்தைக் கண்திறக்கச்செய்தார் வேலைக்காரி என்னும் திரைப்படத்தின் வாயிலாக.

கூட்டுப்பண்ணையின் அவசியத்தை வலியுறுத்தும் பொது உடைமை பிரச்சாரமாக நல்ல தம்பியைத் தீட்டியிருந்தார். சொர்க்கம் நரகமெல்லாம் பொய்யே என்பதை சொர்க்க வாசலில் உணர்த்தினார்.

ஜாதி மதக் கொடுமைகளைச் சாடி சமூகத்தில் ஏற்றத் தாழ்வினை அகற்றிட வேண்டுமென்ற கருத்தினைப் புகுத்தி 'ஓர் இரவு' நாடகம் படைத்தார். பின்னர் அதைத் திரைப்படமாகவும் ஆக்கினர் ஏ.வி. எம் பட நிறுவனத்தார் ஓர் இரவும், வேலைக்காரியும், காதல் ஜோதியும், அண்ணா எழுதித் தந்து நடிப்பிசைப் புலவர் நடித்த நாடகங்கள் அவைநாட்டு மக்களிடையே ஓர் புரட்சியைத் தோற்றுவித்தன.

அண்ணாவிற்கடுத்தபடியாக கலைஞர் அவர்கள் கலை உலகில் கழக முத்திரையைத் தவறாது பதிய வைத்தார், தான் கதை வசனம் எழுதிய படங்களுக்கு தனக்கென்று ஒரு பாணி வகுத்து அனல் பறக்கும் வசனங்களை பாத்திர வாயிலாக உணர்த்தி கழகக் கொள்கைகளை — கருத்துக்களை நாட்டிலே பரப்பினார் கலைஞர்.

கொடுங்கோல் மன்னன் வாழும் நாட்டிலிருப்பதை விட கடும்புலி வாழும் காட்டில் இருக்கலாம்.

கூட்டத்தில் ஒருவர் 'அண்ணா சொன்னதுதான் சரி''

இப்படி ஒரு திரைப்படத்தில் வசனம் அமைத்திருக்கிறார் கலைஞர்.

'வாண்ணா வர்ரேன்... போண்ணா போறேன் எனக்கு ஒண்ணும் பதவி கிடையாதா?''

" நீதான் போக்குவரத்து மந்திரி!''

இது இந்தக் காலத்துக்கும் பொருந்துகிறதல்லவா?

'கீரையோ கீரையென்று விலைகூறி விற்பதைப்போல பிள்ளையோ பிள்ளை என்று தான் பெற்ற செல்வங்களைத் தெருவில் விலைகூறி விற்கிறார்கள்''

'பசியால் துடித்தோம் துவண்டோம் – வாடினோம் – வதங்கினோம் – அப்போதெல்லாம் சொந்தங் கொண்டாட முன் வராத இந்த அரசாங்கம் இப்போதுமட்டும் ஆக்கப்பட்ட பொருள்கள் அனைத்தும் அரசுக்கேசொந்தம்என்று சொந்தம் கொண்டாடுவது என்ன நியாயம்?'' என்று நியாயந்தவறான ஆட்சியின் குறையைச் சுட்டிக் காட்டியதோடு நில்லாமல்

'பஞ்சத்தால் தான்பெற்ற செல்வங்களைக் கிணற்றில் தள்ளி தானும் தற்கொலை செய்துக்கொண்ட நல்ல தங்காள் கதையை இன்னமும் நாட்டில் நடமாடத்தானே விட்டிருக்கிறீர்கள்?'' என்று சமூக சீர்கேட்டைச்சாடுகிறார் பராசக்தி வாயிலாக

அந்தபராசக்தி வெளியான போல்தான் எத்தனை எதிர்ப்புகள்—ஏசல்கள்

தென்றலைத்தீண்டியறியாத கலைஞர் தீயைத் தாண்டியிருக்கிறார் என்பதை அண்ணா உணர்ந்துதானிருந்தார். கலைஞருக்கெதிரான மனப் புகைச்சல் முணுமுணுப்பாக மாறி அண்ணா வரை சென்றது. எதிரிகள் முகத்திலறைந்தாற் போல் அண்ணா கூறியது இன்னமும் நெஞ்சில் பசுமையாக உள்ளது.

'குப்பையிலே கல்யாணியின் கண்ணீர் சிந்துவாரின்றி கிடந்தது. அதற்கு மெருகேற்றி பராசக்தியாக பளபளக்கச் செய்தார் கலைஞர் கருணாநிதி. கலைஞரின் கரம் பட்டதால்தான் பராசக்தியாக மின்னுகிறாள்!''

புயலெனக் கிளம்பியவர்கள் உதய சூரியன் வருகைக்கு முன்னால் சொல்லிக்கொள்ளாமல் மறையும் பனிபோல்

[தொடர்ச்சி 22 ம் பக்கம்]

நம்நாடு வாசகர்களுக்கு

நல் வாழ்த்துக்கள்!

சி. கே. சி.

திரையரங்கம்

திருப்பத்தூர் (வ. ஆ)

இப்பொழுது வெற்றிகரமான 3-வது வாரமாக திரையிடப் பட்டுள்ளது

"வருவான் வடிவேலன்"

(வண்ணப்படம்)

—சி. கணேசன்

தந்தை பெரியாரின் கொள்கையைப் பின்பற்றி
அறிஞர் அண்ணாவின் வழிநின்று
நம் தமிழினத் தானைத் தலைவராம்
டாக்டர் கலைஞர் அவர்களின் கரத்தை
வலுப்படுத்துவோம் என்று
இந் நன்னாளில் உறுதிகொள்ளுவோம்.

அன்பன்

ஜி. சண்முகம்.

செயலாளர், நகர தி. மு. க.

திருப்பத்தூர் (வ. ஆ.)

—சி. கணேசன்

கொடியில் அண்ணா — கொள்கைக்கு நாமம்!

செ. கந்தப்பன் எம்,ஏ.

கடவுள் மீது பாரத்தைப் போட்டுவிட்டுக் கண்டபடி வாழலாம்—எந்தப் பாவத்தையும் செய்யலாம் என நினைக்கும் பாதகரைப்போல, ஒரு சிலர் இன்று அரசியலிலும் வாழத் தலைப்பட்டுவிட்டனர். அண்ணா மீது பாரத்தைப் போடுவதால் அலங்கோல ஆட்சியும் செம்மையுடையதாக எற்றுக்கொள்ளப்படும் என்று அவர்கள் இன்று மனப்பால் குடிக்கின்றனர்.

இத்தகு நிலை அரசியலுக்குப் பெரும் விபத்தாக முடிவதோடு, ஆழ்ந்த சிந்தனையால் தம் இனத்தின் மேம்பாட்டுக்கு வித்திட்ட அண்ணாவுக்குச் செய்யப்படும் மாபெரும் களங்கமுமாகும் என்பதை அவர்கள் உணரவேண்டும்.

ஒரு தலைவன் பெயர் வழிபாட்டுக்கு உரித்தாவது அவனுக்குப் பெருமை சேர்க்காது! மக்கள் வாழ்வுக்கு வழிகாட்டும் விளக்காக அவன் வகுத்த கோட்பாடுகள் ஒளிபெறுவதே அவனுக்குப் பெருமை தருவதாகும். அவனைத்தெய்வமாக்கி அவன் தந்த கருத்துக் கருவூலங்களை சூடமாகவும், சாம்பிராணியாகவும், ஊதுவத்தியாகவும் அவன் திருமுன் பொசுக்குவதைப் போன்றதொரு கேவலம் வேறு இருக்கமுடியாது. இன்று அ. தி. மு. க. தமிழகத்தில் அதைத்தான் செய்துகொண்டு வருகிறது!

பெருமைக்குரிய தலைவர்கள் எத்தனையோ பேர் நம்மிடையே வாழ்ந்து மறைந்திருக்கிறார்கள் ஆனால் மாமேதை அண்ணா நம்மை வாழ்வித்து மறைந்தவர்! அதனாலேயே தமிழகத்தின் தனிச்சிறப்புக்கும்போற்றுதலுக்கும் உரித்தாகி இருப்பவர் அவர்!

அவருடைய சிந்தனைகள் இந்த மண்ணுக்கு உரியவை; இந்த மண்ணில் முளைத்தவை; இந்த மண்ணின் மைந்தனுக்கு மானத்தோடு கூடிய வளவாழ்வைத் தந்தவை; இன்னும் தர வல்லவை!

அரசியலில் நாட்டு ஒற்றுமை—சமுதாயத்தில் சாதி பேதமற்ற அமைப்பு முறை—பொருளாதாரத்தில் சமதர்மம்ஆகியவற்றை வலியுறுத்தாத தலைவர்கள் எந்தநாட்டிலும் இல்லை. ஆனால் அண்ணா மட்டுமே, இவற்றின் வேறுபட்டனவாக அல்லாவிட்டாலும்—இவற்றையே விவேகமுள்ள முறையில், போலித் தன்மைகளைக் களைந்து, தன்மானமும் அறிவுமுள்ள எவரும் ஏற்கத்தக்க விதத்தில் காட்டிய வித்தகராகத் திகழ்ந்தார்.

ஆதிக்கம் என்றாலே அது பொருளாதார ஆதிக்கத்தைத்தான் குறிக்கும் எனப்பலர் வறட்டுத்தத்துவம் பேசிய நேரத்தில், ஆதிக்கம் என்பது எந்த உருவில் நிலவினாலும் அந்தச் சமுதாயம், சமதர்மத்தைத் தோற்றுவிக்கச் சக்தியற்ற ஒரு மலட்டுச் சமுதாயமாகவே இருக்கும் என முழங்கியவர் பேரறிஞர் அண்ணா!

வடக்கின் ஆதிக்கத்திற்குத் தெற்கு அடிபணிவதும், மேட்டுக் குடிசையினரின் சாத்திரங்களுக்குப் பிறர் கட்டுப்படுவதும், வரலாற்றுக்கோ பண்பாட்டுக்கோ பகுத்தறிவுக்கோ ஒவ்வாத ஒருமைப்பாடும், தனித்தன்மைகளைச் சாகடித்து ஒரு சட்டத்தின் சுரண்டலுக்கு வழிவகுக்கும் ஒற்றுமையும் உருப்பட முடியாதவை என்ற உயரிய கோட்பாடுகளை முதன் முதலில் இந்த நாட்டில் ஆதாரங்களோடு நிறுவியவர் அண்ணா ஒருவரே!

எல்லாத் துறைகளிலும் லும் பரந்து விரிந்து நிற்கும் அவர் தம் எண்ண ஓட்டங்கள் ஒரு பல்கலைக் கழகத்தின் ஆய்வுக்கு உரியவை. ஆனால் இன்றைய தமிழக அரசியலில் எவராலும் ஒதுக்க முடியாத அளவுக்கு வேரூன்றி நிற்பவை இரண்டு. ஒன்று, டில்லியின் ஆதிக்கத்தையும் சுரண்டலையும் எதிர்ப்பது; இன்னொன்று, இந்தியின் ஆதிக்கத்தைத் தகர்ப்பது

அரசியல் ரீதியில் இந்த இரண்டும் அண்ணாவை மற்ற தலைவர்களிலிருந்து வேறுபடுத்திக் காட்டுபவை; ஒருவகையில் அண்ணாவின் இரு கண் எனப் போற்றத் தக்கவை; ஏதேனும் ஒருவடிவில் இந்திய நாடு முழுவதும் இன்று ஏற்றுக் கொண்டு வருபவை; நமது பணியிலோ நீக்கமறப் படிந்து விட்டவை!

ஆனால் ஆட்சிக் கட்டிலில் அமர்ந்துள்ள அ. தி. மு க. வினரோ தம்மை அண்ணாவின் வாரிசுகள் என்று சொல்லிக் கொண்டாலும், தாம் அவருக்குப் போலிப் பூசாரிகள்தாம் என்பதை மெய்ப்பிக்கும் வகையில் பாராளு மன்றத்தில் நடந்து கொண்டு உள்ளனர். எந்த மாநில அரசையும் தான் விரும்பினால் அகற்றும் அதிகாரம் மைய அரசுக்கு இருக்கக் கூடாது என்ற பிரச்னையில் அதற்கு எதிராக வாக்களித்து உள்ளனர்!

அண்ணாவின் உருவத்தைக் கொடியில் பதித்து, அவர் தம் கொள்கையைக் காலடியில் தேய்க்கும் கொடுமைக்கு இதைவிடச் சிறந்த எடுத்துக்காட்டு தேவையில்லை. தம் கட்சி தோற்றம் எடுத்ததே அதற்குதானே என்று ஒரு வேளை தமிழகத்தின் இன்றைய ஆட்சி முதல்வர் சாதிக்கக் கூடும்! அதில் உண்மை இல்லாமலும் இல்லை!

கலைஞர் தலைமையிலான தி மு, க. ஆட்சியைக் கலைக்க வேண்டும் என்று தில்லிக்கு மனுப் போடத்தானே இந்தக் கட்சியே உதயமானது? எந்த டில்லியின் ஆதிக்கம் தமிழகத்தில் தலைகாட்டக் கூடாது என்று அண்ணா விரும்பினாரோ எந்த ஆதிக்கத்தின் நிழல்கூட சென்னைக் கோட்டையின் மீது விழக் கூடாது என்று அவர் ஆசைப்பட்டாரோ, அதே ஆதிக்கத்திடம் மண்டியிட்டு

கழக ஆட்சியை அகற்றக் கோரியது அ. தி. மு, க.!

பிறவிப் பயனைப் பெற்றதோடு, கோலோச்சும் பேறும் இந்தத் துரோகத்திற்குப் பரிசாகக் கிடைத்தது! அண்ணாவின் அடிப்படையான ஒரு கருத்துக்குச் சாவு மணி அடித்து, அவர்தம் வாரிசுகள் எனப்படுவோர் அரியணை ஏறினர்!

நெருக்கடிக் காலத்தில் இந்திக்குத் தாம் எதிரியல்ல என்று நாடாளுமன்றத்தில் பிரகடனப்படுத்தியதன் மூலம் அண்ணாவின் கண்ணனைய இன்னொரு கோட்பாடும் அந்தக் கட்சியால் ஊனப்படுத்தப் பட்டது. ஆட்சிக்கு வந்த பின்னரும் பிரதமர் தமக்கு எழுதிய கடிதத்தை மூடி மறைப்பதன் மூலம் அண்ணாவின் கோட்பாட்டை விலைபேசி விற்றேனும் ஆட்சியில் நிலைப்பதே நமது நோக்கம் என்பதையே தமிழக முதல்வர் உறுதிப்படுத்துகிறார்!

எதிரிகளால் சாதிக்க முடியாததை எப்போதும் அவர் பெயரைச் சொல்லும் 'நினைத்ததை முடிப்பவன்' செய்து முடித்துவிட்டார்! தம் வாழ்வில் கண்டிராத வீழ்ச்சியை அண்ணா தம் சாவுக்கும் பின் கண்டு வருகிறார்!

இதைக் குறிப்பாகக் கோடிட்டுக் காட்டுவதுபோல் அ. தி. மு. க. நிறுவனரும் "அண்ணாவின் நாமம்வாழ்க" என அடிக்கடி சொல்லுவதன் மூலம் தாம் அண்ணாவின் கருத்துக்குப் போட்ட நாமத்தை நமக்கு நினைவுப்படுத்தி வருகிறார்!

ராமநாமத்தை உச்சரித்துக்கொண்டே ராமர் படத்திற்குத் தீயிடுவது போல, கண்ணகியைப் புகழ்ந்துகொண்டே கற்புக்கு விலைபேசுவதுபோல், வள்ளலாரை வணங்கிக் கொண்டே வகைவகையான மாமிசங்களைக் கூறுபோடும் கசாப்புக் கடைக்காரனைப் போல் அண்ணாவைத் தொழுது கொண்டே அவர் விளைத்த கொள்கைக் கொழுந்துகளைக் கிள்ளியெறியும் போர்முறை ஒரு வகையில் புரட்சிகரமானதுதான்!

ஆனால் இந்தப் புரட்டுப் புரட்சி இனியும் இங்கு அதிக நாள் எடுபடாது! எடுபடக் கூடாது! அண்ணாவின் கருத்துப் பேழையைக் குழி தோண்டிப் புதைத்துவிட்டு, அவர்தம் பெயருக்குத் தூபதீப நைவேத்தியம் செய்வது இனியும் தொடருமானால் தமிழகம் பட்டமரமாகிவிடும்!

இப்படி ஒரு விபத்து தமது கோட்பாடுகளுக்கு நேரும் என்று தெரிந்துதான்போலும் பேரறிஞர் அண்ணா அவர்கள், விருகம்பாக்கம் மாநாட்டில் இந்தச் சமுதாயத்திற்கு நமது பணி இன்னும் ஐம்பதாண்டுகளுக்குத் தேவைப்படும் என்று நமக்கெல்லாம் அறிவுறுத்தினர்.

அதை நெஞ்சில் நிறுத்தி என்ன நேரினும் அண்ணாவின் கருத்துக் கருவூலங்களை இழக்கச் சம்மதியோம்— அவர்தம் கோட்பாடுகளைத் தடம்புரள விடமாட்டோம்—என்று சூளுரைத்துச் செயல்படுவோம்! கலைஞர் தலைமை உள்ளவரை அண்ணாவின் படை தோற்காது!

நல்வாழ்த்துக்கள்!

ஏ. பி. எஸ்.
டிரேடிங் கம்பெனி
380, வி. இ. ரோடு, தூத்துக்குடி-3

அண்ணாவும் ஆதித்திராவிடர்களும்

ஏ.கே. சுப்பையா
(முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்)

தமிழ்நாட்டில்வாழ்கின்ற-தாழ்ந்து கிடக்கின்ற-மக்களில் பெரும்பாலான மக்கள் அரிசன மக்கள்-ஆவார்கள்.

ஆதித்திராவிடர்கள் என்றும், தாழ்த்தப்பட்டவர்கள் என்றும், தீண்டப்படாதவர்கள் என்றும் —இன்றைக்கும் நாட்டின் பல்வேறுபகுதிகளில் அழைக்கப்பட்டு வருகிறார்கள். காந்தியடிகள் 'அரிசனங்கள்' என்றே இவர்களை அழைக்க வேண்டுமென்றார். யார் யார் எந்தப் பெயரிட்டு அழைத்தாலும் இம்மக்களின்—வாழ்க்கைத்தரம்-முன்னேற்றம் இன்னமும் தாழ்வு நிலையில் உள்ளதே என எண்ணி வருந்தும் நிலையே நீடிக்கிறது. குறிப்பாகச் சொல்லப்போனால்-இம்மக்கள் சமுதாயத்தில் தாழ்த்தப்பட்டவர்களே யாவர். ஒரு காலத்தில் இவர்களை ஊர் மத்தியில் வாழவிடாது-ஊர்க்கோடிக்கே— ஒடிப்போய் வாழும்நிலைக்குத்தள்ளப்பட்டனர். கல்வித்துறையில் - மிக மிகப் பின்தங்கிய நிலையிலும், பொருளாதாரத் துறையில் வசதிபெற வழியின்றிய நிலையிலும் இன்னும் சொல்லப் போனால் அரசியல் துறையிலும், கலாச்சாரத் துறையிலும்— பின்னுக்குத் தள்ளப்பட்டு வாழ்ந்து வருகிறார்கள். இம்மக்களின்வாழ்வில்புதுமை காண — ஒரு சமுதாய மறுமலர்ச்சி தோன்ற — அம்மக்களின் இழிவு நிலையைப் போக்கி— மனிதர்களோடு மனிதராய் –சரிநிகர் சமானமாக வாழ — தேசத்தந்தை எனப் போற்றப்படும், காந்தியடிகள் பெரிதும் முயன்றிருக்கிறார்கள்.



'வைக்கம் வீரர்'

'வைக்கம் வீரர்' என அழைக்கப்பட்டவரான தந்தை பெரியார் அவர்கள் தம் வாழ்நாள் முழுவதும் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தால் ஒடுக்கப்பட்ட மக்களுக்காக — கடைசிவரை ஓயாமல் உழைத்தும் — சிறை சென்றும் — போராடியும் — பகுத்தறிவுப் பிரச்சாரப்பணிகளை— தீவிரப்படுத்தியும்—தமிழக மக்கள் நலங்கருதி — இந்தித் திணிப்பால் விளையும் தீமைகளைஎடுத்துச் சொல்லியும் — இந்தியை எதிர்த்துப் போராடியும் — வாழ்ந்து—மறைந்த பெருமை பெரியாருக்குரியதாகும். 'வீதிகளிலே ஆடு. மாடுகள் போகலாம். பன்றி, கழுதை போகலாம். ஆனால் தாழ்த்தப்பட்டவன் போகக்கூடாதா? அவன் ஆடு மாடுகளை விடக் கேவலமான பிறவியா?' என்று கேட்டவர் தந்தை பெரியார். அவர் தோன்றவில்லை எனில் இன்றைக்குத் தாழ்த்தப்பட்டவர்கள் அடைந்துள்ள ஒரு சில முன்னேற்றம்கூட காண வழியில்லாது போயிருக்கும் என்பதனை உணரவேண்டும்,

பெரியார் வழியில் அண்ணா

பெரியார் அவர்கள் சமுதாய அடித்தளத்தில் வாழும் மக்களுக்காக எடுத்துச் சொன்ன கருத்துக்களை — பட்டிதொட்டியெல்லாம்பரப்பும் பணியில் — தன் சொல்லாற்றலால் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு—மக்களை பகுத்தறிவுப் பாசறைகளாக உருவாக்கிய பெருமை பெரியாருக்கு அடுத்து அண்ணாவுக்குக் கிடைத்தது எனலாம். அண்ணாவின் சொல், எழுத்து, செயல் அனைத்தும் பிற்பட்ட—தாழ்த்தப்பட்ட மக்களுக்களுக்காகவே இருந்து வந்தது. 1967-ல் அண்ணா அரியணை ஏறியது –தமிழக மக்களின் பேராவல் நிறைவேறியகாலம் ஆகும். அண்ணாவின் ஆட்சி காலத்திலும் சரி — அதற்கு முந்தைய பகுத்தறிவுப் பிரச்சாரக் காலத்திலும் சரி—தீண்டாமைப் பேயை விரட்ட அண்ணா அவர்கள் தீவிரமாக செயல்பட்டு வந்துள்ளார்கள்.



தாழ்த்தப்பட்ட மக்களை தலை நிமிர்ந்து நடக்கச் செய்தவர் அண்ணா.

அண்ணாவின் அறிவூட்டலால் கல்வித்துறையில் மெல்ல மெல்லதாழ்த்தப்பட்டவர்கள் தலையெடுக்கும் நிலை உருவானது.

அண்ணா வழியில் கலைஞர்

தாழ்த்தப்பட்ட -பிற்படுத்தப்பட்ட மக்களின்—உள்ளங்களில் இன உணர்வை தட்டி எழுப்பிய தந்தை பெரியாரின் வாரிசாக அண்ணாவும்—அண்ணாவிற்குப் பின்னாலே கலைஞரும் என்ற நிலை தமிழகத்தில் இன்று நிலவி வருகின்ற ஒன்றாகும். இது போற்றற்குரிய பணியாகும். அண்ணா காட்டிய வழியில் இன்று கலைஞர் தன் பணியைத் தொடர்ந்து— எத்துணையோ —எதிர்ப்புக்களைத் தாங்கி இப்பணியைத் தொய்வின்றி செய்து வருகின்றார் கலைஞர்.

அண்ணாவைத் தொடர்ந்து கலைஞர் ஆட்சி காலத்தில்— தாழ்த்தப்பட்ட மகன் தன் மானத்துடன்வாழ—சாதிபேதமற்ற சமுதாயத்தினை அமைக்க உயர்வு தாழ்வு இல்லா சமத்துவம் காண ஆட்சிப் பொறுப்பிலே இருந்த காலத்தும் சரி—இல்லாத—இன்றை நாளிலும்சரி கலைஞர் அவர்கள் வள்ளுவர் கூறியது போன்று:

"உறுபசியும் ஓவாப்பிணியும்
செறுபகையும்
சேரா தியல் வது நாடு"—

என்ற குறட்பா கருத்தினுக்கேற்ப—தன் பணியைத் தொடர்கிறார்கள். கலைஞர் ஆட்சிக் காலத்தில் படித்த—தாழ்த்தப்பட்ட இனத்தாருக்கு...வேலை வாய்ப்பு வழங்குவதில் 18 சத விகிதம் (விழுக்காடு) அமுலாக்கினார். வட்டியில்லாக் கடன் வழங்கி—வருவாயைப் பெருக்கவும் தொழில்கள் தொடங்கவும் செய்தார்கள், தாழ்த்தப்பட்டவர் நீதி மன்றத்தில் நீதிபதியாக அமரும் நிலை செய்தார்கள். நிலமற்ற அரிசன மக்கட்காக குடியிருப்பு வீட்டு மனை குடியிருப்பு இல்லங்கள்—வழங்கினார்கள்.

நிலமற்ற ஏழையர்க்கு நிலம் வழங்கவும்—கோவில்களில் அர்ச்சகர்களாக நியமனம் பெற—உரிய சட்டமும் செய்தார்கள். விவசாயத் தொழிலாளர்களுக்கு ஊதிய உயர்வு கிடைக்க 'கமிஷன்கள்' அமைத்து சட்டம் செய்ய— வகுத்து செயல்பட்டார்கள்.

உழைத்து, உழைத்து ஓட்டாண்டியாக — தனக்கென்று ஒரு வீடு அமைக்க வழியுமில்லாத — வலுவிழந்த மக்களுக்கு கல்வீடு கட்டி குடி அமரச் செய்த பெருமை கலைஞர் ஒருவரையேச் சாரும். நாடுகள் பலவும் இத் திட்டத்தினைப் பாராட்டியது—குறிப்பிடத் தக்கதாகும். பாரதிதாசன்,



கந்தை யணிந்தோம்—இரு
கையை விரித் தெங்கள்
மெய்யினைப் போர்த்தோம்!
மொந்தையிற் கூழைப்—பலர்
மொய்த்துக் குடித்தும்
பசித்துக் — கிடந்தோம்
சந்தையில் மாடாய்—யாம்
சந்ததம் தங்கிட
வீடுமில்லாமல்
சிந்தை மெலிந்தோம்—எங்கள்
சேவைக்கெல்லாம்...இது
செய் நன்றி தானோ?—

என்று அன்று ஏழைகளின்! நிலை குறித்து படம் பிடித்துக் காட்டினார் அப்பாடல்பொருள் உணர்ந்து கலைஞர் ஏழை. எளிய அரிசன மக்களுக்காகச் சேவை செய்தமை ஈண்டு— குறிப்பிடத் தக்கதாகும். முடிவாக, அண்ணாவின் கனவு— நனவாக டாக்டர் கலைஞர் தலைமையில் கழகத்தைக் கட்டிக் காக்க —அரிசன மக்களின் வாழ்க்கையில் மறுமலர்ச்சிக் கான டாக்டர் கலைஞரின் தலைமையில் "முப்பெரு விழா" நடைபெறுகின்ற இன்றைய தினம் அணி திரண்டு-நாமெல்லாம் அணிவகுத்துச்சூளுரைப் போம்.

வளர்க தந்தை பெரியாரின்
பகுத்தறிவுக் கொள்கை!
வாழ்க அறிஞர்
அண்ணாவின் புகழ்
வளர்க ! திராவிட
முன்னேற்றக் கழகம்

★ பெரியார் நூற்றாண்டு விழா
★ அறிஞர் அண்ணா பிறந்த நாள் விழா
★ கழகம் பிறந்த நாள் விழாவிற்கு
'நம்நாடு' மலர் வெளியிடுவது குறித்து மகிழ்ச்சியடைகிறேன்.

இங்ஙனம்,
பி. சுந்தரம் எம் எல். ஏ.
திருப்பத்தூர் (வ. ஆ.)

நல்வாழ்த்துக்கள்!

த. மாணிக்கம் அண்டு கம்பெனி,
146, பாளையங்கோட்டைசாலை,
தூத்துக்குடி.

உப்பு - இரசாயன உப்பு - உப்புத்தூள் - ஜிப்சம் வியாபாரம்

உலகத்தில் ஒரு அதிசயம்!

விடுதலை கி. வீரமணி

உலகத்தில் இதுவரை பல்வேறு காட்சிப் பொருள்களை சித்திரங்களை, கட்டிடங்களைத்தான் அதிசயப் பொருள்களாகக் குறிப்பிட்டுள்ளார்கள்.

ஆனால் மனிதர்களின் ஞானத்தையும் துணிவையும் கணக்கிற்கொண்டு, மனிதரை அத்தகையதோர் பட்டியலில் இணைக்கவில்லை.

இப்பொழுது, அதில் இணைக்கப்பட்டே தீரவேண்டிய ஒரு மா மனிதராகத் தலைவர் தந்தை பெரியார் அவர்கள் திகழுகிறார்கள்!

எடுத்துக்காட்டாக எத்தனை எத்தனையோ குவியல்கள்;

பொதுவாழ்வின் பெயரால் சிறை செல்வது என்பது ஒரு தவிர்க்க இயலா நிலை. அப்படி சிறை செல்லும் வாய்ப்பைப் பயன்படுத்தி, தியாக முத்திரை குத்திக்கொண்டு, அதன் விலையாகப் பாமர மக்களின் ஓட்டைப் பறித்து பதவி ஆசனங்களைப் பிடிக்கும் பொது வாழ்க்கையைப் பார்த்தவர்கள் நாம்!

சிறை சென்று வந்தாலே அதற்கு ஒருசிறப்பு-பாராட்டு, பொதுமக்கள் பாராட்டுவது ஒரு புறம் இருக்கட்டும்! தாங்களேகூட தங்களது 'சிறை' வாழ்வைப்பற்றிப்பெரிதுபடுத்துவதையும் பார்க்கிறோம்.

அதிலும் தந்தை பெரியார் அவர்கள் ஒரு அதிசய மனிதராகவே தோன்றுகிறார்கள்.

இதோ ஒரு எடுத்துக் காட்டு!

'குடியரசு' ஏட்டில் 'இந்த ஆட்சி ஏன் ஒழியவேண்டும்' என்று கட்டுரை எழுதியதற்காகத் தண்டிக்கப்பட்டு, ராஜமுந்திரி சிறையிலிருந்து விடுதலையாகி வெளிவருகிறார்; ஈரோட்டிலே ஒரு பாராட்டுக்கும் ஏற்பாடாகிறது. அந்தப் பாராட்டுநிகழ்ச்சியிலேதந்தை பெரியார் பேசுகிறார் கேளுங்கள்:

"என்னைப் பொறுத்தவரை நான் பி - வகுப்பில் இருந்தாலும் எனக்கு வெண்ணெயும் பாலும் சில சமயங்களில் மாமிசமும் கிடைத்து வந்தது. அதுபோல எனக்கு இங்கு வீட்டில் கூட திரேக நிலைக்கு ஏற்ற சாப்பாடு கிடைக்காது...... மற்றபடி நான் வெளியில் வந்ததில் இந்த இரண்டு நாளிலேயே ஏன் வந்தோம் என்றே தோன்றுகிறது இப்போது என்ன செய்வது என்றே புரியவில்லை...... இதன் பயனாய் (அதாவது நான் ஜெயிலுக்குப்போனதை வைத்து) அறியாமை மிகுந்த பாமர ஜனங்களால் நான் பாராட்டப்படக் கூடும் மற்றபடி அறிவாளிகள் நான் ஜெயிலுக்கு சென்றதைப் பாராட்டயாதொரு விசயமும் இல்லை".........

பக்கம் 14 'புரட்சி' 20—5—34

இப்படி வெளிப்படையாகப் பேசுகிற ஒரு தலைவரை உலகச் சரித்திரம் சந்தித்ததுண்டா?

சிறை வாழ்வைத் தங்கள் பொது வாழ்வின் விளம்பரப் பதாகையாக்கி வாணிகம் செய்யும் நாட்டில் தந்தை பெரியார் மிக வெளிப்படையாக உள்ளதை உள்ளபடியாகக் கூறுகிறார் என்றால் உலகத்தில் இவர் ஒரு அதிசயம் தானே!

தந்தை பெரியார் அவர்கள் பிள்ளையாரை சாலையிலே போட்டு உடைத்துக் காட்டி, மக்கள் மத்தியிலே கடவுள்



என்பது வெறும் மண் உருண்டை என்பதை மெய்ப்பித்த போராட்ட கால கட்டம்!

சில ஊர்களில் அதற்கு எதிர்ப்பாக 'ஆத்திக சிகாமணிகள்' அய்யா அவர்களது உருவத்தையும் எரிக்கிறார்கள், அதைக் கண்டு அய்யா அவர்கள் ஆத்திரப்பட்டார்களா? உணர்ச்சி வயப்பட்டுச் சுடுமொழி சொன்னார்களா?

இதோ பேசுகிறார்: கேளுங்கள்:

"என்னுடைய படத்தைச் சிலர் கொளுத்தியதாக என்னிடம் சொன்னார்கள். அவர்களுக்கு நான் சொன்னேன். அதைப்பற்றி யாரும் கவலைப்பட வேண்டாம்; அதை மதிக்கக் கூட வேண்டாம். என் படத்தைக் கொளுத்தியதாலேயே நான் செத்தா போய் விடுவேன்? கொளுத்தட்டுமே! இன்னும் வேண்டுமானால் அந்தக் காரியத்துக்கு—அதாவது என் படத்தைக் கொளுத்துகிற காரியத்துக்கு நானே பணம் தருகிறேன், நானே மற்றவர்களுக்கும் விளம்பரப்படுத்தி விடுகிறேன்.

"இந்தாருங்கள்! அவர்கள் என் படத்தைக் கொளுத்துகிறார்கள். அங்கு போய் யாரும் கலவரம் செய்யாதீர்கள். நானே 50 ரூபாய் கொடுத்து என் படத்தைக் கொளுத்துவதற்காக கொடுத்திருக்கிறேன். அவர்கள் கொளுத்திவிட்டுப் போகட்டும் சும்மா இருங்கள்" என்பதாகச் சொல்லி விடுகிறேன். வேண்டுமானால், நன்றாய் தாராளமாய் என் படத்தைக் கொளுத்தட்டும், எனக்கு அதைப்பற்றிக் கொஞ்சம்கூடக்கவலையில்லை."

'விடுதலை'
29-5 1953

இப்படி ஒரு அதிசயத் தலைவரை இதுவரை இவ்வுலகம் கேட்டதுண்டா — சந்தித்ததுண்டா?

தனது படத்தைக் கொளுத்துவோர்க்குப் பரிசுத் திட்டம் அறிவிக்கிறாரே — இவர் ஒரு உலக அதிசயம் இல்லாமல் என்ன?

நாட்டிலே நளினமாக நற்பெயர் எடுத்து, நற்புகழ் தாங்கி, நாடாளும் வசீகர வாய்ப்புகள் எல்லாம் இருக்க இவற்றையெல்லாம் துறந்து— இன்னும் சொல்லப் போனால் பெரிய பதவிகள் எல்லாம் அய்யா வீட்டுக் கதவைத் தட்டி உள்ளே நுழைந்த போதுகூட — அவற்றையெல்லாம் விரட்டி — எந்த இடத்தில் கைவைத்தால் மக்கள் எதிர்ப்பு என்னும் பூகம்பம் வெடிக்குமோ, எந்தக் கூட்டத்தை எதிர்த்தால் இன்னுயிர்க்கும் இடர் ஏற்படுமோ அந்த இடத்திலே கைவைத்து —அதற்கான கஷ்டநஷ்டங்களை விலை கொடுத்து, மக்கள் சமூகத்தை விழிக்கச் செய்தாரே — இவர் ஒரு உலக அதிசயம் இல்லாமல் என்ன?

எழுதிக் கொண்டே போகலாம்—அதற்கொரு எல்லை காணவே இயலாது!

உலக அதிசயத் தலைவரின் நூற்றாண்டு விழா கொண்டாடும் காலக் கட்டத்திலே அவரது உலகப் பார்வையையும் — அதே நேரத்தில் இந்நாட்டு மக்களுக்கு — இனத்துக்குத் தேவையான இனப் பாதையையும் உறுதியாகத் தடம் பற்றி உழைத்திட நம்மை நாம் அர்ப்பணித்துக் கொள்வோமாக!

வாழ்க பெரியார்!

நம் நாடு வெளியிடும் முப்பெரும் விழா மலருக்கு எங்களது இதயங்கனிந்த நல் வாழ்த்துக்கள்!

பனியன் தொழில் அயல்நாட்டுவாணிபத்தில் முன்னோடியாகத் திகழும்!

போன்: 21323 தந்தி: சிம்ப்ளக்ஸ்

சிம்ளக்ஸ் நிட்டிங் கம்பெனி

27 கொங்கு மெயின்ரோடு,
திருப்பூர் – 638602

'நம்நாடு'
"தினகரன்"
'சிகப்பு நாடா"
உங்களது எதிர்கால விளக்கம்
மற்றும்
கண்ணதாசன் நாவல்கள்
உங்கள் இல்லம் தேடி வர எம்மிடம் தொடர்பு கொள்ளவும்.

பி. கனகராஜ் நாடார்,
நியூஸ் ஏஜண்ட் அண்டு புக்-ஸ்டால்
ஜெயா டாக்கீஸ் எதிரில்
தென்கரை, பெரியகுளம்
62650.

அவர் வழி நடப்போம்!

சா. கணேசன்

விடுதலை பெற்றுவிட்ட இந்தியா இன்னும் வறுமைக்கு விடுதலை அளிக்கவில்லை. சாதிக் கொடுமைகளுக்குச் சாவு மணி அடிக்கவில்லை. பசியைப் போக்கவில்லை. கோடிக்கணக்கான மக்கள் வாழக் குடியிருப்பைக் கூட அளிக்க முடியவில்லை. தொழிலாளியின் வாழ்வில் சுகத்தைக் காண முடியவில்லை.

இன்னும் சாதிக் கொடுமைகள் நாட்டை ஆளுகின்றன. ஆட்சியாளர்களையும் ஆட்டிப் படைக்கின்றன. முன்னேற்றத்துக்கு முட்டுக் கட்டை போடுகின்றன. இந்த நாட்டில் மூடப்பழக்க வழக்கங்கள் இன்னும் முடை நாற்றம் வீசுகின்றன. வாழ்வில் துயரம் வருகின்ற நேரத்தில் அதைத் துடைத்து முன்னேறத் துணிவு வருவதில்லை. காரணம் ஆண்டவன் விட்ட வழி என்று வறுமையை அணைத்துக்கொள்ளும் அறிவற்ற போக்கு மக்களை ஆட்சிசெய்து வருகிறது.

இந்த நிலைகளுக்கு இறுதி முடிவு கட்ட எழுச்சி மிக்க தலைவர் தமிழகத்தில் தோன்றினார். அவர்தான் வெண்தாடி வேந்தர் பெரியார்இராமசாமி. பத்தொன்பதாம் நூற்றாண்டில் பிறந்தவர், இருபதாம் நூற்றாண்டின் இறுதியில் மறைந்தவர். இடைப்பட்ட இந்த ஒரு நூற்றாண்டுக்காலம் அவரால்தமிழகத்தின் விடியற் காலமாக உருவெடுத்து விட்டது.

பழமைப் பிடி, பக்தி மார்க்கம் இவற்றின் மொத்த குத்தகைக் குடும்பத்தில்பிறந்தவரே ஈரோட்டுச் சிங்கம் பெரியார். அடிமை இந்தியாவில் பிறந்து சுதந்திர இந்தியாவில்



மறைந்து விட்டவர். விடுதலைப் போராட்டத்திற்கு வீரர்களைத் திரட்டியவர். தமிழகத்தில் விடுதலை இயக்கத்திற்குத் தலைமை யேற்றவர். குடும்பச் சொத்தினை விடுதலை இயக்கத்திற்கு வாரிஅளித்தவர். காந்தியார் மதுவிலக்கைக் கடுமையாக நிறைவேற்ற விழைந்த போது தனது தோட்டத்து நூற்றுக்கணக்கான தென்னை மரங்களை வெட்டி வீழ்த்தியவர்.

“அரசியல்விடுதலையைநாடு அடைந்தாலும் முன்னேற்றத்தைக் காணமுடியவில்லை. பழமைப் பிடிப்பு, மூடப்பழக்கங்கள், சாதியின் கொடுமைகள், சனாதனக் கேடுகள், விதியின்மீதுநம்பிக்கை இவற்றினை ஒழிக்க வேண்டும். பகுத்தறிவுக் கொள்கையினை மக்கள் ஏற்கவேண்டும்.அப்போதுதான் பெற்ற சுதந்திரத்தின் பெருமையைப் பேண முடியும். முற்போக்கு எண்ணங்களை மக்கள் ஏற்றிட முன்வரவேண்டும்,அப்போதுதான் பொதுவுடைமைச் சமுதாயத்தை நாடு காண முடியும்'' என்று நெடிய சிந்தனைக்குப் பின் ‘சுயமரியாதை இயக்க'த்தைக் கண்டவர், அதனைத் தொடர்ந்து திராவிடர் கழகத்தை உருவாக்கியவர் பெரியார். மேல் சாதிக்காரர்கள் ஆணவத்தோடு அடுக்கடுக்கான தொல்லைகளைக் கொடுத்தனர். பெரியார் தம் கொள்கையை எடுத்துக்கூறக்கூடல் மாநகரில் மாநாட்டைக் கூட்டியபோது சாதிவெறியர்கள் பந்தலுக்குத் தீ வைத்தனர்; பங்கேற்ற தோழர்களை வெட்டினர்; தடிகொண்டு தாக்கினர்; இப்படி அடுக்கடுக்கான கொடுமைகளைப் பெரியார் இந்தச் சமுதாய மக்களுக்காக சிரித்தபடி ஏற்றார்! தாழ்த்தப்பட்ட இனம் தலை நிமிர்ந்து வாழ்ந்திடத் தமது இயக்கத்தை முடுக்கி விட்டார்.

அதில்வெற்றியும்கண்டார். வைக்கம் வீரர் என்ற விருதும் பெற்றார். பின்தங்கிய மக்களை வாழ்வில் முன்னேற்றிட அவருடைய வாழ்க்கை ஒரு போராட்டமாகவே அமைந்து விட்டது.

ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பாகவே சோவியத் ரஷ்யாவிற்குச் சென்று வந்தார், பொதுவுடைமைக் கொள்கை புவியில் பரவிடப் பிறந்த மண்ணில் பிரச்சாரம் நடத்தினார். ஐரோப்பிய மண்ணை அன்றைய நிலைக்கு ஏற்ப கம்யூனிசத்தைக் கண்டார் கார்ல் மார்க்ஸ். இந்திய மண்ணின் இயல்புக்கு ஏற்ப சமுதாய மாற்றத்திற்குப் பின்னலேதான் பொதுவுடைமைக் கொள்கையைப் புகுத்திட முடியும் என்ற புதிய சிந்தனையைப்போதிக்கத் தொடங்கினார். பெரியார்,

“மதம் மக்களின்முன்னேற்றத்துக்குத் தடைக்கல்'' என்ற மாவீரர் லெனினுடைய கருத்தினை இந்தியக்கம்யூனிஸ்டுகள் எடுத்துக் கூறுவதில் அஞ்சி நடுங்கினர். ஆனல் தந்தை பெரியாரோ ‘மக்களை அடிமைப் படுத்துவதே மதம்'' “மதம் பெரிய மடத்தனம்'' என்று ஒரு படி மேலே சென்று இடியென முழக்கமிட்டனர்.

பெரியார், தமிழர்களின் மானம் நிலைத்திட அரை நூற்றாண்டுக்கும் மேலாக அயராது பாடுபட்டார்!

கொள்கை முரசாம் ‘குடியரசு' இதழைப் புரட்சிமணம் வீசிட வெளியிட்டார்;

‘விடுதலை' நாளிதழும் அவரது கருத்துக்களைத் தாங்கி வந்தது. அவரது மேடைப் பேச்சில் வேகம் இருந்தது. விவேகமும் நிறைந்தது.

சாக்ரடீசுக்குப் பின்னல் அவர் தத்துவங்களை எடுத்துக் கூற இயக்கம் இல்லை. இங்கர்சாலுக்குப் பின்னலே அவரது கருத்தை எடுத்துக்கூற ஆட்களும் இல்லை. இயக்கமும் இல்லை.

அதேபோல் சன்யாட்சனுக்குப் பின்னலே தனி நபர்களோ, இயக்கமோ கூட இல்லாமல் போய்விட்டது.

பெரியார் 1938-ல் நடந்த மொழிப்போரை தலைமைஏற்று நடத்தி சரித்திரம் படைத்தார். வெற்றியைக் கண்டார். பத்தாண்டுகள் கழித்து நடந்த இரண்டாம் மொழிப் போரிலும் ஈடுபட்டார். வெற்றியினை ஈட்டினார்.

கலப்புத் திருமணம் மூலம் நாட்டில்சாதிகளை அழிக்கலாம் என்று எண்ணினார். ஏடுகளில் எழுதினார். மேடைகளில் முழங்கினார். ஓரளவுக்கு வெற்றியும் ஈட்டினார். ‘விதவைத் திருமணம்' அவருடைய இலட்சியங்களில் ஒன்றாக இருந்தது.

அவர் தமது தொண்ணூற்று ஐந்தாவது ஆண்டிலே கூடத் தொய்வில்லாது பட்டிதொட்டிகளுக்கெல்லாம் பயணம் செய்தார்;

பெரியாரின் அரசியல் வாரிசாகப் பேரறிஞர் அண்ணா உருவானார். பெரியாரின் இலட்சியங்களை மக்கள்கேட்டு ஏற்கத்தக்க பணி புரிந்தார். அண்ணாவின் எழுத்து எல்லோரையும் கவர்ந்தது. மாற்றாரையும் படிக்க வைத்தது. பணியைக் குறைக்க வைத்தது. நாளடைவில் அவரது கொள்கையை ஏற்கவும் வைத்தது.

பேரறிஞர் அண்ணாவின் நாற்பது ஆண்டுக்கால இடைவிடாத் தொண்டுக்குப் பின்னல் தமிழகமே, ஏன் இந்தியாவே அரசியல் மேதையாக (States Man) அவரை ஏற்றது!

தமிழக மக்கள் ஆட்சியை அண்ணாவிடம்ஒப்படைத்தனர் அண்ணா ஆட்சியில் இருந்தது இரண்டு ஆண்டுகள் கூட இல்லை. அந்தக் குறைந்த காலத்தில் தமிழ்மண்ணுக்குத் ‘தமிழ்நாடு' என்று பெயர் சூட்டிப்பெருமை சேர்த்தார். பெரியார் இலட்சியம்ஈடேறத் தமிழ்ச் சமுதாயம் சாதியை அழித்துத்தலைநிமிர்ந்து வாழ்ந்திட தமிழ்த் திருமணத்திற்கு சட்டச் சம்மதம் பெற்றுத் தந்தார்.

பேரறிஞர் அண்ணாவின் பெருவாழ்வில் பெரியாரின் இலட்சியம் பெரிதும் நிறைவேறியது. ஆனல் அவரது தொண்டு நீடிக்கமுடியவில்லை. தமிழகம் அந்த நல்வாய்ப்பை இழந்துவிட்டது.

பெரியாரின் பேரன்பிற்கும் பேரறிஞர் அண்ணாவின் பெருமதிப்பிற்கும் உரித்தான கலைஞர் கழகத்தின் தலைமையை ஏற்றார்,ஆட்சியின் தலைமையையும் ஏற்றார். ஏழாண்டுக்காலம் எல்லோரும் போற்றும் வண்ணம் சீரான ஆட்சி கண்டார்,

தமிழகத்தின் ஒரு நூற்றாண்டு வரலாற்றில் பெரியார் உயிர் வாழ்ந்து கொண்டிருக்கிறார். பேரறிஞர் அண்ணா பெரியாரை தன்னுள்கொண்டு புதிய வரலாற்றைப் படைத்திருக்கிறார்.

இந்த இருபெரும் தலைவர்களின் ஒரு பெரும் பிரதிநிதியாக இன்று தமிழினத்தின் தானைத்தலைவர் டாக்டர் கலைஞர் விளங்கி வருகிறார்.

பெரியாராக, அண்ணாவாக இருந்து நாட்டு மக்களை வழி நடத்திச் செல்கிறார் கலைஞர். அவர் வழி நடப்போம்!

★

முப்பெரும் விழா மலருக்கு
எங்கள் இதய நல் வாழ்த்துக்கள்!

★

ஏற்றமிகு திருப்பூர் பனியன் தொழிலை ஏற்றுமதி
வாணிபத்தில் சிறக்கச் செய்த

டி. வி.
பனியன்கள்

தயாரிப்பாளர்கள்:
தொலைபேசி : அலுவலகம் : 22239
: 20514
வீடு : 20358

டி. வி. நிட்வேர்
உயர்தர உள்ளாடை தயாரிப்பாளர்
13-11 பிரிட்ஜ்வே காலனி, திருப்பூர் — 2

தந்தை பெரியார் அவர்களின் நூற்றாண்டு விழா
மலருக்கு
எங்களது நல்வாழ்த்துக்கள்!

SWEETY BANIANS

நீண்ட உழைப்பிற்கும்
உறுதிக்கும்
தரமிக்க எங்களது
ஸ்வீட்டி நிட்டிங்
பனியன்களை அணிவியுங்கள்

போன்: நெ 22245
ஸ்வீட்டி நிட்டிங் மில்ஸ்,
1, அப்பாசிநகர், திருப்பூர்- 638602

'விடுதலை'யில் பூத்த ஒரு மலர்!

மா. செங்குட்டுவன்

இருபதாம் நூற்றுண்டின் ஈடு இணையற்ற சிந்தனையாளர்; 'பகுத்தறிவாளர்' 'தத்துவ ஞானி' என்றெல்லாம் புகழ் பெற்ற தந்தை பெரியார் அவர்கள் சிக்கனத்திலும் சிறந்தவர் என்பதைச் சொல்லத் தேவையில்லை,

எதிலும் எளிமை, சிக்கனம் கணக்குப்பார்த்துச் செலவிடுதல் ஆகிய இயல்புகள் பெரியாரின் உடன் பிறந்தவையாகும்.

பெரியாரின் சிக்கனம் பொதுநலத்தின்பாற்பட்டதாகவே இருக்குமே தவிர, தன்னலத்துக்கானதல்ல.பெரியாரே, அடிக்கடி கூறுவார். "நான் காசு ஆசை பிடித்தவன்; மிகவும் சிக்கனக்காரன்; நான் சேர்க்கும் காசெல்லாம் எனக்காக அல்ல; மக்களுக்காக நான் கொண்டுள்ள இலட்சியத்துக்காகத்தான்'' என்று.

ஆனால், பெரியாரின் சிக்கன இயல்பு அவரது இலட்சிய உணர்வை எந்த நேரத்திலும் வென்றதில்லை. இலட்சியத்திற்காகத் தமது சிக்கனஇயல்பை விட்டுக்கொடுத்த நிகழ்ச்சிகள் பல உண்டு.

காங்கிரசில் இருந்த காலத்தில், நீதிமன்றப் புறக்கணிப்பு (கோர்ட் பகிஷ்கார) இயக்கத்தில் தீவிரப் பங்கெடுத்துக் கொண்ட பெரியார் அவர்கள், தமக்குச் சேரவேண்டியிருந்த ஆயிரக்கணக்கான ரூபாய்களை இழக்கவும் துணிந்தாரேயன்றி நீதிமன்றத்துக்குச் செல்ல விரும்பவில்லை. அப்போது பெரியாரிடம் அவரது நண்பரான வழக்கறிஞர் ஒருவர் வந்து, "உங்களுக்குச் சேரவேண்டியபணத்துக்கெல்லாம் என் மீது சாட்டுதல் (மேடோவர்) செய்து கொடுங்கள். நான் நீதிமன்றம் சென்று பணத்தைப் பெற்று விடுகிறேன்'' என்றார்.

அதற்குப் பெரியார் அவர்கள், அதெல்லாம் முடியாது என்று கூறி, 'புரோ நோட்டு'களையெல்லாம் கிழித்தெறிந்தார்.

தீவிர மதுவிலக்குப் பிரச்சாரத்தில் பெரியார் அவர்கள் ஈடுபட்டிருந்தபோது தமக்குச் சொந்தமான தோப்பில் இருந்த (கள் இறக்குவதற்குப் பயன்படக்கூடிய) நூற்றுக் கணக்கான தென்னை மரங்களை வெட்டி வீழ்த்தச் செய்தார். இதனால் ஏற்படுகிற இழப்பைவிட, இலட்சியமே பெரிதென்று எண்ணினார்.

எனவே, பெரியாரின் சிக்கனம் யாரையும் பாதிப்பதில்லை; மாருக நன்மையே பயக்கக்கூடியதாகும்.

அவரது சிக்கன நடவடிக்கைகளுக்குஎடுத்துக்காட்டாக எத்தனையோ நிகழ்ச்சிகளைக் குறிப்பிடலாம். எடுத்துக்காட்டுக்கு ஒன்று:-

1955–ஆம் ஆண்டு தந்தை பெரியார் அவர்களின் 77 ஆம் ஆண்டு பிறந்த நாள் வந்தது, அப்போது நான் விடுதலை அலுவலகத்தில் பணியாற்றி வந்தேன். பெரியார் பிறந்த நாளையொட்டி விடுதலை சார்பில் மலர் போட்டால் என்ன என்ற கேள்வி என் உள்ளத்தில் எழுந்தது.

மலர் போடுவது என்பது, 'விடுதலை' 'குடியரசு போன்ற பெரியாரின் பத்திரிகைகளின் வரலாற்றிலேயேநிகழ்ந்திராத ஒன்று. நாம் ஏன் அதனை நிகழ்த்திக் காட்டக் கூடாது என்று எண்ணினேன். நமது முயற்சியைச் செய்து பார்ப்போம் அது வெற்றி பெற்ருல் பெறட்டும்; இல்லையேல் விட்டு விடுவோம் என்ற துணிவு பிறந்தது

மெல்ல, ஆசிரியர் குத்தூசி குருசாமியிடம் எனது எண்ணத்தை வெளியிட்டேன். அதைக் கேட்டதும் அவர், மலரா? நாம் போடுவதா? ஐயா அதற்கு இணங்குவாரா? என்றெல்லாம் கேள்விகளை எழுப்பினர்.

எதற்கும் நீங்கள் ஐயாவைக் கேட்டுப் பாருங்கள் என்றேன். மற்றத் துணையாசிரியர்களும் என்னேடு சேர்ந்து கொண்டு அவரைத் தூண்டினர்.

அவரும், 'நான் கேட்டுப் பார்க்கிறேன்' என்று சொன்னர். ஆனல், ஐயாவின் ஒப்புதல் கிடைக்கும் என்ற நம்பிக்கை அவருக்கும் இல்லை; எங்களுக்கும் இல்லை

'மலர்' என்ருல் பலவண்ணப் படங்கள் போட வேண்டும்; உயர்ந்த (ஆர்ட்) காகிதத்தில் அச்சிட வேண்டும்; ஓவியங்கள் வரையவும், பிளாக்குகள் எடுக்கவும் அதிகச்செலவாகும். அதெல்லாம் நமக்குக் கட்டுப்படியாகாது என்பது பெரியாரின் கருத்து. அதனல்தான் மலர் போடும் வழக்கமே விடுதலை அலுவலகத்தில் இல்லாமல் இருந்தது.

மறுநாள், ஆசிரியர் குருசாமி அலுவலகம் வந்ததும் எங்களை யெல்லாம் அவசர அவசரமாக அழைத்தார்; ஒரு மகிழ்ச்சியான செய்தி என்ருர்,

என்ன என்று கேட்போம். மலர் போட, ஐயா ஒப்புக் கொண்டு விட்டார்' என்ருர். அதைக் கேட்டு எங்கள் எல்லோருக்கும் ஒரே மகிழ்ச்சி!

தொடர்ந்து அவர், மலர் போட அனுமதித்ததோடு,ஒரு நிபந்தனையும் விதித்திருக்கிருர் ஐயா' என்ருர்.

என்ன தெரியுமா அந்த நிபந்தனை? மலரில் எந்தவித ஆடம்பரமும் இருக்கக்கூடாது எளிய முறையில்தான் அமைய வேண்டும். விலை எட்டணுவுக்கு மேல் போகக் கூடாது. குறைந்தது ஐநூறு ரூபாயாவது இலாபம் கிடைக்க வேண்டும்,

நாங்கள் கணக்குப் போட்டுப் பார்த்தோம். எட்டணு விலையில், எத்தனை பக்கங்கள் போட்டால் ஐநூறு ரூபாய் மிச்சம் கிடைக்கும் என்று ஆராய்ந்தோம்.

கடைசியாக மலருக்கென விளம்பரம் சேகரித்தால் ஐயாவின் விருப்பத்துக்கேற்ப பணம் மிச்சப்படும் என்று முடிவு எடுத்தோம்.

ஆசிரியர் குருசாமியும் மற்றத் துணையாசிரியர்களும் முயன்று, ஏறக்குறைய இரண்டாயிரம் ரூபாய்க்கு மேலாகவே விளம்பரம் கிடைக்க வழிசெய்து விட்டோம்.

மலர் வேலையும் விறு விறு என்று நடந்தது. அவ்வப்போது மலரைப்பற்றி ஐயா அவர்கள் கேட்டறிந்து மன நிறைவு கொள்வார்கள்

குருசாமி, ஐயாவைவிடச் சிக்கனக்காரர். மலர் இப்படி இருக்க வேண்டும் அப்படி இருக்க வேண்டும் என்றெல்லாம் சொல்லுவார்; ஆனல் செலவு மட்டும் கூடாது என்பார். அவரே ஓர் ஓவியரைப் பிடித்து இலவசமாக ஓவியங்கள் வரையச் செய்து வாங்கிக் கொண்டு வந்து விட்டார். ஓவியர்தான் காசு வாங்காமல் படம் வரைந்து கொடுத்துவிட்டார்; 'பிளாக்கு' கூடவா இலவசமாகச் செய்து கொடுப்பார்கள்?

ஓரளவு — சிக்கனமாக பிளாக்குகள் செய்து மலரையும் அச்சிட்டு விட்டோம். 'அட்டைப் படமாவது இருவண்ணத்தில் இருக்கக் கூடாதா?' என்றேன்.

ஐயா கண்டிப்பாகச் சொல்லிவிட்டார்; வண்ணப் படங்களே கூடாது என்று. நாம் இரு வண்ண அட்டை போட்டால், அதிகச் செலவு செய்துவிட்டதாக ஐயா, கோபித்துக் கொள்வார் என்ருர் குருசாமி. இதற்கும் ஐயாவிடம் அனுமதி கேட்கச் சென்ருேம். அப்போதுஐயாசொன்னயோசனை என்ன தெரியுமா?

'இரண்டு கலரில்தானே அட்டைப் படம் வேணும்னு சொல்றீங்க. பேஷா போட்டுக்குங்க;வேண்டாம்னுசொல்லலே; வெள்ளை பேர்பர்லே இரண்டு கலர்லே அச்சுப் போடுவது வீண்தானே. வெள்ளைப் பேப்பருக்குப் பதிலா கலர் பேப்பர் வாங்கி, அதிலே ஒரு கலர்லே அச்சுப்போட்டா இரண்டு கலர் ஆயிடுமே!''

பெரியார் சொன்னதைக் கேட்டு நாங்கள் வாய்விட்டே சிரித்துவிட்டோம். கடைசியாக அவர் சொன்னபடியே தான் செய்தோம். மஞ்சள் நிறமுள்ள சாதாரண காகிதத்தை வாங்கி, அதிலே கறுப்பு நிறத்தில் படத்தை அச்சிட்டோம். இருவண்ண அட்டையாகிவிட்டது

மலர் இருவண்ண முகப்புடன் வெளிவருகிறது என்றே விளம்பரமும் செய்தோம். வாசகர்கள் வாங்கிப் பார்த்த பிறகுதான் உண்மையைப் புரிந்து கொண்டிருப்பார்கள்.

மலரைப் பார்த்ததும் பெரியாருக்கு அளவற்ற மகிழ்ச்சி! 'ரொம்ப நல்ல இருக்கு, ரொம்ப நல்லா போட்டிருக்கிறீங்க' என்று பாராட்டினர்.

அந்த மகிழ்ச்சியோடு மகிழ்ச்சியாக இன்னெரு வேண்டுகோளையும் பெரியாரிடத்திலே வைத்தோம். இந்த ஆண்டு பிறந்த நாள் விழாவை விடுதலை அலுவலகத்தில் கொண்டாட வேண்டும் என்று கேட்டோம்.

தாராளமாக வருகிறேன்; ஏற்பாடு பண்ணுங்கள்; ஆனல் அதற்கான செலவை நீங்களே தான்பார்த்துக்கொள்ளவேண்டும் என்ருர்.

அலுவலகத்தில் உள்ளவர்கள் அனைவரும் சேர்ந்து பணம் போட்டு விடுதலை அலுவலகத்தில் விழாக்கொண்டாடினேம். விழாவுக்குத் தந்தை பெரியார் அவர்கள், அன்னை மணியம்மையார் அவர்களுடன் முன்னதாகவே வந்து சேர்ந்தார்கள்.

கறுப்புச்சட்டையுடனேயே என்றும் காட்சியளிக்கும் பெரியார் அவர்கள், அன்று வெள்ளைச்சட்டையுடன்காட்சியளித்தார். பிறந்த நாளல்லவா?

அலுவலக நண்பர்கள்அனைவரும் பெரியார் அவர்களுடன் புகைப்படமெடுத்துக் கொண்டோம். (படத்தில் பெரியார் அவர்கள் வெள்ளைச்சட்டையுடன் இருப்பதைக் காணலாம்.)

விழா முடிந்ததும், ஐயா, அவர்கள் எங்களைப் பார்த்து 'நீங்களெல்லாம் வீட்டுக்கு வந்து போகவேண்டும்' என்று கூறிச்சென்ருர்கள். மீரான் சாகிப் தெருவில் உள்ள பெரியார் மாளிகைக்கு ஆசிரியர் குருசாமி உள்படபோய்ச்சேர்ந்தோம்.

அங்கே மாடி வாசலில் நின்றுகொண்டு ஐயா அவர்கள் எங்களையெல்லாம், திருமண வீட்டில் வரவேற்பதைப் போல 'வாங்க வாங்க' என்று வரவேற்ற காட்சியிருக்கிறதே, அது நாங்கள் பெற்ற பேறு என்றுதான் சொல்லவேண்டும்.

உள்ளே சென்ருேம்; அன்னை மணியம்மையார் அவர்கள் எங்களை வரவேற்று அமரச் சொன்னுர்கள். தமது கையாலேயே செய்த சிற்றுண்டியை இலை போட்டுப் பரிமாறினுர்கள்.

அன்னை நாகம்மையார் கையால் படைக்கப்பட்ட உணவை உண்ணுத அந்தக் காலத்து அரசியல் தலைவர்களே இல்லையென்று சொல்லுவார்கள். அந்தப் பேற்றினைப் பெருத நாங்கள் பெரியார், இல்லத்தில் அன்னை மணியம்மையார் படைத்த சிற்றுண்டியை உண்ணும் பேற்றினைப் பெற்றதை நினைத்துப் பெருமை கொண்டோம்.

நாட்டின் விடுதலைக்காகப் போராடிச் சிறை சென்று,

(3ம் பக்கம் பார்க்க)



இதுதான விடுதல அலுவலகத்தில் எடுத்த புகைப்படம

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக ஆசிரியர் மு.கருணநிதி அவர்களால் அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டி தெரு இராயபுரம், சென்னை-600013) அச்சிட்டு வெளியிடப்பட்டது நிர்வாக அலுவலகம அன்பகம்' 508 அண்ணசாலை தேனம் பேட்டை சென்னை–600018 தொலைபேசி 441009.

நம்நாடு முப்பெரும் விழா மலருக்கு எங்களது

நல்வாழ்த்துக்கள்

தினமும் காலையில் தினகரன் படியுங்கள்!

(சென்னை, மதுரை, கோவை நகரங்களில் அச்சாகி வெளி வருகிறது!)

மாநில, தேசிய, சர்வதேச செய்திகள்

கருத்தாழமிக்க தலையங்கம்!

சிந்தனையைத் தூண்டும் கருத்துப் படம்!

தரமிக்க சினிமாச் செய்திகள்

நிறைந்த மக்கள் பத்திரிகை

"தினகரன்"

தினகரன், 92-2 ஏ அண்ணா சாலை - சென்னை - 600018

ஊமையைப் பேசவைத்தவர்!

— கழிஞ்சூர் மு. கோதண்டன்



சாதி, சமயம், கடவுள், மதம் புராணம், இதிகாசம், வேதம், சாத்திரம், ஆண்டான் அடிமை உயர்ந்தவன், தாழ்ந்தவன் என்ற மூட நம்பிக்கை இருள் எங்கும் சூழ்ந்து திசை தெரியாமல் தமிழினம் அலைந்து திரிந்து கொண்டிருந்த நேரத்தில்தான் தன் மானச் சிங்கமாய், தமிழ் மக்களின் தலைவராய் அஞ்சா நெஞ்சம் படைத்த தந்தை பெரியார் அவர்கள் தோன்றினார்கள். ஆயிரமாயிரம் ஆண்டுகளாய் அடிமைப்பட்டு விழி மூடிச் செயல் மறந்து கிடந்த சமுதாயத்தைத் தட்டி எழுப்பினார். தமிழர் நலம் காக்கத் தம் வாழ் நாள் முழுவதும், காடு கழனி மேடு பள்ளம் நாடு நகரம், என்று பாராமல் ஓய்வில்லாமல் உழைத்தார். நாம் உன்னத வாழ்வு பெற ஒளியாக, திரியாகத் திகழ்ந்தார். கல்லடி சொல்லடி, எதிர்ப்பு, ஏளனம் எதையும் கண்டு அவர் அஞ்சவில்லை. அவர் பயணம் தடைப்பட்டதில்லை. பட்டம், பதவி சுகவாழ்வு எதையும் அவர் நாடியதில்லை. அனைவரும் அடிமைத்தளை அறுபட்டு பகுத்தறிவு பெற வேண்டும் என்ற உயரிய குறிக்கோளை முதன்மையாகக் கொண்டார், அதற்காகவே உழைத்தார்,

பேரறிஞர் அண்ணா அவர்கள், புகழ்மிக்க பல பதவிகளை வகித்தார். சட்டமன்ற உறுப்பினராக, தமிழக முதல்வராக இப்படிப் பல்வேறு பொறுப்புகளை ஏற்றுக் கொண்டபோது மகிழ்ச்சி அடைந்திருக்கிறாரா என்றால் இல்லை. உலகத்தில் ஞான ஒளி ஏற்றிவைத்த முதல் பகுத்தறிவுவாதி புத்தர்தான். இளவரசராக வாழ்ந்த நாட்களில் மகிழ்ச்சி அடையாமல் துறவியாய்த் திரிந்த நாட்களில், மக்களுக்குப் போதனை புரிந்த நாட்களில் பேரின்பம் அடைந்ததைப்போல் பேரறிஞர் அண்ணா பொறுப்புகளில் இருந்தபோது மகிழ்ச்சி அடையாமல் தந்தை பெரியாரோடு பணிபுரிந்த காலத்தைத் தம் வாழ்வில் கிடைத்த வசந்தமாக எண்ணிப் பெருமைப் பட்டார்.

“எனக்கென்று ஒரு வசந்த காலம் இருந்தது நீண்ட நாட்களுக்குப்பிறகு ஆண்டு பல பலவற்றுக்குப்பிறகு அந்த வசந்த காலத்தை நினைவிலே கொண்டு இன்றைய கவலை மிக்க நாட்களிலே எழ முடியாத புன்னகையை தருவித்துக் கொள்ளுகிறேன். பெரியாருக்கு அந்த வசந்த காலமும் தெரியும். இன்று பொறுப் பேற்றுக்கொண்டு இருப்பதால் எழுந்துள்ள கவலையும் நன்கு புரியும் வசந்த காலம் என்றேனே அந்த நாட்களில் நான் கல்லூரியிலிருந்து வெளியேறி அவருடன் கடும் பயணம் புரிந்து சுற்றிவந்த நிலைஅந்தக் கடுமையான பயணத்தில் காடு மேடுகளில் நான் அவருடன் தொண்டாற்றியபோது வண்ண வண்ணப் பூக்கள் குலுங்கி மகிழ்வளித்ததைக் கண்டேன். நறுமணம் எங்கும் பரவிடக் கண்டேன். அப்போது கலவரம் எழாமல் ஒரு கூட்டத்தை ஒழுங்காக நடத்தி முடித்துவிட்டால் பெரிய வெற்றியாகும். அந்தக் காலத்தில் அப்படிப்பட்ட ஒரு நிலை, நான் கண்டதும், கொண்டதும் அந்த ஒரே தலைவரைத் தான்” என்று அண்ணா குறிப்பிட்டார்.

பெரியார் அவர்களுடைய உழைப்பு, தியாகம் இடைவிடாத முயற்சி நம்முடைய சமுதாயத்திற்கு எவ்வளவு அருமருந்தாகப் பயன்பட்டது என்பதைப்பேரறிஞர் அண்ணா அவர்களின் கட்டுரை நமக்குச் சிறப்பாக விளக்குகிறது. நம்முடைய பெருமைக்கும், புகழுக்கும் தந்தை பெரியாருடைய உழைப்பும், தியாகமும் உரமாக அமைந்திருக்கின்றன. தாள்பணிந்து கிடந்த இனத்தைத் தலை நிமிர வைத்தார். கோழைகளை வீரராக்கினார். குருடர்கள் விழி பெற்றனர். ஊமைகள் பேசினர். உரிமை முழக்கம் எங்கும் பரவியது! உலுத்தர்கள், ஊரை ஏய்ப்பவர்கள் ஓடி மறைந்தனர். தந்தை பெரியார் அவர்கள் தமது இறுதி நாள்வரை வீர பயணத்தை மேற்கொண்டு உழைத்ததைப்போல் அகிலத்தில் எந்தச் சீர்திருத்தவாதியும் உழைத்ததில்லை. உழைப்புக்கும் உறுதிக்கும்பெரியாருக்கு நிகர் பெரியாரே எந்த நிலையிலும் கொள்கையில் நழுவாமல், வழுவாமல், நெளியாமல் உறுதியோடு நின்றவர். பதவிக்கும் சுகத்திற்கும் பட்டத்திற்கும் ஆசைப்பட்டு இனத்தை, மொழியை நாட்டைக் காட்டிக் கொடுக்கும் கயவர்கள், துரோகிகள் நிறைந்த மண்ணில் வைரமாய், தங்கமாய், கொள்கைக் குன்றமாய் ஒளி வீசி நிற்கின்றார். அவருடைய கருத்துக்கள், எண்ணங்கள், சிந்தனைகள் கால வெள்ளத்தால் அடித்துச் செல்லப்படாமல் காலத்தை வென்று நிற்கும்! பெரியார் அவர்களை இந்தச் சமுதாயம் நன்றியோடு நினைவு கூர்ந்து நிற்கின்றது!

எம்மான் புகழ் என்றும் நிலவுக
வெல்க அவர் கொள்கை! !!



பகுத்தறிவுத் தந்தை பெரியார்
★அவர்களின் நூற்றாண்டுவிழா★
பேரறிஞர் அண்ணா அவர்களின்
★ 70-வது பிறந்தநாள் விழா ★

கொண்டாடும் தமிழ் மக்கள் அனைவருக்கும்
எமது மனமார்ந்த நல்வாழ்த்துக்கள்!

தொலைபேசிஎண் கடை: 33213 இல்லம் 31922
தரம்நாடுவோர் தவறாமல் நாடுவது
தமிழக எண்ணெய்ப் பலகாரம்
தயாரிப்பு-விற்பனை நிலையம்
92. திருப்பரங்குன்றம் சாலை. மதுரை-11

தனிச்சிறப்பு: சிலேபி, தெக்கத்திமிட்டாய், அதிரசம், இனிப்புசேவு, பக்கவடா, மிக்சர், முறுக்கு, கடலை நவதானியம் மற்றும் இனிப்புகாரவகைகள்
உரிமையாளர்: பே. தேவசகாயம்
கிளைகள்: 261. மேலமாசி வீதி, 70. சுவாமிசன்னதி
12. அழகர்கோவில் சாலை, 72-C டவுன்ஹால்ரோடு, மதுரை.

அண்ணாவின் நிழலிலமர்ந்து புன்னகை பொழியும் தானைத்தலைவரும் பேராசிரியரும்...

★★★★★★★★★★★★★★★★★★★★★★

உழைப்போம்! வெல்வோம்!

கவியரசர் பொன்னிவளவன்

நீலநிற வானத்தில் நிலவைப் போல
நெஞ்சிற்கள் மின்னுபவர் அறிஞர் அண்ணா!
ஆலமரம் போல்தழைக்கும் கழகத் திற்கே
அவர்தானே மூலவிதை! இந்த நாட்டில்
ஓலமிட்டுக் கொண்டிருந்த வைதீ கத்தை
ஓடவிட்ட பெரியாரின் மூத்த சீடர்!
காலமெல்லாம் அவர் நினைவே நமது நெஞ்சக்
கலக்கத்தைப் போக்குகின்ற மாமருந்து!

முல்லைப்பூப் புன்னகையைத் தோற்கடிக்கும்
முகச்சிரிப்பு படைந்தவராம் அறிஞர் அண்ணா
தொல்லைகளை விரட்டுகின்ற அறிவைத் தந்தார்!
தொண்டாற்றும் வழிவகைகள் கற்றுத்தந்தார்
எல்லையற்ற பேரறிவால் எழுத்தால் பேச்சால்
இணையற்ற எழுச்சியினை நமக்குத் தந்தார்
இல்லைஅவர் எனும்குறையை நீக்கு தற்கு
ஈடற்ற கலைஞரையும் நமக்குத் தந்தார்!

சோர்வின்றிச் சுறுசுறுப்பாய் நாம்உழைத்தால்
சூழ்ச்சிமதி யாளர்களின் ஆட்சி நீங்கும்!
சீர்பெற்றுத் தமிழ்வாழும்; இந்தி ஓடும்!
செந்தமிழர் இனமானம் நிலைக்கும்! சிந்தும்
வேர்வையொன்றும் வீணாகிப் போய்விடாது!
வெற்றிவரும்! கலைஞருக்குத் துணையாய் நின்று
யாரெந்தத் துயர்தரினும் கவலையின்றி
அண்ணாவை நினைத்தபடி உழைப்போம்!
வெல்வோம்!

பட்டிமன்றங்களில்...

(பேராசிரியர் கட்டுரை தொடர்ச்சி)

பொறுமை இழந்ததில்லை எந்நாளும்.

;இனிய உளவாக இன்னாதகூறல்-
கனியிருப்பக்.
காய் கவர்ந்தற்று 'என்னும் குறள் கருத்தை உள்ளங்கொண்டு பயன் கண்டவர் அண்ணா.

கேட்போர் உணர்ச்சி வயப்படுமாறு பேசிடினும். தாம் அந்த உணர்ச்சிக்கு அடிமைப்பட்டு விடாது பொங்கும் உணர்ச்சிக்கு அணைகட்டி, ஒழுங்குபடுத்தி மக்களை மெய்மறக்கச் செய்வது அவரது ஆற்றல்.

தமது நீண்ட உரையைக் கேட்போர் கருத்துக்களை நினைவிற் கொள்ள முடியாமல் சோர்வடைந்து-விடாமல் இருக்க இடையிடையே நகைச்சுவை யூட்டியும், கருத்தினை விளக்கும் சிறுகதைகளை உவமையாகக் கூறியும் பேசுவது அவரது முறை.

அண்ணாவின் பேச்சினிலே அன்பு குழையும்,
பரிவு பரிமளிக்கும்; தோழமையும் நட்பும் மிளிரும் :

மக்கள் வாழ்க்கையிலே உள்ள துன்பத்தையும் தொல்லையையும்—சமுதாய நிலையையும் ஒரு குடும்பக் காட்சியாக அவர் சித்தரிக்குமிடத்துப்பற்றும் பாசமும் கேட்பவர் உள்ளத்திலெல்லாம் பொங்கச் செய்யும்.

திருக்குற்றாலத்து அருவியிலே
திளைக்கும் மாந்தரோ!
பொதிகைமலை விட்டெழுந்த
தென்றலிலே தோயும் மாந்தரோ!
கோடையிலே இளைப்பாற்றிக்கொள்ளும்
குளிர் தருவில் குவிந்த மாந்தரோ.
பனிப்பருவத்தில் காலை இளம்பரிதியில்
இதம் காணும் மாந்தரோ!

இவர் தாம் என்றெண்ணுமாறு மக்கள் அண்ணாவின் பேச்சினிலே தோய்ந்தனர் என்பது வரலாறு.

அவரது உரை கேட்ட மக்கள் தேனைச் சுவைத்த வண்டு என மயங்கினர் அவரது முகமே மலராகவும், ஒவ்வொரு சொல்லும் தேன் துளியாகவும் அதனை ஆர்வத்தோடு சுவைக்கும் செவிகளே மக்களின் நாவாகவும் இனித்தன எனலாம்,

தம்மைக் கடிந்து சுடுசொல் வீசியவரையும் இழித்தும் ஏசியவரையுங்கூட அண்ணா அவர்கள் அதேமுறையில் கண்டிப்பதில்லை. நாய் நம்மைக் கடித்து விட்டது எனில் நாமும் அதைக் கடிக்க முடியுமா?' என்பது கூட அல்ல, கடிக்கலாமா? என்பதும் கடித்தால் நாம் எப்படி மனிதனாக இருக்க முடியும்? என்பதுமே அண்ணாவின் கருத்து.

மாற்றார்தம் கண்டனத்தை ஒரு நகைச்சுவைப் பொருள் ஆக்கியோ ஒருசிறுகதை விளக்கத்தால் மழுங்கச் செய்தோ. "மறப்போம்! மன்னிப்போம்!" என்று பெருந்தன்மையைப் புலப்படுத்தியோ, 'இதனால் என்ன கெட்டுவிடும்? அவர்கள் திட்டுவதெல்லாம் நமது இலட்சியப் பயிர்வளர எருவாகத்தான் ஆகும்" என்று அமைதிப் படுத்தியோ, "எதையும் தாங்கும் இதயம் வேண்டும்—இலட்சிய வாதிக்கு! அதற்கு இவையெல்லாம் ஒரு பயிற்சி"—என்று விளக்கந்தந்தோ—பதில் அளிப்பதே அண்ணாவின் தனி முறையாகும்

சுடுசொற்களால் திருப்பித் தாக்குதல் பயனற்ற வீண் வேலை என்பதும், தாங்கிக் கொள்ளுதலே தமது கடமை என்பதும் அண்ணாவின் நெறி.

"இன்னா செய்தார்க்கும் இனியவே செய்யாக்கால் என்ன பயத்ததோ சால்பு' என்பதை உணர்ந்தவர் அண்ணா என்பதை அவரது உரை காட்டும்.

அண்ணா அவர்களின் மேடைப் பேச்சும், கல்லூரிச் சொற்பொழிவுகளும், சட்டமன்ற உரைகளும்—மாநிலங்கள் அவைப் பேச்சுக்களும் தனிச் சிறப்புடையனவாக எல்லோரது பாராட்டுதலையும் பெற்றதற்குக் காரணம், அவரது துவக்ககாலப் பட்டிமன்றப் பேச்சுக்களே எனலாம்.

அண்ணா அவர்களின் பட்டி மன்றப் பேச்சுக்களே பட்டிமன்றப் பேச்சிற்கே ஒரு தலையான இலக்கணமாய் அமைந்தன எனலாம்

ஆம்! அன்பு ததும்ப, ஆர்வம் பொங்க, இலட்சியம் தழைக்க, கொள்கைத்தெளிவு சிறக்க, கருத்தின் திட்பமும் நுட்பமும் விளங்க, தோழமை உணர்வோடு, அவையின் வகையும் திறமும் அறிந்து—பெரும்பாலோருக்கும் பயன்படக் கூடியவற்றையே — தேர்ந்த சொல்லாட்சியுடன் பேசும் பேச்சுக்கு அண்ணாவே வழிகாட்டி.

அப்படிப்பட்ட 'அண்ணா' இன்றுபட்டிமன்றங்களில் விவாதப் பொருள் ஆகிறார்.

அண்ணாவின் கலைப்பணி உயர்ந்ததா? அரசியல் தொண்டு உயர்ந்ததா? எனவும், அண்ணாவின் சமுதாயக் கொள்கை உயர்ந்ததா? அரசியல் கொள்கை உயர்ந்ததா?எனவும், அண்ணாவின்மேடைப் பேச்சு வல்லமை மிக்கதா? தீட்டிய எழுத்து வல்லமை மிக்கதா எனவும் அண்ணாவின் பெரும்புகழுக்குக் காரணம் அவரது பேரறிவா? அன்றி அவரது தியாகமா? எனவும் இன்று பட்டிமன்றங்களிலே விவாதிக்கப்படுகின்றன

அண்ணா அவர்களின் அறிவு பரந்துபட்டது; தெளிவு பளிங்கு போன்றது. சிந்தனை ஆழமானது கற்பனை — வானளாவியது. தமிழ்மொழிப் புலமையும் ஆங்கிலத் தேர்ச்சியும் ஒப்பற்றது. அதை அவர்பயன் படுத்திய வகையும்பல. அனைத்தும் இந்த நாட்டு மக்களுக்காக — தமிழ்ச் சமுதாயத்திற்காக. ஆம்—அப்படிப்பட்ட அண்ணாவின் அருமை பெருமைகளைப் புரிந்து கொள்ள—மட்டிமன்றம் உள்ள காலமெல்லாம்—அதில் இடம்பெறும் ஒரு பொருளாக, கருத்துக் கருவூலமாக—தத்துவமாக அண்ணா விளங்குவார்! வாழ்க அண்ணா! வளர்க அண்ணாவின் நெறி!!

சிங்கத்தின் கடைசி முழக்கம்!

புலவர் கரந்தை கணேசன்

"நான் சொல்கிறேன் என்று என்னைக் கேலி செய்யாதீர்கள். நாளைக்குச்சாகப்போகிறாய், துணிந்து வந்திருப்பாய் என்று நினைத்துக் கொள்ளாதீர்கள். இது நான் தான் செய்ய வேண்டுமென்பதல்ல நீங்கள் செய்யவேண்டியதைத் தான்நான்செய்துகொண்டிருக்கிறேன் .''

19—12—73 புதன் இரவு 7 மணிக்குச் சிந்தனையாளர் கழகத்தினர் நடத்திய சென்னை தியாகராய நகர் பேருந்து நிலையம் அருகில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் பகுத்தறிவுத் தந்தை பெரியார் அவர்கள் முழங்கிய இறுதி முழக்கத்தில் ஒலித்த பேரொலியின் சிதறல்தான் மேலேயுள்ள வரிகள் என்றாலும்; அவ்வரிகளே உண்மை வரிகளாக அமைந்துவிட்டதை எண்ணும் பொழுதுதான் தன் சாவைப்பற்றித் தானே தெரிந்து வைத்திருந்த பெருந்தகையின் நினைவுகளை எண்ணவேண்டியவர்களாக இருக்கின்றோம்.

அறுபது ஆண்டுகளுக்கு மேலாக ஓயாது உழைத்து தமிழகத்தை உலுக்கி வந்த அந்தச் சிங்கம் தன் கடைசி முழக்கத்தில் உண்மையை வெளியிடுகிறது என்பது அன்று யாரும் அறியாதது. பெரியார் தன் முதல் முழக்கத்தை எங்கே தொடங்கினார்? நமக்குத் தெரியாது. தெரிந்தவர்கள், பெரியாரே சொல்ல அறிந்தவர்கள் சொன்னால் மிகவும் நலமாக இருக்கும்.

புத்தன் தன் முதல் பேச்சைத் தொடங்கிய இடம் 'சாரநாத்' என்பார்கள். அச் சாரநாத் சரித்திர புருடர்களால் வழி வழியாகச் சொல்லப்பட்டு வருகின்ற ஒன்று. ஆனால், அப்புத்தனே தனது கடைசிச் சொற்பெருக்கை எங்கே ஆற்றினான்? தெரியாத ஒன்றுதான். எனவே, வரலாற்று ஏடுகளில் ஒன்று தெரிந்தால் மற்றொன்று தெரியாமற் போவதும் தவிர்க்க முடியாத ஒன்றுதான்!

இராமன் இங்கே நின்றான். இங்கே ஈசனைக் கும்பிட்டான்; சீதை இங்கே மஞ்சள் அறைத்தாள் என்பதுபோல், புராணிகர்களுக்கு அவ்விடங்கள் எவ்வளவு முக்கியமான புண்ணிய திருத்தலங்களோ அதைப் போல் பகுத்தறிவாளர்களுக்குப் பெரியார், பேரறிஞர் போன்றவர்கள் இங்கே தான் தங்கள் கன்னிப் பேச்சைத் தொடங்கினார்கள், இங்கே தான் சரித்திரப் புகழ்மிக்க இன்ன சொற்பொழிவுகளை நிகழ்த்தினார்கள், இங்கேதான் தங்கள் இறுதி முழக்கத்தைச் செய்தார்கள் என்று காட்டுவதும். அதனை அனைவரும் அறியுமாறு அடிக்கல் போட்டுக் காட்டுவதும் மிகவும் அவசியமானதும், அவசரமானதும் கூட. இல்லாவிட்டால் வருங்காலச் சமுதாயம் அவர்களைக் கண்காட்சிகளிலே வருகின்ற பொம்மைகளைப் பார்ப்பது போல பார்க்கின்ற நிலை ஏற்பட்டுவிடும். தற்பொழுது கூட பல்கலைக் கழக மாணவர்கள் பலருக்கு பெரியார் அறிமுகமாகாத மனிதராகத் தெரிகிறார். இஃது வெறும் வார்த்தை வேடிக்கையல்ல, வடிவம் பெற்று நிற்கும் உண்மை. எனவே, கல்லூரிகளில் பெரியார் பற்றிய கருத்துரைகளும், ஆய்வுரைகளும். மிகவும் தேவையாகிறது, அவருடைய வாரிசுகள்நாங்கள்என்றுசொல்லிக் கொள்பவர்கள் நாடாள்கின்ற இன்றைய நாட்களிலே கூட அவரைப்பற்றிப் பேசுவதும், எண்ணுவதும். உண்மைகளை ஊரறிய உரைப்பதும் தவறுகி விடுமோ என்கிற அச்ச உணர்ச்சியிலேயே வாழ்ந்திடக் காண்கிறோம். அப்படி வாழ்வதைவிடப்பெரியாரின் வாரிசுகள் என்று சொல்வதை விட்டு விடுவது; அதைவிட நல்லது.



19-12-73ல் வேனிலிருந்தபடி தந்தை பெரியார் முழங்கிய காட்சி

பெரியாரின் கடைசி முழக்கத்திற்கு நாம் வருவோம். எதிர் பாராத விதமான சென்னைதியாகராயநகரில்,திடீரென்று, ஒருநாள் திடீர்ப் பிள்ளையார் முளைத்தார். அப் பிள்ளையார் முளைத்த சூழ்நிலையை நன்கு அறிந்தவர்கள் அதனை அன்றே என்றும் செய்யும் அதே ஆட்களின் சூழ்ச்சி என்பதனை உணர்ந்தனர். அதனைச் செய்த ஆளையும் அடையாளம் கண்டுகொண்டனர் ஆனால், மக்கள்—? வெள்ளமெனத் திரள ஆரம்பித்தனர். எப்பொழுது பார்த்தாலும் ஒரே கூட்டம். அற்புத மகிமைப் பேச்சு, ஆரவாரம், எல்லாம்எப்பொழுதும்போல். அதேபோது, அங்குள்ள பகுத்தறிவு வாதிகட்கு அஃது ஒரு பேரிடி. இக் கூத்தை மக்களிடம் எப்படி விளக்குவது? இதனை மேலும் வளரவிடாமல் தடுப்பது எப்படி?

அப்பொழுதுதான்; சிந்தனையாளர் கழகத்தின் தலைவன் என்ற முறையில் நானும் எனது நண்பர்களான செயலாளர் ஊ. து. மணவாளன். வித்யா போன்றவர்களும் திரு வீரமணி அவர்கள் மூலமாகப் பெரியார் அவர்களை அணுகினோம். பெரியார் உடனே அவ்விடத்திலேயே தான் வந்து பேசுவதாக அறிவித்தார்கள். கூட்ட ஏற்பாடுகள் எல்லாம் ஆயிற்று. இருந்தாலும் தான் பேசுவதற்குரிய 'ரேட்டை' மட்டும் விட்டுக் கொடுக்க மறுத்து விட்டார்கள். அதற்குள் அன்றைய தி. மு. க. அரசு அப்பிள்ளையாரை வைத்தவர்களையும் கண்டு, அவர்களைக்கொண்டே 'கொடுத்தவனே எடுத்துக் கொண்டாண்டி,என்ற பாடல் வரிகட்கு ஏற்ப ஏற்பாடுகளைச் செய்துகொண்டிருந்தது தெரிய வந்தது. பெரியாரும் தன் உடல் நிலையில், எப்பொழுதும்போல் சிறுநீர்ப்பைமாற்றம் செய்ய வேண்டிய காலமும் வந்தது. அரசே செய்யட்டும் இல்லாவிடில் நாம் கூட்டம் போட்டுப் பேசுவோம் எனக் கூட்டத்தை ஒத்தி வைத்து விட்டு வேலூர் சென்று விட்டார்கள். பின்னர் பிள்ளையார் எடுக்கப்பட்டார்.

என்றாலும், என் போன்றவர்கள் பெரியார் பெயர் சொல்லி வசூல் செய்த பணத்தை வைத்துக் கொண்டு என்ன செய்வதென்று தெரியாமல் தவித்துக்கொண்டிருந்தோம். எப்படியேனும் பெரியாரைத் திரும்பவும் அழைத்து வந்து பேசச் செய்ய வேண்டும் என்ற முனைப்பில் திரு வீரமணி அவர்களைப் பார்க்கும் பொழுதெல்லாம் 'தேதி—தேதி' என்போம்.

ஒருநாள் திடீரென்று திரு வீரமணி அவர்கள் அழைத்தார்கள். சென்றோம். "பெரியார் அவர்கள் சென்னையிலே மூன்று கூட்டம் நடத்தவேண்டும் என்கிறார்கள். சமுதாய இழிவு ஒழிப்புச் சம்பந்தமாகப் போராட்டம் நடத்த இருப்பதால். அதற்கான கொள்கை விளக்கக் கூட்டமாக தியாகராய நகரில் ஒன்றும். மயிலாப்பூரில் மற்றொன்றும். வடசென்னையில் மற்றொன்றும் நடத்த வேண்டும் என்கிறார்கள் .'' தேதி—தேதி—என்றீர்களே நடத்துகிறீர்களா? என்றார்.

பழம் நழுவிப் பாலில் விழுந்து அதுவும் நழுவிப் நாவில் விழுந்தது போல் ஆயிற்று; அம்மொழிகள். பின்னர் பெரியாரைக் கண்டு நேரில் பேசினோம். மேடையெல்லாம் போட வேண்டாம். நான் வேனில் (வண்டியில்) இருந்தபடியே பேசுவேன் அதுவே போதும்என்று கூறிவிட்டார்கள்.

இவ்வாறான முறையில் அமைந்ததே அவரது கடைசிப் பேருரையாகும். அப் பேருரையில். பகுத்தறிவுச் சிங்கத்தின் அன்றைய முழக்கத்தில். "நாளைக்குச் சாகப் போகிறாய் துணிந்து வந்திருப்பாய்'' என்றவர்கள் தன்னை அறிந்து கூறிய உண்மை வரிகள் என்று தெரியவில்லை. இன்று தெரிய வருகிறது; சிந்தனையாளர்களுக்கே எட்டாத சிந்தனை பெரியாரின் சிந்தனை என்பதனை எண்ணும்போது அப்பெரும் சிந்தனையாளனை எண்ணி வியக்காமல் இருக்க முடியவில்லை. 'துணிந்து வந்திருப்பாய்' தனியாகவா அன்று சொன்னார்? தனியாகவா அன்று மட்டும் துணிந்து வந்தார்? என்றோ! எத்தனை எத்தனை ஆண்டுகட்கு முன்பே துணிந்தவர் அவர். ஆனால் நாளைக்குச் சாகப் போகிறாய், துணிந்து வந்திருப்பாய் என்ற வரிகளையும் இணைத்து நாம் சிந்தித்திருந்தால், அன்று அடிவயிறு, வலிக்க இருமிய இருமலைப் பற்றிச் சிந்தித்திருந்தால், இருமி. 'ஐயோ. அம்மா' என்று வலி தாளாமல் கத்திய குரலைப் பற்றிச் சிந்தித்திருந்தால் ஒரு வேளை அக்கூட்டமே அவரது கடைசிக் கூட்டம் அதுவே அவரது கடைசி முழக்கம் என்பதை அறிந்திருக்கலாமோ என்னவோ!

★ ★ ★

தந்தை பெரியாரின் கொள்கையைப் பின்பற்றி
அறிஞர் அண்ணாவின் வழிநின்று
நம் தமிழினத் தானைத் தலைவராம் டாக்டர் கலைஞர்
அவர்களின் கரத்தை வலுப்படுத்துவோம் என்று
இந்நாளில் உறுதிகொள்வோம்.

★★★ ★★★

இங்ஙனம்
டி. சி. திம்மராய (கவுண்டர்)
Ex. M. L. A., அவைத்தலைவர்
என். கே. இராசா
செயலாளர்
துரை சண்முகம்
பொருளாளர்
டி. எல். சண்முகம்
துணைச் செயலாளர்
ஒன்றிய தி. மு. கழகம்
நாட்றப்பள்ளி ஒன்றியம் (வ. ஆ.)
—சி. கணேசன்

ஓங்குக அண்ணா புகழ்' வாழ்க கலைஞர் !!
நற்சுவைக்கு நறுமணத்திற்கு
அருந்துங்கள்
கண்ணன் காபி
கண்ணன் காபி ஒர்க்ஸ்
(1 பி, செட்டித்தெரு, திருப்பத்தூர். வ ஆ.)
—சி. கணேசன்

முப்பதும் எழுபதும் நூறு !
முப்பெரும் விழா நமது பேறு!

கலைமாமணி கவிஞர் கு.மா.பாலசுப்பிரமணியம் எம்.எல்.சி

அறிஞராம் அண்ணா பிறந்தாண்டு எழுபது! — அவர்
அமைத்திட்ட கழகம் பிறந்தாண்டு முப்பது!
பெரியாரின் புதுயுகம் பிறந்தாண்டு நூறு! — முப்
பெருவிழா காண்பதே நாம் பெற்றபேறு
பெரியாரெனும் சிங்கம் பிறந்திராவிட்டால் — நம்
பேரறிஞர் அண்ணாவின் பெருமையும் இல்லை!
முறையான முன்னேற்றக் கழக மில்லாமல் — நம்
முத்தமிழை வாழ்விக்கும் கலைஞரும் இல்லை
பெரியாரின், அண்ணாவின், கழகத்தின், கொடியின் — நற்
பெருமை குலைத்திடும் பகைவர்க்கு முன்னால் —
சரியாமல் எதிர்நின்று சமர்செய்யும் தலைவர் — புதுச்
சரித்திரம் படைத்திடும் தன்மானக் கலைஞர்!

துணிவான கலைஞருக்குத் துணை நில்லாவிட்டால் — நம்
துரோகியர் வலைவீச்சில் பலியாகி விடுவோம்!
இனியேனும் கவர்ச்சிக்கே இரையாகிடாமல் — நம்
இனமென்ற உணர்வுடன் இணைசேர்ந்து நிற்போம்!
வசதியை நாடுபவர் வழிமாறிச் செல்வார்! — பயம்
வழக்காலே அஞ்சுபவர் இடம்மாறிக் கொள்வார்!
கழகத்தைக் காப்பவரே கண்ணியம் காப்பார் — எதிர்
காலத்தில் கறையற்ற புகழ்வாழ்வு சேர்ப்பார்
எப்போதும் தமிழினம் என்பதே வேறு — நம்
இடையிலே அன்னியர் நுழைவதே ஊறு!
முப்பதும் எழுபதும் முழுமையாய் நூறு! — இந்த
முப்பெருந் திருவிழா தமிழர் வரலாறு!

அண்ணாவால் மணம்பெற்ற....

12-ம் பக்கத் தொடர்ச்சி)

இருந்த இடமே தெரியவில்லை.

அண்ணாவின் கலை உலக பிரவேசத்திற்குப்பின் கலைஞரின் கை வண்ணங்கள் பல திரையில் பளிச்சிட்டன. தொடர்ந்து நமது கழக துணைப் பொதுச்செயலாளரும் சில திரைப்படங்களுக்கு கதை வசனமெழுதினர்.

சர்வாதிகாரிஎனும் திரைப்படம் திரு ஆசைத்தம்பி எம்பி அவர்களின் கைவண்ணத்தால் வெற்றிப்படமாக மாறியது

மற்றும் சில கழக முன்னணியினரும் கொஞ்சும் தமிழை தேனுக்கி திரையில் தந்தனர்.

கலைஉலகில் சுயமரியாதை இயக்கக்கருத்துக்களை துணிந்து புகுத்தியவர் — பேசி நடித்தவர் கலைவாணராவார்.

அவரது 'பைத்தியக்காரன் நாடகமும் திரைப்படமும் மறுமலர்ச்சி படைப்பாகும் வைதிகபுரியினருக்கு அது கசப்பானதாக இருந்தது. அந்தப் படத்தில் சுயமரியாதைத் திருமண சிறப்பினை கலைவாணர் விரித்துக்கூறுமிடத்தில் 'தந்தை பெரியார் தளபதி அண்ணா, என்று பெயரை உச்சரிக்கிறார்.

இதைக் கேட்க — தாங்க மனமில்லாத அக்கால தணிக்கைக் குழுவினர் அந்த இடக்தில் கத்திரிக்கோலை பிரயோகித்து விட்டனர்.

அண்ணாவோடு நெருங்கிப் பழகி அண்ணாவின் குணத்தைப் புரிந்துகொண்ட நடிகர்கள் உண்டென்றால் ஒருவர் கலைவாணர் மற்றொருவர் நடிப்பிசைப் புலவர் கே ஆர். ஆர். அவர்கள்.

'கழகத்திற்காக அதைச் செய்தேன் — இதைச் செய்தேன்''

வாரி வாரி கொடுத்து என் கையே சிவந்து விட்டது', என வாய்ச் சவடால் அடிப் போரெல்லாம் நடிப்பிசைப் புலவர் கழகத்திற்காகப் பட்ட பாட்டில் பத்தில் ஒரு பங்கு கூடப் பட்டிருக்க மாட்டார்கள்.

காலத்தால் நாட்டின் மக்களிடேயே கழகத்தின் மதிப்பு நாளுக்கு நாள் உயர்ந்து கொண்டேயிருந்தது. மக்களெல்லாம் கழகத்தின் பக்கந் திரும்பிடும் வேளையில் சில நடிகர்கள் கழகத்தில் சேர ஆர்வம் காட்டி அண்ணா முன் வந்து நின்றார்கள். பாசமிகுத் தலைவர் யாரையும் புறக்கணிக்காமல் கழகத்தில்இணைத்துக்கொண்டார்.

ஒரு நடிகர் லால்குடி மாநாட்டில் பேசும்போது குறிப்பிட்டார் 'அண்ணா ஆணையிட்டால் எனக்கிருக்கும் பட ஒப்பந்தங்களை எல்லாம் கூட கிழித்தெறிந்து விட்டு போராட்டத்தில் குதிப்பேன்'' இப்படியொரு வசனம் பேசினார் ஒரு நடிகர். மற்றொரு நடிகர் பிரிதோரிடத்தில் 'அண்ணா ஆணையிட்டால் கனக விசயர் தலைகளில் சேரன் செங்குட்டுவன் கல்லேற்றி வந்ததுபோல் நேரு தலையில் கல்லேற்றிக்கொண்டு வருவேன்'' இப்படிப்பட்ட பிரமைப் பேச்சை பேசினார்.

மற்றொரு நடிகரோ உத்திர விடுங்கள் அண்ணா, பொன் வேண்டுமா? பொருள் வேண்டுமா? எத்தனை லட்சமானாலும் நான் தருகிறேன்! எத்தனைக் கார் வேண்டுமானாலும் தங்கள் தேர்தல் பணிக்காகத் தருகிறேன்'' இப்படி ஆசை வார்த்தை கூறினார்.

இவர்கள் வீர வசனங்களையெல்லாம் கேட்டு அண்ணா ஏமாந்துவிடவில்லை. என்றாலும் இவர்களை வெளியில் விடக்கூடாதென்றும் எண்ணினார்.

"உன் லட்சங்கள் வேண்டாம். உன் மேக்கப் முகத்தை மேடையிலே காட்டு. ஒரு சமயம் எதிரிக்குப் போகும் ஓட்டாவது நமக்கு விழலாம்'' என்ற எண்ணத்தோடுதானே இருந்திருக்க வேண்டும்?

யார் யாரை எங்கெங்கு வைத்திருக்க வேண்டுமோ அவரவர்களை அங்கெங்கே வைத்திருந்தார் அண்ணா

அண்ணா சிறையிலிருந்த சமயம் கழக நடிகரொருவர் கழகம் தந்திருந்தமேலவை உறுப்பினர் பதவியை ராஜினாமாச் செய்துவிட்டார். சிறையில் சேதியைத் தெரிந்து கொண்ட அண்ணா அவர்கள் துடித்துப் போனா.

அவர் பதவியை விட்டு கவிகிவிட்டாரே என்பதற்காக அல்ல அந்த ஒரு இடம் மாற்றுக்கட்சிக்காரர்களுக்குப் போய்விட்டதே என்பதற்காக

எம். எல் ஏ எம். பி, எம் எல். சி போன்ற பதவிகளை அண்ணா தந்திருந்தார் கலை உலக நட்சத்திரங்களுக்கு அவர் வழி நடத்திச் செல்லும் தானைத் தலைவர் கலைஞர்அவர்கள் தன்னாட்சியில் கழக நிர்வாகப் பொறுப்பையும், எம் எல் ஏ எம் எல் சி எம்பி போன்ற பதவிகளையும் கலை உலக நண்பர்களுக்கு அளித்திருந்தார் கழக ஆட்சியைக் கலைத்து, குடியரசுத் தலைவர் ஆட்சி வரும் நாளில் சிலமணி நேரங்களுக்கு முன்னால்கூட கழக நடிகர் ஒருவருக்கு இயல் இசை நாடக மன்றத் தலைவர் பொறுப்பினைத்தந்து அண்ணாவின் இதயத்தைப் பெற்று விட்டார் கலைஞர் அவர்கள்.

★★★★★★!★★★★!★★★

பெரியாரிசமா? மார்க்சிசமா?

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

அப்போது அவர் அளித்த பதில்:

'கடவுள் இருந்து நான் இல்லை என்று சொன்னால் அவர் இல்லாமல் போய்விட மாட்டார் கடவுள் இல்லா திருந்து நான் இருக்கிறார் என்று சொன்னால் அவா இருந்திடவும் மாட்டார்'' என்பதே எவ்வளவு சாமர்த்தியமாக நழுவினார் பார்த்தீர்களா)

ஆக —

இந்தியக் கம்யூனிஸ்க்டுக மீது பெரியார் அவ நம்பிகை கொண்டதில் பொருள் உண்டு 'மதம் மக்களுக்கு அபினி' என்றுரைத்த மார்க்சின் கூற்றை மறந்தவர்களால் இந்தியாவில் மார்க்சிசத்தை வெற்றி பெறச் செய்ய இயலாது என்பதையும் அவர் உணர்ந்திருந்தார்.

சமுதாயச் சழக்குகளுக்கு பெரியார் கொடுத்தது 'அதிர்ச்சி வைத்தியம் !'

அறிஞர் அண்ணாவோ —

பிணிகளுக்கானமருந்தைத் தேனில் குழைத்துத் தந்தார்.

மார்க்சின் கனவுகளை நனவுகளாக்க ஒரு லெனின் கிடைத்ததுபோல பெரியாரின் கனவுகளை நனவுகளாக்கஒருஅண்ணா பிறந்தார்

சமத்துவம், சகோதரத்துவம் என்ற இறுதி இலக்குகளை அடைய இன்னும்நெடுந்தூரம் பயணம் செய்யவேண்டி இருக்கும்போது —

அண்ணாவையும் இழந்தோம்!

கண்ணுக்கெட்டிய தூரம் வரை தமிழர் எதிர்காலம் இருள்மயமானபோது—

ஒளிவிளக்கேற்றித்தமிழரை வழிநடத்திச் செல்ல வந்தார் கலைஞர்.

போகுமிடம் வெகுதூரம் என்றாலும்கருஞ்சட்டைகளின் கண்ணீர்த்துளிகளின் — துணையோடு சோசலிசம் எனும் இறுதிக் குறிக்கோளை எய்துவர் தமிழர்.



திராவிட இயக்கத்திற்கு அடிக்கல் நாட்டிய தந்தை பெரியாரின் நூற்றாண்டு விழாவையும் அந்த இயக்கத்திலிருந்துகழகத்தைஏற்படுத்திய பேறிஞர் அண்ணா அவர்களின் பிறந்தநாள் விழாவையும் இந்த இரண்டையும் இன்றைக்கு தமிழ்ச்சமுதாயத்திற்கு வழிகாட்டிக் கொண்டிருக்கும் திராவிட முன்னேற்ற கழகத்தின் ஆண்டு விழாவையும் சேர்த்து முப்பெரும் விழாவாகக்கொண்டாடும் தமிழ் மக்களுக்கு எங்களது நிறுவனத்தின் சார்பில் விழா சிறப்பு அடைய விழாக் குழுவினருக்கு இதயம் கனிந்த நல்வாழ்த்துக்களை வழங்குகிறோம்.

★★★
★★
★

சுலபத் தவணை முறையில், உங்களது இல்லங்களுக்கு
பொருட்கள் பெற்றிட சிறந்த ஸ்தாபனம்.

எம். கே. டிரேடர்ஸ்,

41, ரங்கராஜபுரம் ரோடு, சென்னை-24

கிளைகள் : மாம்பலம், அடையாறு.

அறிவையெல்லாம் தேக்கிவைத்த
வெற்றி எங்கே?
அழகுநகை சிந்துகின்ற இதழ்களெங்கே?
இருள்திரையைக் கிழித்தொளிரும்
விழிகளெங்கே?
இனியமொழி சொல்லுகின்ற நாவுமெங்கே?
கருணையுடன் அரவணைக்கும் கைகளெங்கே?
கடும்பயணம் நடத்திநின்ற கால்களெங்கே?
பெருமையெல்லாம் எமக்களித்த ஐயா உன்றன்
பொன்னுடலம் காண்பதினி எங்கே? எங்கே?

(வேறு)

அறிவில் ஆதவன்

'வயதில் அறிவில் பெரியார்—நாட்டின்
வாய்மைப் போருக்கு என்றும் இளையார்"
தந்தை பெரியார் (வயதில்...
அறியார் இவரை அறியார் — தேர்ந்து
அடைவார் புகழ்மிக அடைவார்
அறிவில் லாதவர் வெறுப்பார் — இவர்
அறிவில் ஆதவன் அறிவார் மகிழ்வார்
(வயதில்...
மேனியில் கறுப்பு உடையார்—அந்த
மனதுக்குள் தங்கம் உடையார்
தேனியெனச் செயல்புரிவார்—அவர்
சேவையை எதிர்ப்போர் ஒன்றுமே புரியார்
(வயதில்...
பார்ப்பாரை ஒருகை பார்ப்பார்—தமிழ்ப்
பகையாய் அதைஉடன் காப்பார்
பாருக்குள் இவருக்கு இணையார்?—நம்
பரம்பரைக் கொருவர் தலைவர் பெரியார்
வயதில்...

(வேறு)

தோற்றம்

தோன்றிற் புகழோடு தோன்றினார்—தாய்
ஈன்ற பேறுபெறத் தோன்றினார்
—பெரியார் (தோன்றிற்...
கொங்கு மண்டலம் கோவை மாநகர்
அங்கு உள்ளது ஈரோடு — அதில்
தங்க மனம்கொண்ட வேங்கடப்பரும்
வாழ்ந்தார் முத்தம்மை யாரோடு
ஆண்டு பலவாக பிள்ளையில்லையென
அவரும் இல்லாளும் ஏங்கினார்
தோன்றின் புகழோடு தோன்றவேண்டுமென
ராமசாமி அங்கு தோன்றினார்
எங்கள் ஐயா தோன்றினார் — அறிவு
ஞாயிறாகவே தோன்றினார்...
(வேறு)

கள்ள மறியாது கவலையுமறியாது
பிள்ளை வளர்ந்தான் வீட்டிலே
பள்ளி சென்றாலும் கல்வி செல்லாது
துள்ளித் திரிந்தான் போக்கிலே
குடும்பம் வைதீகம் பேசும் அதிவேகம்
குழந்தை காட்டினான் புதுவேகம்
அரும்பும் வயதிலவன் அறிவுத்திறம் கண்டு
அறிந்து போற்றினர் பலபேரும்...

நாட்டுப்பற்று

நாட்டுப் பற்றில் மிக
நாட்டம் கொண்டு பகை
ஓட்ட வந்தார் பணியிலே—சுழல்
ராட்டை ஏந்தி கதர்
மூட்டை தூக்கிஉணர்
வூட்டி நின்றார் அவர் இடையிலே...
காந்தி வழிநின்று
கள்ளுக் கடை மறியல்
கலந்து சிறைக்கோட்டம் சென்றார்—புவி
மாந்தர் ஒன்றென்ற
மார்க்கம் தனைக்காட்டி
வைக்கம் வீரரென வென்றார்!

சாதி மத பேதம்
சாத்திரப் பழமையைச்
சாய்த்திட எழுந்தார் பெரியார்—பல
சாதனை செய்தார்
வேதனை தீர்த்தார்
சரித்திரமானார் பெரியார்

(வேறு)

நாட்டிய புதுமை

சிந்தனைச் செல்வம் சீர்திருத்தச் செம்மல்
தந்தை பெரியார்
பந்தயம் வைத்தால் பாருள்ள அறிஞர்க்கும்
தந்தை பெரியார்...
திருமண முறையில் தமிழ்மண முறையாய்
சீர்திருத்த மணம் கண்டார்
இருமனம் கலந்தால மதமென்ன சாதி
கலப்பு மணம் வேண்டுமென்றார்...
ஆயிரம் சாதி ஆயிரம் கடவுள்
அபத்தமானதெனச் சொன்னார்
ஆண்டவன் பிள்ளை மக்களென்றால் அவர்
அனைவரும் சமத்துவம் என்றார்...
குருட்டு நம்பிக்கை விரட்டுவதற்கே
'குடியரசு' இதழைக் கண்டார்
மருட்டும் ஆரியம் மருள 'பகுத்தறிவு'
விடுதலை ஏட்டைத் தந்தார்...
நீதிக் கட்சி பண ஜாதிக் கட்சியென
நிலையில் மாற்றமதைச் செய்தார்
நாதியற்றவரை வாழவைக்கும் இனித்
திராவிடர் கழகம் என்றார்...
(வேறு)

பெரியார் வழியில்

தந்தை நம் பெரியார்
தத்துவ வழியில்
தளபதி அண்ணா வந்தார்
செந்தமிழ் அரசே
தந்தைக்குக் காணிக்கை
தந்தோம் என்றவர் சொன்னார்
தந்தையின் ஆசை
அண்ணனின் ஆணை
சட்டமாக்கினார் கலைஞர்
கலைஞரின் ஆட்சி
பகுத்தறிவாட்சி
காப்போம் என்றார் பெரியார்...
(வேறு)

காலம் கவர்ந்தது!
ஞாலம் கலங்குது!

காலம் வென்ற பொற்காலத் தலைவனைக்
காலம் கவர்ந்ததம்மா—இந்த
ஞாலம் முழுவதும் நல்லறிவாளனை—
நினைந்தே கலங்குதம்மா...
திருநாள் இழந்த தேர்போலானோம்
வருவாயா ஐயா — நீ
வரும்நாள் வரையும் இருளே மண்ணில்
வருவாயா ஐயா.
(வேறு)

மீண்டும் வரவேண்டும்!

எங்கள் வானச் சூரியனே நீ
மீண்டும் வரவேண்டும்!
இங்குள மக்கள் ஏற்றம்பெறவே
மீண்டும் வரவேண்டும்?
மங்கிய மானம் பொங்கி எழுந்திட
மீண்டும் வரவேண்டும்!
எங்கள் குலத்து நாயகனே நீ
மீண்டும் வரவேண்டும்
மீண்டும் வரவேண்டும்!

காஞ்சியின் பெருமை!

★ 'பொதுமறை' என்னும் போற்றற்குரிய வாழ்க்கைச் சட்டப் புத்தகம் என்றும் பாராட்டப்படும் நூலாம் 'திருக்குறளு'க்கு உரை எழுதிய பதின்மரில் ஒருவராம் பரிமேலழகர் தோன்றிய பெருமை காஞ்சி நகருக்கு உண்டு.

★ சிறந்த இராசதந்திரியான 'அர்த்த சாஸ்திரத்'தை எழுதிய சாணக்கியர் பிறந்ததும் காஞ்சியில்தான்!

★ புத்தசமய வளர்ச்சிக்குப் புத்துயிர் ஊட்டிய சிற்பக் கலை சிறந்தோங்கச் செய்த பல்லவ மன்னர்களின் தலைநகரமும் காஞ்சியேயாகும்.

★ புத்தமதக் கொள்கைகளைப் பரப்பியவரும்—கல்வியில் சிறந்தவருமான தின்னாகர். இசைத் துறையில் ஓங்கு புகழ் பெற்ற திரு நாயனாப்பிள்ளை ஆகியோர் பிறந்ததும் காஞ்சியில்தான்!

★ இந்தியாவிற்கு வருகை புரிந்த சீனப்பயணி 'யுவான் சுவாங்' என்ற சான்றோர் தங்கி இருந்த இடமும் காஞ்சிபுரமாகும்.

★ சமுதாயத்துறையில் வடக்கே 'வாரணாசி' என்றால், தெற்கே காஞ்சியாகும். பத்தினி மகளாம் மணிமேகலை, அமுதசுரபி ஏந்திப் பசிப்பிணி போக்கிய பெருமைக்குரிய இடம் காஞ்சி நகர்தான்!

★ சமுதாய சீர்திருத்த இயக்கமாக ஒரு கட்சியைத் தொடங்கி—எட்டாண்டுக்காலம் இலட்சோப இலட்ச மக்களின் இதயங்களில் குடியேறி—மக்கள்வாழ்க்கை முறைகளை வலியுறுத்தி—பிறகு அரசியலிலே பங்கு கொண்டு—பத்தாண்டு காலம் மக்களின் எண்ணங்களையும் எழுச்சிகளையும் எதிரொலிக்கிற வகையில் நல்ல எதிர்க்கட்சியாக, நாடாள்வோர்க்கு நல்ல பல ஆலோசனை நல்கி—பிறகு மக்களின் ஒருமித்த ஆதரவால் ஆளுங்கட்சியாக மாறி—ஒரு கட்சி தொடங்கி பதினெட்டு ஆண்டுக் காலத்தில் ஒரு மாநிலத்தில் ஆளும் கட்சியாக மாறிய ஒரு வரலாற்றை உலகுக்குக் காட்டிய தானைத் தலைவன்—தமிழ் காத்த வீரன்—தமிழகத்தின் நாடி நரம்பாய்—மூச்சாய் ஏன்—பல கோடி மக்களுக்குப் பார்வை—பேச்சு—செயல்—திறமை இவ்வளவையும் உண்டாக்கிய தமிழ்த்தாயின் தலைமகனும்—தலைவனும் நமதுடைய அண்ணனைப் பெற்றெடுத்த புண்ணிய பூமிதான் காஞ்சி நகரம்!

ஜி. எஸ்.

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

என்று எதையும் கருதாது ஆனால் தமது கொள்கையை மறவாது கருதிச் செயலாக்கி வெற்றியும்; மாற்றாரையும் திருத்திடும் பெற்றியும் நிறைந்தவர் அறிஞர் அண்ணா அவர்கள்.

அறிஞர் கண்ட தி. மு. கழகத்தின் தோற்ற விழாவும் கலந்து வருகிறது.

அதுமட்டுமா? தன்மான இயக்கத்தின் தாய் நான் என்று பெருமைப்படும் தமிழ் ஞானி திரு.வி.க.வின் நினைவு நாளும் ஒன்று சேர்கிறது.

தந்தை பெரியார் பிறந்த நாள்!

அறிஞர் அண்ணா தோன்றிய நாள்!

திராவிட முன்னேற்றக் கழகம் முகிழ்த்த நாள்!

தந்தை பெரியாரின் நூற்றாண்டு நாள்

தமிழ்ஞானி திரு. வி. க. நினைவுநாள்!

இப்படி மணக்கும் மல்லிகையுடன் சம்பங்கி, இச்சிப்பூ. என்று மணக்கும் மலர்களைக் கொண்டே தொடுத்த மாலை போல் மணக்கும் காலம்!

காலம் மறப்பதும்; காலத்தின் கோலத்தால் தாழ்ந்தவனை — எடுபிடியாக தனது தாய்த் தரணியில் வீழ்ந்து கிடந்த தமிழன் தலைநிமிர்ந்து உரிமைபெற்ற காலம் வந்தது. ! ஆனால்...!

ஐயகோ! இந்த 'ஆனால் வரக்கூடாது. வாழ்க்கையில்.. ஆயினும் அந்தத் தமிழ்ச் சமுதாயத்தில் வருகிறதே! மறுபடியும் தேங்கி நிற்கிற தாழ்ந்துபோகத்தக்க செயல்களை அறியாமையால் செய்துவிட்டு இப்போது அனுபவித்துக்கொண்டிருக்கிறான்.

இத்துடனாவது விழிப்புற்றுத் தன்னைக்காத்து தனது மரபுகளைப் பேணி சந்ததியர்களின் வாழ்வு பாதிக்கப்படாமலும் மறுபடியும் சமுதாயத்தின் கீழ்நிலைக்கு உரியவர்களாக ஆக்கப்படாமலும் விழிப்புடன் செயல்பட வேண்டும் தமிழ்ச்சமுதாயம்!

இந்த விழிப்பில்அரசியலல்ல முக்கியமா?இனஉணர்ச்சிதான் முக்கியம் மறந்துவிட வேண்டாம.

மறந்துவிட்டால் மற்றுமொரு தந்தை பெரியார் அறிஞர் அண்ணா தோன்றினால்தான் வாழ்வு மலரும்!

தந்தை பெரியாரைப் போன்றவர்கள் அறிஞர் அண்ணாவைப் போன்றவர்கள் குறிஞ்சி மலரல்ல பத்தாண்டில் மலர்ந்திட நூறாண்டுகள் ஆகலாம்—

நூற்றாண்டில்நினைவுகொள்ளுவோம மற்றுமொரு நூறு ஆண்டு கடந்தும் தவிக்கும் சமுதாயமாக ஆகாமல் விழித்தோம — விழிப்பூட்டிய தந்தை பெரியார் அறிஞர் அண்ணா காட்டிய நெறியில் விழிப்புடன் நடைபோடுவோம் சிறுமைமறப்போம—செம்மை செயலில் ஈடுபடுவோம. தலை நிமிர்ந்தே வாழ்வோம—என்ற சூளுரைத்திட வேண்டு கிறேன்.

இந்த வேண்டுகோளைச் செயல்படுத்துவது உடனடியாகத் தேவையானது என்றும் மறக்கக் கூடாது.

அய்யாவின் புகழ் பாடுவோம்!

அண்ணாவின் வழி நடப்போம்!

செப்டம்பர் திங்கள் தமிழர்களுக்குத் தகுதி மிக்க திங்களாகும். உலகில் எங்கெங்கே தமிழ் மக்கள் வாழ்கிறார்களோ அங்கெல்லாம் மகிழ்ச்சி பொங்கிட விழா நடத்திடத்தக்க சிறப்பு மிக்க திங்களாகும். மேலும் இந்த ஆண்டு செப்டம்பர் திங்கள், தந்தை பெரியாரின் நூற்றாண்டு விழா. தங்கம் நிகர் தமிழர்களின் அங்கமெலாம் பூரித்து மகிழும் பொன்னாள் அன்றோ

ஏற்றத்தாழ்வு எங்கெங்கே இருக்கிறதோ, எங்கே இழிவு தலை தூக்குகிறதோ, எங்கே ஆண்டான் அடிமை நிலைமை இருக்கிறதோ, எங்கே ஏதேச்சதிகாரம் தலைதூக்குகிறதோ அங்கெல்லாம் அவர்களுக்காக வாதாடிய வழக்காடிய போற்றுதற்குரிய பெரியார்—தாழ்த்தப்பட்ட மக்களின் ஏகப்பிரதிநிதி, தன்னுடைய அறுபது ஆண்டுக் கால கடுமையான உழைப்பிற்குப் பின்னாலே நீண்ட ஓய்வு பெற்றவர்,

அறுபது ஆண்டுக்கால உழைப்பிற்குப் பின்னாலேயும், இன்னும் இருபது ஆண்டுக் காலம்இருக்கக்கூடாதா என்று ஏங்குகிற லட்சோப லட்ச தமிழ் நெஞ்சங்களைப் பெற்ற பெருந்தகை.

விதி விதி என்று நம் இனத்தின் விலா எலும்பை முறிக்க முனைந்த வேதாந்தக் கூட்டத்தையும், மதம் மதம் என்று மனிதனை மனிதனாக்காது மாக்களாக்கிய மதோன்மத்தக் கூட்டத்தையும், சாதி சாதி என்று ஒன்றில் வாழ்ந்த தமிழினத்தைஉருக்குலைத்தஊதாரிக் கூட்டத்தையும், வாழ்வாவது மாயம் மண்ணாவது திண்ணம் என்று கஞ்சா போதையிலே கூறிடும் கூட்டத்தையும் முறியடித்திட. வருணாசிரம வலைவுகளையும், மூடப்பழக்கவழக்கமெனும் முட்புதர்களையும், குருட்டு நம்பிக்கை எனும் கொடுங் கள்ளிகளையும் அகற்றிடத்தந்தை பெரியார் அவர்கள் எடுத்துக்கொண்டமுயற்சிகள் ஏற்றுக்கொண்டதொல்லைகள் கொஞ்சநஞ்சமல்ல. ஜாதியின் பெயரால், மதத்தின் பெயரால், கடவுளின் பெயரால் ஏழைகளுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளிலிருந்தும் நீக்கிடத் தாம் நடத்திக் காட்டிய போராட்டங்கள் ஒன்றா இரண்டா?

சுற்றுப் பயணத்தைத் தொடர்ந்து நடத்தி மக்களை நேரடியாகச் சந்தித்து பல மணிநேரம் பேசி தன்னுடைய நீண்ட பயணத்தை முடித்தார். அந்தத்தியாகசீலர் பிறந்தது செப்டம்பர் திங்கள் பதினேழாம் நாள்தான். அந்த கொள்கைகோபுரத்துக்கு நூற்றாண்டு விழா. தந்தை பெரியாரின் பள்ளியிலே பாடம் தொடங்கி, அவருடைய பாசறையிலே தொண்டனாக தளபதியாக பொறுப்பேற்று பெரியாரின் கொள்கைகளை இதயத்திலே ஏந்தி, இரத்த அணுக்களோடுஇணைத்துபட்டிதொட்டி நாடுநகரம் முழுவதும் பரப்பி தமிழன் என்றோர் இனமுண்டு தனியே அவனுக்கோர் குணமுண்டு என்று இந்தியாவுக்கு உலகத்துக்கு அறிவித்த பெருமை பேரறிஞர் அண்ணாவைச் சாரும்.

தந்தை பெரியார் அவர்களின் பிரச்சாரம் நுழைய முடியாத இடத்திலெல்லாம் அண்ணா அவர்கள்தன்னுடைய ஆற்றலால் கோட்டையில்—கொலுமண்டபத்தில் — ஆலயங்களில் — அங்காடிகளில்—மேட்டுக்குடிகளில் — மேதாவிலாசங்களிலெல்லாம்புகவிட்டார். குறளை குற்றமிலா மணிமேகலையை, சிலம்பை, கலிங்கத்துப் பரணியை ஒரு பக்கம் பணக்காரர்களின் மிரட்டல் மறு பக்கம் பக்தர்களின் எரிச்சல், பிறிதோர் பக்கம் ஆட்சியாளர்களின்அதிகாரகர்ச்சனை, எந்த சமுகத்தின் மேம்பாட்டுக்காக உழைத்தாரோ அந்த சமுகத்தாரில் சிலரே கூட, விபரம் அறியாமல் எதிர்த்திட்ட நிலை—இன்னல்கொடுத்திட்ட போக்கு, அத்தனையும் பொருட்படுத்தாமல் தொடர்ந்து ஏற்ற பணியை முடித்தே தீருவேன் என்ற உறுதியோடு உறக்கமின்றி ஓய்வின்றி உழைத்து தாழ்ந்த தமிழகத்தைதலைநிமிர்த்தத்தன்னை முழுமையாக ஒப்படைத்தார்.

நெய்வேலி

ஜி. சுட்பிரமணியன்

வீட்டிலே இருந்து கொண்டே கொள்கை வளர்ப்பவர்கள், சாய்வுநாற்காலியில் சாய்ந்து கொண்டே பத்திரிகைக்குத்தலையங்கம்எழுதிஅறிவுரை வழங்குபவர்கள், வீட்டோடு முடங்கிக் கொள்கை உபதேசம் செய்பவர்கள், இரண்டு மூன்றாண்டுக்கு ஒரு முறை மக்களுக்கு தரிசனம் காட்டி கீதா உபதேசம் செய்பவர்கள் மலிந்திட்ட இந்தநாட்டில், தந்தை பெரியார் அவர்கள் தள்ளாத வயதிலும் கல் முள் என்றும் பாராமல், கல்லடிக்கும் சொல்லடிக்கும் பயப்படாமல் தன்னுடைய அகத்தை புறத்தை, சேரனை, செங்குட்டுவனை, சோழனை, பாண்டியனை, கனகவிசயன் தலை மீது கல் சுமத்திபத்தினித் தெய்வத்துக்கு சிலை அமைத்த வரலாற்றை, இமயத்தில் கொடி பொறித்த வீரத்தை—விவேகத்தை கடல் கடந்து, வாணிபம் நடத்திய பெருமையை, கடாரம் கொண்டதை, கன்னித்தமிழின் இனிமையை நாட்டு மக்களுக்குச் சொல்லித்தமிழனை தரணி அறியச் செய்தவர் அண்ணா. அந்த அண்ணன் பிறந்தது செப்டம்பர் திங்கள் பதினைந்தாம் நாள்தான்.

தந்தை பெரியாரின்கொள்கையை மேலும்தீவிரமாக்கிட, ஆண்டான் அடிமை நிலை ஒழிந்திட, எல்லார்க்கும் எல்லாம் என்ற நிலை வந்திட,



ஏழை சொல் அம்பலமேறுகிற காலம் மலர்ந்திட, அன்னை மொழி தமிழை அரியணையில் அமைத்திட, சமுதாயத்தில் சமத்துவத்தையும் பொருளாதாரத்தில் சமதர்மத்தையும், அரசியலிலே சனநாயகத்தையும் தோற்றுவித்திட ஓர் இயக்கத்தை தோற்றுவித்து, அந்த இயக்கம் எட்டாண்டு காலம் சமுதாய சீர்திருத்த இயக்கமாக இயங்கி பகுத்தறிவுக் கொள்கைகளை நாட்டிலே பரப்பி நாடு மொழி இனம் இவைகளை நாட்டு மக்களுக்கு உணர்த்தி, மாற்றானுக்கு அடிமைகளாய் புழு பூச்சிகளாய் புன்மைத்தேரைகளாய் ஒடுக்கப்பட்டு அமுக்கப்பட்டு தாழ்த்தப்பட்டு தவித்த ஒரு சமுதாயத்தை, இந்த மண்ணுக்குச் சொந்தக்காரன் என்பதையும், இந்த மொழிக்கு உரிமை உள்ளவன் என்பதையும் அவனுடைய உரிமைகள் அத்தனையும் சொல்லி, 'இது உன்னுடைய அன்னை பூமி' இந்த மொழிதான் உன் முன்னோரால் போற்றிப்போந்த மொழி, இவைகளெல்லாம் நீ பெற்ற வெற்றிகள்—வென்றிற்றநாடுகள்என்று உணர்த்தி அந்த மக்களின் தேவைகளை மக்கள் மன்றத்திலே குரல் கொடுத்திட மக்கள் ஆதரவோடு பத்தாண்டுக் காலம் தகுதிமிக்க எதிர்க்கட்சியாக இயங்கி, ஆள்வோரின் அலட்சியத்தை—அராசகத்தை கண்டித்து அரசைநெறிவழிப்படுத்தியதற்குப் பின்னாலே மக்களின் ஏகோபித்த ஆதரவால் தமிழ் மாநிலத்தை ஆளுகிற பொறுப்பினை ஏற்று நாட்டிற்கேற்ற நல்ல பல திட்டங்களைத் தீட்டி அவைகளெல்லாம் சமுதாயத்தின் அடித்தள மக்களுக்குச்சேருகிற வகையில் பொற்காலம் சமைத்திட்டது. ஒன்பதாண்டு காலம் ஆட்சிப் பொறுப்பிலே இருந்து ஏழை எளிய மக்களுக்கு வாழ்வளிக்க எண்ணற்ற சாதனைகள் செய்திட்ட திராவிட முன்னேற்றக் கழகம் தோற்றுவிக்கப்பட்ட நாள் செப்டம்பர் திங்கள் பதினேழாம் நாள்தான்,

தந்தை பெரியாரின்கொள்கைகளை, அவர் வழி நடந்த அண்ணா அவர்களின் இலட்சியங்களை, பெரியார் பேரறிஞர் அண்ணா தந்திட்ட கொள்கைகளைதன்னகத்தேகொண்ட திராவிட முன்னேற்றக் கழகத்தின் பணியினையும், அந்த கழகத்தை சிந்தாமல் சிதறாமல் காத்து வருகின்ற கலைஞர் அவர்களின் உழைப்பினையும நாட்டு மக்களிடத்தே விளக்கிடும் ஒப்பற்ற ஏடாம் நம்முடைய கழக ஏடு 'நம்நாடு' அந்த கிழமை ஏட்டிற்கு ஓராண்டு நிறைவு.

★ வீழ்ந்துபட்ட தமிழினத்தை விழிக்கச் செய்தவர் தந்தை பெரியார்

★ விழுந்து எழுந்த தமிழ் மக்களுக்கு பார்வை, பேச்சு, செயல், திறமை இவ்வளவையும் உண்டாக்கி அவர்களின் நாடிநரம்பாய் மூச்சாய் விளங்கியவர் அண்ணா!

★ கழகத்தின் கொள்கைகளை, கழகம் அரசோச்சிய நேரத்தில் செய்திட்ட சாதனைகளை, கழகத் தலைவர்கள்நாட்டு மக்களின் நலிவுநீங்க எடுத்துக் கொண்ட பணியினை விளக்கிடும ஏடாம்'நம்நாடு' தெள்ளு தமிழ் ஏடு!

அறுபது ஆண்டுக் காலம் ஓடி ஓடி உழைத்த பகுத்தறிவுச் சிங்கம் தந்தை பெரியார்!

அண்டை நாடெல்லாம் புகழஆட்சிசெய்தவர்அண்ணா. அமெரிக்க மண்ணிலே குறள் வகுப்பு நடத்தியவர் அண்ணா; அண்ணன் தம்பி என்ற பாசத்தை வளர்த்தவர் அண்ணா; அண்ணன் தொடங்கிய 'கழகம்' அரசோச்சிய ஒன்பது ஆண்டுக் காலம தமிழர்களின் பொற்காலம்! தமிழன் மானங்காக்க வழக்காடும் வாதாடும ஒப்பற்ற ஏடு 'நம்நாடு'

பெரியாரின், பேரறிஞர் அண்ணாவின் இலட்சியங்களை கொள்கை முழக்கங்களை கொண்ட கழகத்தை, இன்றைக்குக் கட்டிக்காத்து, எத்துணை இடர் வரினும் இன்னல் பல தாக்கிடினும் இழிமொழிகள் பழிச்சொற்கள் ஏளனங்கள் வந்திடினும அத்தனையும் தாங்கிக்கொண்டு வெற்றி நடைபோடும கலைஞரின் உத்திரவுக்கு காத்திருப்போம்!

நாடு காக்கும் போரானாலும் மொழிகாக்கும் வேள்வியானாலும மானங்காக்க மறவர் இன எழுச்சியானாலும் இன்னுயிரை ஈவோம் என உறுதி ஏற்போம்! மாநில சுயாட்சி—மத்தியில் கூட்டாட்சிஇந்தித்திணிப்பை என்றும் எதிர்ப்போம் எனும் தத்துவம் வெற்றிபெற உழைத்திடுவோம்!

பெரியாரின் புகழ் பாடுவோம்! பேரறிஞர் அண்ணாவின்வழிநடப்போம்! பெருமை மிகு கழகத்தைக் காப்போம்! வளர்ப்போம்!